janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakththolaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakththolaikatchi




புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 செப்டம்பர் 11 - 17 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 23




செப்டம்பர் திங்களின் **தியாகச் சுடர்**

அடுத்தடுத்த பணிகள் நம்மை எதிர் நோக்கியுள்ளன. ஓய்வின்றி ஓடுவதும், முனைப்பாக செயலில் ஈடுபடுவதும் >>>


ப 02



முதலிடத்திற்கான முயற்சியில் **மோடி!**

ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள்! என்கிறார் அவ்வை மூதாட்டியார். ஆனால், இந்தியாவிலோ ஒரு மாளிகை எழ ஓராயிரம் >>>

ப 03



கவர்னர் **தமிழ்படிப்பது** நல்லது

அண்மையில் டெல்லியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட தமிழக ஆளுநர் ஆர் என் ரவி அவர்கள் திருக்குறளைப் >>>

ப 07




### கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தலைவர் மு.வீரபாண்டியன் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்த சமூக விரோதிகள் முயற்சி

# குற்றவாளிகளை கைது செய்!

## மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தலைவர் மு.வீரபாண்டியன் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்த சமூக விரோதிகள் முயற்சி செய்தனர். இந்த சமூக விரோதிகளை கைது செய்யக் கோரி தமிழகம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**

**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டியில் மு.வீரபாண்டியன் மீதான கொலை முயற்சியைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கலந்துகொண்டு கண்டன உரை நிகழ்த்தினார். கட்சியின் மாநில குழு உறுப்பினர்கள் கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., அ.பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம். வையாபுரி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பி..வி.சந்திரராமன், கே.ஆர்.ஜோசப், கே.ராஜா, வி.ஜவஹர் ஒன்றிய செயலாளர், டி.பி. சுந்தர் நகர செயலாளர் மற்றும் கட்சியின் மாவட்ட ஒன்றிய, நகர தலைவர்கள், தோழர்கள் கலந்துகொண்டு குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்கிட வேண்டும் என முழக்கமிட்டனர்.



**வடசென்னை:** சென்னை வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகரில் வடசென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் மு.வீரபாண்டியன் கண்டன உரையாற்றினார். பெரம்பூர் தொகுதி செயலாளர் கோட்டி சுரேஷ், முன்னாள் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, முன்னாள் மாவட்ட துணை செயலாளர் எம்.வசந்தகுமார் மற்றும் நூறுக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**திருவாரூர் :** திருவாரூர் பழைய பேருந்து அருகில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தர்மதாஸ், செல்வம், நாகராஜன், புலிகேசி, பார்த்திபன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி 06ம் பக்கம் >>

## சமூக விரோதிகளை உடனடியாக கைது செய்க!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினரும், முன்னணி தலைவருமான மு. வீரபாண்டியனை கொலை செய்யும் வன்மத்துடன் சமூக விரோதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். வியாசர்பாடி, தமிழ்நாடு மாநில வாழ்விட மேம்பாட்டு நிறுவனக் குடியிருப்புக்கு எதிரில் உள்ள முல்லை நகரில் மு.வீரபாண்டியன் குடியிருந்து வருகிறார். செப். 04 அன்று மாலை 5.15 மணியளவில் ஒரு திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக, வீட்டை விட்டு வெளியே வந்து, ஸ்ரீ சாய் குடியிருப்பு, 4வது தெருவில் நடந்து சென்ற போது சமூக விரோதிகள் மூன்று பேர், கத்தி, இரும்புத்தடி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். அந்தத் தருணத்தில் மு.வீரபாண்டியனின் சமயோசித தடுப்பு நடவடிக்கையாலும், அக்கம், பக்கம் உள்ளவர்கள் ஓடி வந்த காரணத்தாலும் சமூக விரோதிகள் தப்பியோடியுள்ளனர்.

வியாசர்பாடி மக்களின் நன்மதிப்பை பெற்றவரும், தமிழ்நாட்டின் உழைக்கும் மக்களுக்கும், குறிப்பாக ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமைக்கு போராடி வருபவருமான மு. வீரபாண்டியன், நாற்பது ஆண்டுகால பொது வாழ்க்கையில் உள்ள அரசியல் தலைவர். அறிவியல் சார்ந்த பகுத்தறிவுக் கொள்கை நெறியில் வாழ்ந்து வருபவர். இவர் மீது தாக்குதல் முயற்சியில் ஈடுபட்ட சமூக விரோதிகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக மகாகவி பாரதியார் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. கோழைத் தனமான தாக்குதலில் ஈடுபட்ட சமூக விரோதிகளை, தமிழ்நாடு காவல்துறை விரைந்து கைது செய்து, அவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடாமல் தண்டிக்கும் வகையில் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். சமூக விரோத சக்திகளை தமிழ்நாடு அரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜாவுடன் பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் சந்திப்பு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜாவை புது டெல்லியில் உள்ள கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் 06.09.2022 அன்று சந்தித்து அரசியல் நிலவரம் குறித்து விவாதித்தார். அது குறித்து கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி யிருப்பது பின்வருமாறு:

2024 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தேசிய அளவில் பா.ஜ.க வை முறியடித்திட, அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளை அணிதிரட்டுவதில் பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு அதன் முழு ஆதரவைத் தெரிவிக்கிறது. பா.ஜ.க உடனான கூட்டணியை முறித்துக் கொண்ட



பிறகு, காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம் மற்றும் இடதுசாரி கட்சிகள் இடம்பெற்றுள்ள மகா கூட்டணியில் அவர் இணைந்துள்ளார்.

இக்கூட்டணியில் இணைந்த பிறகு, முதல் முறையாக புது டெல்லிக்கு வந்துள்ள அவர், பல்வேறு தேசிய கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து வருகிறார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் பொதுச் செயலாளர் டி. ராஜாவைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய இருவரும், தேசத்தின் எதிர்காலம் மற்றும் நலன் கருதி பா.ஜ.கவைத் தேர்தலில் முறியடிக்க வேண்டியதே தற்போதைய அரசியல் தேவை என்று கூறினர். 2024 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பா.ஜ.க வை முறியடித்திட, பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு டி. ராஜா தனது முழு ஆதரவைத் தெரி வித்துள்ளார்.

இவ்வாறு கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




# செப்டம்பர் திங்களின் தியாகச் சுடர்

**பேரன்புமிக்க தோழர்களே!**

**அடுத்தடுத்த பணிகள் நம்மை எதிர் நோக்கியுள்ளன. ஓய்வின்றி ஓடுவதும், முனைப்பாக செயலில் ஈடுபடுவதும் அவசியமாகும்.**

முத்திரை பதித்திட்ட மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்திட்ட பெருமிதத்துடன், மாநாடு விடுத்த அறை கூவலை ஏற்று, பாஜக ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளில் விலைவாசி தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தாங்க முடியாத அளவிற்கு செலவுச்சுமை உயர்ந்து வருவதை கண்டித்தும் மாநிலம் தழுவிய மறியல் அறப் போராட்டத்தை மிக வெற்றிகரமாக நடத்தியுள்ளோம்.

நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட மையங்களில் தோழர்களும் பெண்களும் இளைஞர்களும் பெரும் எண்ணிக்கையில் ஈடுபட்டு, கைதாகி விடுதலையாகியுள்ளனர்.

ஏழை, எளிய, நடுத்தர மக்கள் தங்களின் துன்ப, துயரங்களை துடைத்தெறிய செங்கொடி இயக்கம் இருக்கின்றது என்ற நம்பிக்கையோடு உள்ளனர்.

போராட்ட செய்திகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப் பப்பட்டது. நாளேடுகளும் படத்துடன் செய்திகளை வெளியிட்டு இருந்தன.

இத்துடன் நமது பணிகள் முடிந்துவிட வில்லை. அடுத்தடுத்து பல்வேறு பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் நம்மிடம் ஏராளமாய் உள்ளன.

நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு பணியும் நமக்கானது மட்டுமல்ல, நமது சுயநலத்திற்கானது அல்ல, அல்லது நாம் நம்மை பெருமைப்படுத்திக் கொள்வதற்கானது அல்ல.

மாறாக நாடு முழுமையும் வாழ்கின்ற கோடிக் கணக்கான மக்களின் நலன் சார்ந்தது. மக்கள் நலன் ஒன்றைத் தவிர்த்து, நமக்கு சுயநலம் என்பது கிஞ் சிற்றும் கிடையாது.

நமது நாட்டு மக்களின் வாழ்க்கையில் எத்தகைய துன்பம், துயரம் நிறைந்து கிடக்கிறது. அவைகளை நம் வாழ்நாளில் ஒவ்வொரு நிமிடமும் நித்தம் நித்தம் அனுபவித்து வருகின்றோம்.

சற்று பின்னோக்கி பார்ப்போம். வெள்ளையர்கள் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று நம்மவர்கள் ஆட்சி அமைந்து எழுபது ஆண்டுகளை கடந்து விட்டோம்.

இக்காலங்களில் தமிழகத்தில் உள்ள சிறு, குறு, நடுத்தர விவசாயிகளின் நிலமை என்ன?

கோயில், மடம், சத்திரங்கள், நிலப்பிரபுக்கள் இவர் களின் நிலங்களில் குத்தகை சாகுபடி செய்து வந்த விவசாயிகளின் வாழ்க்கை எவ்வாறு இருந்தது?

கிராமங்கள் முழுவதும் நிறைந்திருந்த விவசாயத் தொழிலாளர்களின் நிலைகள் எவ்வாறு இருந்தன?

அன்றைய நிலமைகளுக்கும் இன்று நம்முடைய காலத்திற்கும் வேறுபாடுகள் உண்டா? இல்லையா?

மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன? தன்னெழுச்சியாக மாற்றங்கள் நடைபெற்றனவா? இல்லை மாற்றப்பட்டனவா?

தானாக எதுவும் மாறாது ! மாற்ற வேண்டும் அதற்கான முன் முயற்சி வேண்டும். மக்களிடத்தில் தங்களுக்கான துன்ப துயரங்கள் ஏற்படுவதற்கான உரிய காரணங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தல் வேண்டும்.

அத்தகைய பணிகளை ஏற்படுத்துவது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல கடினமான மிகக் கடினமான பணியாகும். அத்தகைய பணிகளை மேற் கொள்ள முன்வருபவர்களுக்கு கொள்கை பலம் இருக்க வேண்டும்.

கொள்கை மட்டும் இருந்துவிட்டால் போதுமானதல்ல அதில் ஒரு தெளிவு இருக்க வேண்டும். அதனை செயல்படுத்திட உண்மையான ஆர்வமும் உணர்வு பூர்வமான செயல்பாடும் அமைய வேண்டும்.

அத்தகையவர்களே மக்களின் வாழ்க்கையை புரிந்து கொள்ள முடியும்.

அதனை தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் அறிய முடியும். அதனை செம்மையாக அறிந்தால் சந்திக்கவும் முடியும் !

அத்தகைய சாதனைகளை செய்து காட்டிய மகத்தான மனிதர்கள் பலர். அதில் தலைசிறந்த தோழர் பி.எஸ். ஆர். என்கிற மகத்தான மனிதர்.

மக்களுக்கு சேவை செய்திட எங்கு பிறந்தோம் வளர்ந்தோம் என்பது ஒரு பிரச்சனையல்ல.

நாடு கடந்து, மொழி கடந்து மக்களுக்கு பணியாற்றிட முடியும் என்பதற்கான சான்றுகள் ஏராளம்.

தோழர் பி.எஸ்.ஆர். பிறந்தது, படித்தது, வளர்ந்தது எல்லாம் கன்னட மொழி பேசும் கர்நாடக மாநிலத்தில்.

ஆனால் அவர் விடுதலைப் போராட்டம் களம் இறங் கியது நமது சென்னை மாநகரில்.

அன்னிய பொருட்களை வாங்காதீர், புறக்கணியுங்கள் என்று மகாத்மா விடுத்த வேண்டுகோளை ஏற்று, துணிக் கடைக்கு முன் தினசரி மறியல் செய்தவர் பி.எஸ்.ஆர்.

அன்றாடம் போர்ப்பரணி பாடிய பி.எஸ்.ஆரை வெள் ளையர்களின் காட்டுமிராண்டித்தனமான காக்கிகள் பிஎஸ்ஆரை நையப்புடைத்து, செத்து விட்டார் எனக் கருதி சாக்கடையில் வீசிச் சென்றனர்.

**காக்கிகளின் கூட்டம் அகன்ற பின்னர், ஒரு தாய் யாருக்கும் தெரியாமல் அவரை தூக்கி வந்து தன் வீட்டில் வைத்து, உடல் முழுவதும் படிந்திருந்த சாக் கடை கழிவை சுத்தம் செய்து, வெண்ணீர் ஊற்றி அவரை குளிப்பாட்டி, காயங்களுக்கு மருந்து தடவி, காப்பாற்றினார். செத்து தொலைந்தார் எனக் கருதப்பட்ட பிஎஸ்ஆர் மறுபிறப்பெடுத்து, தன் வாழ்நாள் முழுவதும் மக்களுக்காக உழைத்தார் - உழைத்தார் உழைத்துக் கொண்டே இருந்தார்.**

நாட்டின் விடுதலைக்கு முன்னரும், பின்னரும் மக் களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. வெள்ளையர்களின் கொடி அகற்றப்பட்டு மூவர்ணக் கொடி பறந்தது.

கொடி மாறியது. ஆனால் ! வெள்ளை அதிகாரிகள் அமர்ந்த நாற்காலிகளில் இன்று நம்மவர்கள் அமர்ந்து கொண்டார்கள்.

நாற்காலி அதே நாற்காலி தான் ! ஆள் மாறி அமர்ந் துள்ளார்கள் ஆனால்,

நிலப்பிரபுக்கள் ஜமீன்தார்கள் மடாதிபதிகள் மாற வில்லை அவர்களிடமிருந்த லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களும் அவர்களை விட்டுச் செல்லவில்லை.

கொடி மாறியது,<br>
ஆட்சி மாறியது,<br>
நபர்கள் மாறினார்கள்,<br>
ஆனால் கொடுமைகள் மாறவில்லை !<br>
அனைத்தும் மாறுகின்ற போது,<br>
அதனுடன் சேர்ந்து கொடுமைகளும், மாற வேண்டும்.<br>
கொடுமைகள் மாறவில்லை.<br>
அடக்குமுறை மாறவில்லை,<br>
சமூகக் கொடுமைகள் மாறவில்லை,<br>
சுரண்டல் மாறவில்லை.

நடப்பவை கொடுமை என்று தெரிகின்றது விடுபட வழிதெரியவில்லை !

கண்கள் இருந்தும் குருடர்களாய் காதுகள் இருந் தும் செவிடர்களாய் வாய் இருந்தும் பேச முடியாத ஊமைகளாய் வாழ்ந்த மக்களுக்கு தெரிந்தது எல்லாம் ஒன்றே ஒன்றுதான், அது “தலைவிதி” என்ற ஒன்றைத் தவிர வேரெதுவும் அறியா அப்பாவி மக்களாய் வாழ்ந்த மக்களுக்கு எந்தக் கடவுளும் துணையாய் வரவில்லை.

வேண்டாத தெய்வங்கள் இல்லை எந்த மதக் கடவுள் என்று வேறுபாடு பார்க்கவில்லை.

அல்லாவை வேண்டினர் அருள் பிறக்கவில்லை<br>
இயேசுவை வேண்டினர் ! இரக்கம் கிடைக்கவில்லை.<br>
பிரம்மாவை வேண்டினர் ! வழி பிறக்கவில்லை.

அடக்குமுறைகளுக்கு ஆளான விவசாயத் தொழி லாளர்கள்.

கொடும் சுரண்டலுக்கு உள்ளான குத்தகை விவசா யிகள் சிறு, குறு விவசாயிகள் என அனைவரையும் அவரவர் இல்லம் தேடிச் சென்று உன் பிரச்சனைகள் என்ன? என்னிடம் கூறுங்கள் எனக் கேட்க ஒரு மனிதர் ஊர், ஊராய், வீடு, வீடாய் சென்றார்.

அந்த மனிதர்தான் பி.எஸ்.ஆர். என்கிற மாமனிதர்.

மக்களிடம் செல்வோம் மக்களை சந்திப்போம் அவர்களின் பிரச்சனைகளை செவிமடுத்து கேட்போம். அவர்களிடம் கற்றுத் தேர்ந்து, அவர்கள் மூலமாகவே, அவர்களின் பிரச்சனைகளுக்கு வழியையும் கண்டறி வோம் எனக் களம் கண்டார் மாமனிதர் பி.எஸ்.ஆர்.

அவரது முயற்சி வீண்போகவில்லை அவரது உழைப்பு வீண்போகவில்லை.

நம் நெஞ்சங்களை விட்டு அகலாத சாதனைகள் தொடர்ந்தன.

தொடர்ச்சி 5ம் பக்கம் >>



# உலகக் கோடீஸ்வரர் பட்டியலில் மூன்றாம் இடத்தில் அதானி!

# முதலிடத்திற்கான முயற்சியில் மோடி!

- த.லெனின்

**ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள்! என்கிறார் அவ்வை மூதாட்டியார். ஆனால், இந்தியாவிலோ ஒரு மாளிகை எழ ஓராயிரம் குடிசைகள் வீழ்கின்றன.**

உலகக் கோடீஸ்வரர்கள் பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்தாராம் பிரதமரின் நண்பர் கவுதம் அதானி. அதுவும் ஒரே ஆண்டில் 11வது இடத்தில் இருந்து 5வது இடத்திற்கு வளர்ந்து கடந்த மாதம் 5வது இடத்திலிருந்து 4வது இடத்திற்கு தரம் உயர்ந்து, இன்று 3வது இடத்தை எட்டிப் பிடித்துள்ளார்.

புளூம்பர்க் வெளியிட்டுள்ள பில்லியனர் பட்டியலில் இப்படி ஆசிய நாட்டைச் சார்ந்த ஒருவர் மூன்றாவது இடத்திற்கு வருவது இதுவே முதல் முறையாகும்.

இந்தியாவில் கோடீஸ்வரர்கள் எண்ணிக்கை 40 ஆக இருந்த நிலையில் 2013ல் 103 ஆக உயர்ந்து இன்று 166 ஆக வளர்ந் திருக்கின்றனர். இதைத்தான் மோடியும் பா.ஜ.க.வினரும் வளர்ச்சி, வளர்ச்சி என்று வலைத்து பேசுகின்றார்கள்.

ஒட்டுமொத்த இந்தியாவின் செல்வ வளத்தில் 57% பெற்றுள்ள இவர்களை இரண்டு டபுள் டக்கர் பேருந்தில் ஏற்றிச் சென்று விடலாம். கொரோனா பெருந்தொற்றில் உலகமே பெரும் துயரில் தவித்து பொருளாதாரத்திலும் நலிந்த நிலையில், இந்தியாவில் கோடிக்கணக்கான மக்களின் வாங்கும் சக்தி வீழ்ந்து வறுமை சூழ்ந்து வாடும் நிலையில், இவர்களின் வருமானம் மட்டும் கடந்த இரண்டு ஆண்டில் இரட்டிப்பாகியுள்ளது. ஒன்றிய அரசின் ஓரவஞ் சனையான பொருளாதார நடவடிக்கையே காரணம் என்பதை இவ்வளர்ச்சி நிரூபித்துள்ளது.

எதைக் கேட்டாலும் உலக உதாரணத்தைச் சொல்லியே மழுப்புவது நமது பா.ஜ.க.வினரின் அன்றாட வேலையாகும். உலகக் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் குறைந்துள்ளது. அமெரிக்காவில் எந்த மாற்றமும் இல்லாமல் அதே எண்ணிக்கையில் நீடிக்கின்றனர்.

நமது அண்டை நாடான சீனாவிலும் கடந்த இரண்டு ஆண்டு களாக கோடீஸ்வர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

ஆனால், 5000 கோடிக்கு மேல் சொத்துள்ள கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை இந்தியாவில் அதிகரிக்கிறது என்றால், அரசின் வளர்ச்சிக் கொள்கைகள் யாருக்கு கிளர்ச்சியைத் தந்து வளர்க் கிறது என்பதை வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறது.

1978ல் ஒரு இளம் கல்லூரி மாணவராக படித்த அதானி திடீ ரென படிப்பை பாதியில் விட்டுவிட்டு மும்பையில் உள்ள ஹீரா பஜாரில் தொழிலுக்கு திரும்பினார். அவரது மூத்த சகோதரர் 1981 அகமதாபாத்திற்கு அழைத்ததில் இருந்து அவருக்கு வாய்ப்பு வரத் தொடங்கியது. தனது சகோதரரின் பிளாஸ்டிக் கம்பெனிக்கு மூலப் பொருட்கள் பற்றாக்குறை இருந்தது. இதை வாய்ப்பாகப் பயன்படுத்தி பிளாஸ்டிக் துகள்களை இறக்குமதி செய்ய 1988ல் 'அதான் எண்டர்பிரைசஸ் லிமிடெட்' உருவானது. பின்பு இது உலோகங்கள், விவசாயப் பொருட்கள், மற்றும் ஜவுளி போன்ற பொருட்களின் வர்த்தகத்தையும் தொடர்ந்தது.

1995ஆம் ஆண்டு அதானி குழுமம் முந்ரா துறைமுகத்தை இயக்கத் தொடங்கியது. 8000 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இந்த துறைமுகம் நாட்டின் மொத்த சரக்கு இயக்கத்தில் நான்கில் ஒரு பங்கை கையாள்கிறது.

குஜராத், மகாராஷ்டிரா, கோவா, கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் ஒடிசா ஆகிய ஏழு கடலோர மாநிலங்களில் 13 உள்நாட்டு துறைமுகங்களில் அதானி குழுமத்தின் பங்கு உள்ளன.

முந்ரா துறைமுகத்தில் நிலக்கரியால் இயங்கும் ஒரு பெரிய மின்நிலையமும் உள்ளது. தனியார் ரயில் பாதைகள் மற்றும் தனியார் விமான நிலையமும் உள்ளது. உலகிலேயே அதிக நிலக்கரியை இறக்குமதி செய்யும் துறைமுகமாகவும் இன்று உள்ளது. இந்த துறைமுகம் சிறப்பு பொருளாதார மண்டலத்தின் கீழ் அமையப்பெற்றதால் எந்த வரியையும் கட்ட வேண்டிய அவசியமில்லை.

1999 ஜனவரியில் அதானி குழுமம் 'வில் அக்ரி வர்த்தக குழு' வில்மருடன் கைகோர்த்து சமையல் எண்ணெய் வர்த்தகத்தில் நுழைந்தது. இன்று நாட்டில் அதிக விற்பனையாகும் பார்ச்சூன் சமையல் எண்ணெயை அதானியின் வில்மர் நிறுவனம்தான் தயாரிக்கிறது. அது தவிர நுகர் பொருள் துறையில் கோதுமை மாவு, அரிசி, பருப்பு வகைகள், சர்க்கரை போன்ற பல பொருட்களையும் விற்பனை செய்து வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு நாற்பது ரூபாய் விற்ற பருப்பின் விலை 120 ரூபாய்க்கு ஏற்றம் கண்டபோது, வெளிநாடுகளில் இருந்து பருப்பை இறக்குமதி செய்து பதுக்கி விற்கும் உரிமையை பிரதமரின் நண்பர் அதானி மட்டுமே பெற்றிருந்தார். அதனால் அவரின் லாபம் பல மடங்கு எகிறியது.

2001ல் இன்றைய பிரதமர் குஜராத்தின் முதல்வராக பொறுப் பேற்ற போது அதானியின் வளர்ச்சி அசுர வேகத்தில் வேகம் பிடிக்கத் தொடங்கியது.

2005ல் அதானி குழுமம் இந்திய உணவுக் கழகத்துடன் இணைந்து நாட்டின் மிகப்பெரிய தானிய சேமிப்பு கிடங்குகளை அமைக்கத் தொடங்கியது. இவற்றில் பெரிய அளவில் தானி யங்களும் சேமிக்கப்படுகின்றன. தொடக்கத்தில் 20 ஆண்டுகால ஒப்பந்தத்தின் கீழ் பல மாநிலங்களில் இந்த கிடங்குகள் கட்டப்பட்டாலும் நாடு முழுவதும் உள்ள இந்த வினியோக மையங்களுக்கு தானியங்களைக் கொண்டு செல்ல தனக்கென ஒரு தனியார் ரயில் பாதையையும் உருவாக்கி உள்ளது. இந்தப் பின்னணியோடுதான் மோடி அரசு கொண்ட வந்த மூன்று வேளாண் திருத்தச் சட்டங்களும் வந்தது என்பதையும் அதை ரத்து செய்வதற்கான விவசாயிகளின் வீரம் செறிந்த போராட்டத்தையும் இந்த நாடு பார்த்தது.



இன்று இந்திய உணவுக் கழகம் மற்றும் மத்திய பிரதேச அரசின் உணவு தானியங்களை தனது சேமிப்புக் கிடங்குகளில்தான் சேமித்து வருகிறது. இந்த உணவுக் கிடங்குகளில் 5.75 லட்சம் மெட்ரிக் டன்களும், மத்திய பிரதேச அரசின் 3 லட்சம் மெட்ரிக் டன்களும் இவற்றில் அடங்கும்.

2010ஆம் ஆண்டில் அதானி ஆஸ்திரேலியாவின் 'லிங்க் எனர்ஜி' நிறுவனத்திடமிருந்து சுமார் ரூ.12000 கோடிக்கு வாங்கியது. அதே போல இந்தோனேசியாவில் இயற்கை வளங்கள் போன்றவற்றில் 1.5 பில்லியன் டாலர் மூலதனத்தை முதலீடாக போட்டுள்ளது. அதற்கான ரயில் திட்டத்திற்கும் அங்குள்ள மாகாண அரசுடன் ஒப்பந்தம் போட்டுள்ளது அதானி குடும்பம்.

அதானி சம்ராஜ்யத்தின் மொத்த முதல் 2002ல் ரூ.2300 கோடியாக இருந்தது. இது 2014ல் மோடி ஆட்சியில் ரூ.40000 கோடியாக அதிகரித்தது. 2015க்குப் பிறகு ராணுவத்துக்கு பாதுகாப்பு உபகரணங்களை வழங்கும் பணியையும் அதானி குழுமம் தொடங்கியது. பின்பு இயற்கை எரிவாயுத் துறையில் அதன் வணிகம் விரிவடைந்தது. 2017ல் சோலார் பேனல்கள் தயாரிக்க தொடங்கியது.

கடந்த 2019ஆம் ஆண்டு அதானி குழுமம் விமானத்துறையிலும் நுழைந்து அகமதாபாத், லக்னோ, மங்களூரு, ஜெய்பூர், குவகாத்தி மற்றும் திருவனந்தபுரம் ஆகிய ஆறு விமான நிலையங்களில் நவீனமயமாக்கல் மற்றும் இயக்கும் பொறுப்பை 50 ஆண்டுக்கு அதானி குழுமம் பெற்றுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால் எந்த பெரும் நிறுவனத் திற்கும் மூன்று விமான நிலையங்களுக்கு மேல் கொடுக்கக் கூடாது என்ற ஒன்றிய அரசின் விதியையும் மீறி அதானி என்கிற ஒன்றை மனிதருக்காக இவ்வளவு பெரிய சலுகைகளை செய்திருக்கிறது மோடி அரசு.

இது மட்டுமின்றி, மும்பை இண்டர்நேஷனல் ஏர்போர்ட் நிறுவத் தில் 74% பங்குகளையும் வைத்துள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

**ஏழை, எளிய மக்களுக்கு அளிக்கப்படும் இலவசத் திட்டங் களுக்கு பெரும் விவாதத்தை கிளப்பியிருக்கின்ற நீதிமன்றங்களும் நமது அறிவிற் சிறந்த பெரும் சிந்தனையாளர்களும், இந்த பெரும் நிறுவனங்களுக்கான சலுகைகள் குறித்து தங்களது நவ துவாரங்களையும் பொத்திக் கொள்வது எதைக் காட்டுகிறது?**

அதானி குழுமத்தின் மீதான குற்றச்சாட்டுகள்:

இந்தியாவின் மிகப்பெரிய துறைமுகமான முந்ராவுக்காக அதானி குழுமத்திற்காக மிகக்குறைவான விலையில் நிலம் வழங்கியதாக குஜராத் அரசு மீது குற்றச்சாட்டு எழுந்தது.

2010 பிப்ரவரியில் சுங்க வரி ஏய்ப்பு செய்ததாக அதானியின் சகோதரர் ராஜேஸ் அதானி கைது செய்யப்பட்டார். இவர் இன்று அதானி குழுமத்தின் நிர்வாக இயக்குநராக உள்ளார்.

கடந்த 2014ல் ஆஸ்திரேலியாவின் ஃபேர் ஃபாக்ஸ் (Fairfax media) மீடியா வெளியிட்ட விசாரணை அறிக்கையில் இந்நிறுவனத்தால் குஜராத்தில் கட்டப்பட்டு வரும் சொகுசு வீட்டு திட்டத்தில் ஈடுபட்டுள்ள 6000 தொழிலாளர் அவலங்கள் குறித்து தெரிவித்திருந்தது.

அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த அவல நிலைக்கு அதானி குழுமம்தான் காரணம் என்று அந்த அறிக்கை குற்றம் சாட்டியது. ஆனால், தனது குடும்பத்தில் பணிபுரியும் ஒப்பந்தக்காரர்களால் இவர்கள் பணி அமர்த்தப்பட்டனர் என்று லாவகமாக பதில் அளித்தது அதானி குழுமம்.

கடந்த 2014 மே மாதம் மின்சாரம் உற்பத்தி செய்யும் கருவி களின் இறக்குமதி விலையை சற்றேறக்குறைய ஒரு பில்லியன் டாலர் அதாவது இன்றைய மதிப்பில் 79 ஆயிரம் கோடி ரூபாய் அன்றைய மதிப்பில் அது ரூ.40 ஆயிரம் கோடியைத் தாண்டும். ஒரு பில்லியன் டாலரை உயர்த்திக் காட்டியதாக அரசு அதிகாரிகள் இக்குழுமத்திற்கு நோட்டீஸ் அனுப்பினர்.

ஆஸ்திரேலிய நிலக்கரி சுரங்கத்திலும் அந்நாட்டின் பழங்குடி மக்களின் போராட்டத்தையும் எதிர்கொண்டு வருகிறது.

மோடிக்கும் அதானிக்கும் எதிலிருந்து நெருக்கும் தொடங் குகிறது?

கடந்த 2002ஆம் ஆண்டு முதலே அதானி மோடி நெருக் கத்தை பார்க்க முடிகிறது. அப்போது குஜராத்தில் வெடித்த வகுப்புக் கலவரங்களைத் தொடர்ந்து அங்குள்ள வணிக அமைப்பான இந்திய தொழில்களின் கூட்டமைப்பு (சி.ஐ.ஐ.) உடன் தொடர்புள்ள தொழில் முனைவோர் அன்றைய முதல்வர் மோடியின் மெத்தனத்தால்தான் இந்தக் கலவரத்தை கட்டுப்படுத்த இயலவில்லை என்று விமர்சனம் செய்தனர்.

இப்படி இவர்கள் தனக்கு ஒத்து வரவில்லை என்றால், இந் நிறுவத்திற்கு இணையாக மற்றொரு நிறுவனத்தை அமைப்பது குறித்தும் அதானி எச்சரிக்கை விடும் அளவுக்கும் சென்றது. அன்றைய முதல்வர் மோடியோ முதலீட்டாளர்களின் விரும்பமான இடமாக குஜராத்தை காட்ட முயன்றார்.

குஜராத்தின் மற்ற தொழிலதிபர்களை மோடிக்கு சாதகமாக ஆக்குவதில் கவுதம் அதானியின கைங்கரியம் முக்கிய பங்கு வகித்தது. அதற்கான கைமாறுதான் இந்த இமாலய வளர்ச்சிக்கு அடிகோலியது.

2013 மார்ச்சில் அமெரிக்காவில் உள்ள 'வார்டன் ஸ்கூல் ஆப் பிஸ்னஸ்' தனது நிகழ்ச்சி ஒன்றின் முக்கியப் பேச்சாளராக நரேந்திர மோடியை அழைத்தது. அங்குள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து மதக் கலவரத்திற்கு காரணமான மோடியை அழைக்கக் கூடாது என்று போராடினர். அதன் காரணமாக முக்கியப் பேச்சாளர்களின் பட்டியலில் இருந்து மோடி நீக்கப்பட்டார்.

இந்நிறுவனத்திற்கு முக்கிய ஸ்பான்சராக விளங்கியது அதானி குழுமம். மோடியை நீக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து தனது நிதியுதவியையும் திரும்பப் பெற்றது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

மோடியை விமர்சன பூர்வமாக அணுகுகிற என்.டி.டி.வி.யின் பங்குகளையும் பெரும் பகுதியை வளைத்து மோடிக்கான ஊதுகுழலாக மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தொலைபேசித்துறையில் எதுவே இல்லாத அதானி குழுமம் 5ஜி அலைக்கற்றை ஏலத்தை எடுத்து ஒட்டுமொத்த பி.எஸ்.என். எல். கட்டமைப்பையும் மோடியிடம் இருந்து பெற நாவில் எச்சில் சொட்டும் நாக்கை நீட்டிக் கொண்டிருக்கிறது.

இந்திய ரிசர்வ் வங்கியும், கடன் ஆய்வு முகமையும் அதானி யின் அளவில்லாத வளர்ச்சிக்கு அரசு அளித்த வங்கிக் கடன் காரணமாக அமைகிறது என்று கூறியுள்ளன. இக்கடன் கடந்த ஆண்டு ரூ.1.57 லட்சம் கோடியாக இருந்தது. அது மேலும் வளர்ந்து 2021–22ல் ரூ.2.21 லட்சம் கோடியாக மிகவும் அபாயகரமாக வளர்ந்துள்ளது. அதாவது, அவரது மொத்த சொத்தில் 40.5 சதம் இப்படி தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் மூலம் உருவானதாகும். அரசின் நேரடி உதவி அரசு சார்ந்த வங்கியின் உதவிதான் அவர் உயர உயர வளர்ந்ததற்கு காரணம் என்பது இதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஏழைகள் என்றால் எட்டிக்காயாய் கசக்கிறது. பெரும் நிறு வனங்கள் என்றால் பெருக்கெடுக்கும் பாசத்தோடு வாய்ப்புகளை வாரி வாரி கொடுக்கிறது மோடி அரசு.

பெரும் நிறுவனங்களின் அதிபர்கள் உல்லாச வாழ்க்கை வாழ்கிறார்கள். பொதுத்துறை வங்கிகளில் கடன் வாங்கி விட்டு வேண்டுமென்றே கட்டாது வெளியேறி வெளிநாடுகளில் குடியேறி சொகுசான ஆடம்பர ஐந்து நட்சத்திர வாழ்க்கையை வாழ்கின்றனர்.

இதற்கென்று உல்லாச தீவுகள், ஜெட் விமானங்கள் அனைத் தையும் கொண்டுள்ளவர்களாக இருக்கிறார்கள். அரசின் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கூட இவர்கள் மதிப்பதில்லை. பெரும் பணக்காரர்கள் சராசரியாக 2.1 குழந்தைகளை பெற்றுள்ளனர். இதில் 15 சதவிகிதம் பேர் 4 லிருந்து 5 குழந்தைகளையும் சிலர் 8 லிருந்து 9 குழந்தைகளையும் பெற்றுள்ளனர். அரசுகளின் உதவியோடும் அதன் மக்கள் விரோத பொருளாதார முறை களாலும்தான் இன்று அவர்கள் உலகக் கோடீஸ்வரர்களாக வலம் வருகின்றனர். உழைப்பினால் வருவதைப் போல ஒரு பாசாங்கு செய்தி பரப்பப்படுகிறதே அன்றி உண்மை அதுவல்ல. தவறான முறைகளாலும், சட்டவிரோத காரியங்களாலும் (கஞ்சா இறக்குமதி) பல அரசியல் தகிடுதத்தங்களாலும் இந்த உயர்நிலைக்கு வந்திருக்கிறார்களே அன்றி, தங்களது தனிப்பட்ட திறமையாலும், அறிவாலும், உழைப்பாலும் அல்ல என்பதை மீண்டும் மீண்டும் உணர்த்துகிறது இவர்களது வாழ்க்கை முறை.

ஏழை பணக்காரர் இடைவெளியைக் குறைக்காமல் பொரு ளாதார ஜனநாயகம் இந்தியாவில் எழாது. இப்படி பெரும் பணக் காரர் ஆதிக்கம் தொடரும் என்றால், நமது அரசியல் ஜனநாயகமும் அழிவுக்கு உட்படும். சமூக ஜனநாயகத்திற்கு சமாதி கட்டப்பட்டு விடும். எனவே இந்த சொத்துக் குவியல் முறைக்கு எதிரான, செல்வ வளச் சுரண்டலுக்கு எதிரான வீரார்ந்த போராட்டங்கள் வெடித்து எழட்டும்.

தொடர்புக்கு: 94444 81703

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 23

## நிதிஷ் முயற்சி வெற்றி பெறட்டும்

பாரதிய ஜனதா கட்சியுடனான கூட்டணி உறவை சென்ற மாதம் முறித்துக் கொண்ட பீகார் மாநில முதல்வரும், ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவருமான நிதிஷ்குமார் டெல்லி சென்று பல்வேறு கட்சித் தலைவர்களை 6.9.2022 அன்று சந்தித்திருக்கிறார்.

நிதிஷ் குமார் ஒரு சோசலிஸ்ட். 2015 ஆம் ஆண்டிலிருந்து பீகாரின் முதல்வராக ஆட்சி செலுத்துகிறார். ஆட்சி அதிகாரத்தை எட்டிப் பிடிக்கும் அளவுக்கு மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளை ஒன்று திரட்ட முடியாததன் விளைவாக அவர் பாஜகவுடன் கூட்டணி சேர்ந்தார். 2005, 2010 சட்டப்பேரவைத் தேர்தலில் அவரது கட்சி வலுவாக இருந்த காரணத்தால், குஜராத் மாநில முதலமைச்சராக இருந்த மோடி தேர்தல் பிரச்சாரத்திற்காக பீகாருக்கு வரக்கூடாது என நிபந்தனை விதித்து கூட்டணியை அமைத்துக் கொண்டார். பின்னால் சகலமும் மாறிப்போனது. அமைச்சரவையில் அவரோடு சேர்ந்த பிஜேபி, மரத்தை கரையான் அரிப்பது போல, அவரது கட்சியை உள்ளிருந்தே அரித்து வந்தது.

அதன் விளைவாக, சென்ற தேர்தலில் கூட்டணி சேர்ந்து போட்டியிட்ட போது, ஐக்கிய ஜனதா தளத்தை விட கணிசமாக அதிகத் தொகுதிகளில் பிஜேபி வெற்றி பெற்றது. என்றாலும் நிதீஷ் குமாரை முதல்வராக செயல்பட அனுமதித்தது. முதல்வராக அவர் பெயருக்கு இருந்தார்; பிஜேபி தான் அரசாங்கத்தை ஆட்டி வைத்தது. மகாராஷ்டிராவில் நடந்ததைப் பார்த்த பிறகு, கூட்டணியில் இருந்து பாஜகவை விலக்கி விட்டு, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளோடு இணைந்து மீண்டும் முதல்வரானார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான அஜய் பவன் சென்று பொதுச் செயலாளர் டி ராஜாவையும், மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகத்தில் அதன் பொதுச் செயலாளர் சீதாராம் எச்சூரியையும், தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலையும், ஓம் பிரகாஷ் சவுதாலாவையும் அவர் சந்தித்திருக்கிறார்.

அஜய் பவனில் அவர் கொடுத்த பேட்டியில், "நான் எப்போதும் இடதுசாரி கட்சிகளோடு நேசமாக இருப்பவன்; இந்த அலுவலகத்துக்கு வருவது ஒன்றும் புதிதல்ல. இன்று இடதுசாரிகள் காங்கிரஸ் மற்றும் மாநில கட்சிகளின் ஒற்றுமை அதிகம் தேவைப்படுகிறது. நான் பிரதமருக்கான வேட்பாளர் அல்ல. பிரதமர் யார் என முதலில் முடிவு செய்வதும் அவசியமல்ல. ஒரு மகா கூட்டணியை அமைப்போம். தேர்தல் வரும் நேரத்தில் பிரதமர் வேட்பாளர் யார் என முடிவு செய்வோம்" என்று கூறியிருக்கிறார்.

பீகார் மாடலை தேசிய மாடலாக்கப் போகிறீர்களா என்ற கேள்விக்கு பதில் அளித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர், இடதுசாரி மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளின் ஒற்றுமை ஒரு தேசம் தழுவிய தேவையாகும். தமிழ்நாடு மாடலையும் கூட எடுத்துக் கொள்ளலாமே என்று பேசி இருக்கிறார்.

37 சதம் மட்டுமே வாக்கு பெற்றுள்ள பிஜேபி, மற்ற கட்சிகளை ஒன்றுபட முடியாமல் சிதறடிப்பதன் மூலமாகவே தனது ஆட்சியை தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் தலைமை பொறுப்புக்கு ஆசைப்பட்டு, தமது கட்சியின் பிடிமானத்தை இழக்கிறார்கள். இந்தியாவே தன் பிடிமானத்தை இழந்து, கார்ப்பரேட்டுகளின் வேட்டைக்காடாக, வெறிபிடித்த வகுப்புவாதத்தின் கைகளில் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது.

நித்திஷ் துவக்கியுள்ள முயற்சி வெற்றி பெற வேண்டும்.

## வெல்க விக்ராந்த்

உள்நாட்டிலேயே முழுவதும் தயாரிக்கப்பட்ட இந்திய விமானம் தாங்கி கப்பலான விக்ராந்த் இந்த செப்டம்பர் 2ம் தேதியன்று கப்பற்படையில் சேர்க்கப்பட்டு இருக்கிறது. விக்ராந்த் என்றால் அச்சமற்றவன் என அர்த்தம். சோவியத் யூனியனிடமிருந்து வாங்கிய முதலாவது விமானந் தாங்கிக் கப்பல் 'விக்ராந்த்' என்ற பெயருடன் தான் பணி செய்து சில ஆண்டுகளுக்கு முன்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. அதன் நினைவாகவே இந்தக் கப்பலுக்கும் அதே பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலை செய்வதற்கான உத்தரவு 2004 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது. 230 பில்லியன் ரூபாய் மதிப்பு கொண்ட இந்த கப்பல் கொச்சி ஷிப் யார்டில் கட்டப்பட்டது. 28.2.2009 அன்று இதன் கட்டுமானம் நிறைவுற்றது. 12.8.2013ல் அது பரிசோதித்தும் பார்க்கப்பட்டது. புதிய கப்பல், இந்தியத் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும். இந்தப் பணியில் ஈடுபட்ட தொழில்நுட்ப வல்லுனர்கள், பொறியாளர்கள், தொழிலாளர்கள் அனைவரையும் போற்றிப் பாராட்டி வணங்குவோம்.

இவை எல்லாமே பாஜக மோடி ஆட்சிக்கு வருவதற்கு முன்பே நடந்து முடிந்தவை. ஏதோ முந்தாநாள் சொல்லி, இன்று முழு கப்பலையும் மோடியே கட்டி முடித்ததைப் போல, அந்தக் கட்சி மட்டுமல்ல, ஊடகங்களே மோடியை கொண்டாடுகின்றன.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளுக்கு.

### மாதர் சம்மேளன தெலுங்கானா மாநில மாநாடு அறைகூவல்

# பெண்கள் தங்கள் உரிமைகளுக்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்துக!



**'இந்திய மாதர் தேசியச் சம்மேளனம்' (நிதிமிகி) தெலுங்கானா மாநில இரண்டாவது மாநாடு ஹன்மகொண்டா, கன்கநாளா வசுமதி நகரில் ஆகஸ்ட் 28 தொடங்கி மூன்று நாட்கள் நடைபெற்றது. மூத்த தோழர் சடா புஷ்பமாலா சம்மேளனக் கொடியை ஏற்றி வைக்க, சிபிஐ தெலுங்கானா மாநிலக் குழு செயலாளர் சடா வெங்கட ரெட்டி துவக்கி வைத்தார்.**

அவர் தமது தொடக்க உரையில் பெண்கள் தங்கள் பிரச்சனைகளுக்காக போராட்டங்களைத் தீவிரப்படுத்த வேண்டும்; வரலாற்றுப் புகழ்பெற்ற தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தின் வீராங்கனைகள் அருட்லா கமலா தேவி மற்றும் சாக்கலி ஐலம்மா வீரச் செயல்களிலிருந்து உத்வேகம் பெற வேண்டும்.

பெண்களின் மீது அதிகரித்து வரும் தாக்குதல்கள், அட்டூழியங்கள், பாரபட்சம் மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராட வேண்டும். பெண் உரிமைகள், பாதுகாப்பு தொடர்பாகப் பல சட்டங்கள் இருந்தாலும், சில குறிப்பிட்ட குறைபாடுகள் காரணமாக அவை அமலாக்கப்படுவதில்லை. அனைத்து சட்ட அமைப்பு மன்றங்களிலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீட்டிற்காக நிதிமிகி சம்மேளனம் போராடி வருகிறது. அது போலவே மாதர் சம்மேளனம் சமூக நீதிக்காகப் போராட வேண்டும்.

நாடு இன்று வகுப்புவாத, பாசிச ஆட்சியின் பிடியில் சிக்கித் திணறுகிறது, பிரதமர் மோடி அதானிகள், அம்பானிகளின் நலன்களுக்காக இரவு பகலாகக் கூடுதல் பணியாற்றுகிறார்.

மோடியின் ஆட்சியில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விண்முட்ட உயர்கிறது. ரூ 400 ஆக இருந்த எரிவாயு உருளை விலை இன்று ரூ1,200. ஒன்றிய அரசு கைத்தறி ஆடைகள் மீதும் ஜிஎஸ்டி வரி விதித்து நாட்டு மக்களைச் சுரண்டுகிறது தெலுங்கானா ஆயுதப் போராட்ட வரலாற்றைச் சிதைக்கும் பாஜக, ஆயுதப் போராட்டத் தியாகிகளின் இரத்தத்தால் சிவந்த தெலுங்கானா மண்ணில் காவிக் கொடியை ஏற்ற முயற்சிக்கிறது. தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தின் வாரிசுகளான நாம் பாஜக காலூன்றுவதை அனுமதியோம். அதன் காரணமாகவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாஜகவைத் தோற்கடிக்க தெலுங்கானா ராஷ்ட்டிர சமிதி (டிஆர்எஸ்) கட்சியை ஆதரிக்கிறது.

பெண்கள் போராட்டங்களுக்கு ஆதரவாக எப்போதும் சிபிஐ உடன் நிற்கும் என்று உறுதியளித்தார்.

தொடக்க அமர்வில் மாதர் சம்மேளனத்தின் தேசியச் செயலாளர் டாக்டர் ரஜினி, தலைவர் உஸ்தலா ஸ்ரூஜனா, மாநிலப் பொதுச் செயலாளர் நெடுநூரி ஜோதி, செயல் தலைவர் மண்ட சதாலெட்சுமி, துணைத் தலைவர்கள் பி சாபா தேவி, பொடு கலாவதி, பொருளாளர் பாடலா நளினி, மேனாள் சட்டமன்ற உறுப்பினர் போதராஜூ சாரையா மற்றும் பல மாவட்டப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்திய மக்கள் நாடக மன்றத்தினர் (இப்டா) பாடிய புரட்சிகரப் பாடல்கள் பார்வையாளர்களை உற்சாகப்படுத்தியது.

இரண்டாவது நாள், வாரங்கல் ஜில்லா பரிஷத் தலைமை நிர்வாகியான காந்திர ஜோதி பிரதிநிதிகள் அமர்வில் பேசும்போது அனைத்து முன்னிலைகளிலும் பெண்கள் தலைமை உயர் பதவிகளில் அமர்ந்தாலும் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் நீடிக்கிறது என்றார். மக்கள் தொகையில் செம்பாதியாக பெண்கள் இருப்பதால் பெண்கள் முன்னேற்றம் இல்லாமல் சமுதாயம் வளர்ந்து முன்னேற முடியாது. அனைத்திற்கும் மேல் பெணகள் இல்லாமல் சமூகம் என்பதே இல்லையே. கடந்த காலப் பெண்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடினார்கள், ஆனால் தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்காக அவர்கள் தொடர்ந்து போராடத்தான் வேண்டும் என்றார் ஜோதி.

மாதர் சம்மேளனத்தின் தேசியப் பொதுச் செயலாளர் ஆனி ராஜா உரையாற்றும்போது

**நரேந்திர மோடி அரசு பெண்கள் பால் முதலைக் கண்ணீர் வடிப்பதாக விமர்சித்தார். ஒன்றியத்தில் பாசிச, மனுவாதி அரசு அதிகாரத்தில் உள்ளது. பில்கிஸ் பானு வழக்கில் குஜராத் மாநில பாஜக அரசு சிறையிலிருந்து 11 பாலியல் வன்புணர்வு குற்றவாளிகளை விடுதலை செய்தது. ஜனநாயக உரிமைகளை நசுக்கி, மனித உரிமை போராளி தீஸ்டா செதல்வாட் சிறையில் தள்ளப்படுகிறார். மேலும் பாஜக ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு பெண்களுக்கு எதிரான அட்டூழியங்களும் தாக்குதல்களும் அதிகரித்துள்ளது. பொது மக்கள் மீது கடுமையான சுமைகளைக் குவிக்கும் மோடி அரசு, மக்களுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களையும் இயற்கை ஆதார வளங்களையும் அதானிகள், அம்பானிகள் கைகளில் அடிமாட்டு விலைவிகிதத்தில் கையளிக்கிறார். எனவே சமூகத்தின் செம்பாதியான நம் தேசத்துப் பெண்கள் மோடிக்கு எதிராகத் தங்கள் குரல்களை உயர்த்த வேண்டும்**

என்றார்.

மாநிலப் பொதுச் செயலாளர் நெடுநூரி ஜோதி அறிமுகம் செய்த செயலாளர் அறிக்கை, பிரதிநிதிகள் விவாதத்திற்குப் பிறகு ஒருமனதாக ஏற்கப்பட்டது. இந்த அமர்வில் தேசியத் தலைவர் உஸ்தலா ஸ்ரூஜனா மற்றும் மாநிலப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டின் நிறைவாய் மூன்றாவது நாள் ஹனம்கொண்டா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஆனி ராஜா உரையாற்றினார்.

மோடி அரசு பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு உருளை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விலைகளைத் தொடர்ந்து உயர்த்தி வருகிறது. இவையெல்லாம் பொதுமக்கள் தலையில் பாரமாகச் சுமத்தப்படுகிறது. எனவே பெண்கள் மோடிக்கு எதிராகக் குரலை உயர்த்த வேண்டும். பெண்களின் உரிமைகளுக்காகவும், பெண்களுக்குச் சட்டமியற்றும் மன்றங்களில் மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீட்டிற்காகவும் போராடுவதில் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் களத்தில் முன் நிற்கிறது. அந்தப் போராட்ட உணர்வு மேலும் உற்சாகத்துடன் தொடர வேண்டும் என ஆனி ராஜா வலியுறுத்தினார்.

பொதுக் கூட்டத்தில் டாக்டர் கே ரஜினி, நெடுநூரி ஜோதி, உஸ்தலா ஸ்ரூஜனா, மண்ட சடலெட்சுமி, பி சாயா தேவி, ஜங்கம்மா, ஷேபமிதா, லதா தேவி, நளினி, ஜெ லெட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

*நியூஏஜ் செய்தி தொகுப்பு: ராம் நரசிம்ஹ ராவ்*

தமிழாக்கம்: **நீலகண்டன்**

# தலைமறைவு நாயகன் 'சாட்டோ' வின் நினைவை நிறுத்துவோம்!

- ஆனந்த் பாசு

**'சாட்டோ' என்று அறியப்பட்ட வீரேந்திர சட்டோபாத்யா ஒரு பிரிட்டிஷ் காலனித்துவ எதிர்ப்பாளரும் புரட்சியாளரும் ஆவார் . 1902 இல் இந்தியாவை விட்டு வெளியேறிய அவர், மீண்டும் தாயகம் திரும்பவே இல்லை. இந்தியாவை விட்டு வெளியேறிய பின்னர், சாட்டோவின் அசாதாரண தலைமறைவு வாழ்க்கை பெரும் கொந்தளிப்பு சாகசங்கள் நிறைந்தது.**

இந்திய தேசியவாதத் தலைவரும் கவிஞருமான சரோஜினி நாயுடுவின் இளைய சகோதரரான சாட்டோ, 1880ஆம் ஆண்டில் ஹைதராபாத்தில் பிறந்தார். அவரது தந்தை அகோரேநாத் சட்டோபாத்யாயா அன்றைய ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஒரு கல்வியாளராகத் திகழ்ந்து, முற்போக்கான சீர்திருத்தங்கள் மூலம் தனது முத்திரையைப் பதித்தவர். மேலும், இவர் 'நிஜாம் கல்லூரி' எனும் பிரசித்தி பெற்ற ஒரு கல்வி நிறுவனத்தை நிறுவியவர்.

இந்திய குடிமைப் பணியில் நுழைவதற்கான முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், சாட்டோ, இங்கிலாந்திலேயே பிரசித்தி பெற்ற 'மிடில் டெம்பிள்' கல்வி நிலையத்தில் சட்டம் பயிலச் சேர்ந்தார். அங்கு அவர் போர்க்குணமிக்க கருத்துக்களைப் பகிரங்கமாகப் பகிர்ந்ததால், 'அவரை மிடில் டெம்பிள்' நிறுவனம் சட்டக்கல்வி கற்பதில் இருந்து வெளியேற்றியது.

1910 ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில், இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் ஒரு புரட்சியாளனாக இடம் பெற்ற, அப்போது லண்டனில் கல்வி பயின்று கொண்டிருந்த மதன் லால் திங்ரா, பிரிட்டிஷ் அதிகாரி, விலியம் ஹட் கர்சன் வில்லியைக் கொலை செய்ததைத் தொடர்ந்து, சாட்டோ, லண்டனிலிருந்து பாரிஸுக்கு இடம் பெயர்ந்தார்.

அங்கு மேடம் காமாவுடைய புரட்சிக் குழுவுடன் சாட்டோ பணியாற்றத் தொடங்கினார்.

அவர் பிற மொழிகளை உட்கிரகிப்பதில் வல்லவராய் இருந்தார். மொழியியல் மற்றும் இனவியல் ஆகியவற்றில் தீவிர ஆர்வமும் கொண்டிருந்தார். அவர் அறிவார்ந்த கட்டுரைகளை எழுதினார். மேலும் அவரது அரசியல் நடவடிக்கைகளுடன் இந்துஸ்தானியும் கற்பித்தார். 1910 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அவர் தனது சகோதரி மிருணாளினி மற்றும் அவரது அபிமானி பால்முகுந்த் ஆகியோரை ஏற்றுமதி செய்யப்பட்ட மரச்சாமான்களில் ஆயுதங்களை மறைத்து வைத்துக் கடத்தும் பணியில் ஈடுபடுத்தினார்.

சாட்டோவின் கடிதங்களை இடைமறித்து, ஆங்கிலேய அதிகாரிகள் வேவு பார்த்த போது, இது அவர்களுக்குத் தெரிய வந்தது. இதையொட்டி, ஹைதராபாத்தில் வசித்து வந்த அவரது தந்தை அகோரேநாத்தின் வீட்டில் சோதனை நடத்தப்பட்டது. இதில் மிருணாளினி மற்றும் பால்முகுந்த் இடையேயான கடிதப் பரிமாற்றம் தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை.

இவரது பாரிஸ் குழு விரைவிலேயே கலைக்கப்பட்டு, சாட்டோ சுவிட்சர்லாந்து, அமெரிக்கா மற்றும் பின்னர் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு மீண்டும் இடம் பெயர்ந்தார். ஜெர்மனியில் உள்ள ஹாலேவில் முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்தார். சாட்டோ பல்வகைப்பட்ட வட்டங்களில் பழகினார். இந்த காலகட்டத்தில்தான் ஐரோப்பா முழுவதும் இருந்த பிரெஞ்சு மற்றும் இத்தாலிய அனார்கிஸ்டுளுடன் இவருக்கு நட்புறவு ஏற்பட்டது.

காலனித்துவ எதிர்ப்பு மற்றும் சர்வதேச அனார்கிஸ்டுகளுடைய உலகில் மூழ்கிய சாட்டோ, செப்டம்பர் 1914ல், முதலாம் உலக யுத்தச் சூழலில், 'இந்திய விடுதலைக் குழு' என்று பின்னர் அழைக்கப்பட்ட ஜெர்மனிவாழ் மாணவர்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்களால் உருவாக் கப்பட்ட பெர்லின் கமிட்டியை நிறுவ உதவினார். இந்த பெர்லின் கமிட்டி, பிரிட்டிஷ் இந்தியாவின் அண்டை நாடாக விளங்கிய ஆஃப்கானிஸ்தான் அமீரின் பிரிட்டிஷ் எதிர்ப்புத் திட்டங்களை மேலும் தீவிரப்படுத்தவும், பிரிட்டிஷ்இந்திய ராணுவ வீரர்களை சீர்திருத்தி, ஆயுதங்களையும் வீரர்களையும் இந்தியாவிற்குக் கடத்தவும், ஆஃப்கானிஸ்தான் தலைநகர் காபூலுக்கு ஒரு பணிக்குழுவை அனுப்பியது.



இதன் பிறகு, சாட்டோ ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் நகருக்குச் சென்று புதிய சங்கங்களை, குறிப்பாக போல்ஷிவிக்குகளுடன்* வளர்த்தெடுத்தார். அவர் பெர்லின் கமிட்டியை, 'சின் ஃபெய்ன்' எனும் ஐரிஷ் விடுதலை இயக்கத்துடனும், எகிப்திய தேசியவாத இயக்கத்துடனும் ஒப்பிட்டு, இந்திய விடுதலைப் பிரச்சினையை சர்வதேசமயமாக்க கடும் முயற்சிகள் மேற்கொண்டார். இங்கேயும், சாட்டோ மீது சதித் திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு அவரிடம் விசாரணை மேற்கொள்ளப் பட்டது.

பிரிட்டிஷ் உளவுத்துறை அவரைத் தொடர்ந்து உளவு பார்த்துக் கொண்டே இருந்தது. 1915ஆம் ஆண்டு டிசம் பர் மாதத்தில், ஏற்கனவே லண்டனில் இருந்த போது அறிமுகமான ஹில்டா மார்கரெட் ஹவ்சின் என்கிற ஆங்கிலப் பெண்மணி, அவரை சுவிட்சர்லாந்தின் ஜெனீ வாவில் சந்தித்தார். சந்தித்துவிட்டுத் திரும்பியவுடன் அவர் லண்டனில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இதையடுத்து, டொனால்ட் குல்லிக் என்ற பிரிட்டிஷ் ரகசிய ஏஜென்ட், சுவிட்சர்லாந்திற்குச் சென்று, மார்கரெட் ஹவ்சினின் விடுதலைக்கு உதவும் சாக்கில், சாட்டோவைச் சந்தித்தார்.

குல்லிக்கின் நோக்கம் சாட்டோவைப் பிரெஞ்சு அல்லது இத்தாலிய எல்லைக்குள் இழுப்பது அல்லது கொன்று விடுவதாகத்தான் இருந்தது. ஆனால், டொனால்ட் குல்லிக் தன் திட்டத்தை நிறைவேற்றுவதில் தோல்வியையே தழுவினார். அந்த நேரத்தில், சோமர்செட் மௌம் எனும் பிரிட்டிஷ் இரகசிய சேவையில் இருந்த எழுத்தாளர், இந்த தோல்வியுற்ற படுகொலை சதித்திட்டத்தை, தான் எழுதிய கதை ஒன்றில், 'சந்திர லால்' என்கிற சாட்டோவை அடிப்படையாகக் கொண்ட ஒரு கதாபாத்திரத்துடன் வாயிலாகப் பதிவு செய்துள்ளார்.

**1920 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இடதுசாரி - பெண்ணிய பாட்டாளி வர்க்கப் போராளி ஆக்னஸ் ஸ்மெட்லியைச் சந்தித்தார். ஏழ்மையான கிராமப்புற பின்னணியில் இருந்து வந்த ஸ்மெட்லி, நியூயார்க்கில் லாலா லஜபதி ராயுடன் பணிபுரிந்த போது, இந்து-ஜெர்மன் சதி வழக்கில் 1918ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டவர். சாட்டோவின் பால் பெரிதும் ஈர்ப்பு கொண்ட அவர், அவரை ரகசியப் புரட்சிகர இயக்கத்தின் உருவகமாகவும், அதன் மிக சிறந்த அயலகக் கதாநாயகனாகவும் கருதினார். 1921ல் ஸ்மெட்லி, சாட்டோ மற்றும் மற்றவர்களுடன் மாஸ்கோவிற்குப் பயணம் செய்து, 'கமின்டர்ன்' என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட, 1919 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட 'கம்யூனிஸ்ட் இன்டெர்னேஷனல்' எனும் சோவியத் கட்டுப்பாட்டு சர்வதேச அமைப்பின் ஒத்துழைப்பை நாடினார்.**

பெர்லின் கமிட்டி ஜூலை மாதம் நடந்த 'கமின்டர்ன்' மூன்றாம் காங்கிரஸில் கலந்து கொண்டது. பிறகு, லெனினைச் சந்திக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததால், மாஸ்கோவை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

1920 களில், சாட்டோ இந்தியாவிற்கு செய்திகளை வழங்குவதற்காக, இந்திய செய்தி சேவை மற்றும் தகவல் பணியகத்தை அமைத்தார். அவர் தனது மைத்துனர் ஏ.சி.என்.நம்பியாருடன் இணைந்து, இந்தியஜெர்மன் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் வகையில், இரண்டு வர்த்தக இதழ்களைத் தொடங்கினார். இவை அவரது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான வழிமுறையாகவும் அமைந்தன. பிறகு, 1926 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸ் நகரில், காலனித்துவ எதிர்ப்பு மாநாட்டை ஏற்பாடு செய்ய சாட்டோ உதவினார். இந்த மாநாடு ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கூட்டிணைவு உருவாவதற்கு வழிவகுத்தது.

நாசியிசத்தின் அச்சுறுத்தல் பூதாகரமாக உருவெடுத்த நிலையில், சாட்டோ 1931 ஆம் ஆண்டு ஜெர்மனியை விட்டு மாஸ்கோவிற்குப் புறப்பட்டார். அதன் பிறகு அவர் லெனின்கிராட்டில் உள்ள மானுடவியல் மற்றும் இனவியல் நிறுவனத்தில் (ஐ.ஏ.இ.) ஆராய்ச்சியாளராக நியமிக்கப்பட்டார். 'சாட்டோ'வின் பெயர் இப்போது 'வீரேந்திரநாத் அகோர்னாடோவிச் சட்டோபடாயா'.

அவர் ஒரு பயனுள்ள கல்வி மற்றும் ஆய்வுப் பணியைச் செய்ததுடன், தனது அரசியல் கடமைகளையும் நிறைவேற்றினார். ஆனால் அது நீடிக்கவில்லை. ஜூலை 16, 1937 அன்று இரவு சோவியத் அதிபர் ஸ்டாலினின் ரகசிய காவல்துறையினரால் கொண்டு செல்லப் பட்டார். லிடியா தீவிரமாக அவரைத் தேடியது வீணானது. அவர் இறந்துவிட்டார் என்று அவருக்கு இறப்புச் சான்றிதழ் வழங் கப்பட்டது. ஆனால், ரஷ்ய வரலாற்றாசிரியர் மித்ரோகின், சாட்டோ 1937ஆம் ஆண்டு, செப்டம்பர் 2ஆம் தேதி தூக்கிலிடப் பட்டதைக் காட்டும் ரஷ்ய உளவு நிறுவனமான, தேசியப் பாதுகாப்புக் கமிட்டி என்று பொருள்படும் கே.ஜி.பி யின் ஆவணங்கள் கிடைக்கப் பெற்றார்.

அதன்படி, சாட்டோவின் நினைவு நாள் செப்டம்பர் 2. அவருடைய வீர, தீரச் செயல்களை நெஞ்சில் நிறுத்தி, அன்னாரின் நினைவைப் போற்றுவோம்!

(கௌதம் பெம்மாராஜுவின் கட்டுரையிலிருந்து)

>> 02ம் பக்கத் தொடர்ச்சி

தனித்து நிற்காதே சேர்ந்து நில்! ஊர் கூடி ஒன்றுபட்டு அமைப்பை உருவாக்கு!

தங்கம் சாதிக்காததை சங்கம் சாதிக்கும்! என்கிற வாழ்வியல் உண்மையை உணர்த்தி நம்பிக்கையூட்டி கிராமம் தோறும் அமைப்புகள் உருவாக உத்வேக மூட்டினார்.

ஊர்தோறும் செங்கொடி பறந்தது.
கண்கள் திறந்தன
காதுகள் கேட்டன
பேசத் தொடங்கினர்

சாட்டையால் அடிக்காதே!
சாணிப்பால் கொடுக்காதே!
குத்தகை என்ற பெயரால் சுரண்டாதே!
கூலியை குறைக்காதே!

என்கிற முழக்கம் எங்கெங்கும் ஒலித்தது!

அடித்தால், திருப்பி அடிப்போம் என்ற முழக்கம் விண்ணைப் பிளந்தது.

கைக்குள் சுருட்டப்பட்ட துண்டு சிவப்புத் துண்டாய் தோள் பட்டையை அலங்கரித்தது. எங்கெங்கும் சிவப்புத் துண்டு எங்கெங்கு காணினும் செங்கொடி!

சமூக அடக்குமுறை கொடுமைகளுக்கு முடிவு கட்டப் பட்டது.

சாட்டைகள் மறைந்தன. சாணிப்பால் ஒழிந்தது.

கூலி உயர்வு கிடைத்தது குத்தகை அளவு குறைந்தது.

குடியிருப்பு மனை சொந்தமானது

நில உச்சவரம்பு சட்டங்கள் பிறந்தன.

உபரி நிலம் எடுக்கப்பட்டது. நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டது. குத்தகை விவசாயிகள் பதிவு சட்டம் வந்தது. அதன் தொடர்ச்சியாக மனைபட்டா மட்டுமல்ல, வீடு வழங்கப்படுகின்றது.

விவசாயத் தொழிலாளர் நலவாரியம் பிறந்தது.

சாதனைகள் மேல் சாதனை! என்று தொடர்கின்றது.

மேலும் தொடர வேண்டும்! மதத்தின் பெயரால் சாதியின் பெயரால் கடவுளின் பெயரால் மக்களை பிளவுபடுத்தும் சங்பரிவாரங்களை அடையாளம் கண்டு அவர்களை அன்னியபடுத்தி மக்கள் ஒற்றுமையை பேணிக் காக்க...

விவசாயத் தொழிலாளர்களை அமைப்புரீதியாக அணிதிரட்ட...

அன்றாடம் பணிகளை மேற்கொள்வோம்.

செப்டம்பர் மாதம் தோழர்.பி.சீனிவாசராவ் மாதம்.

அவரது நினைவு நாளான செப்டம்பர் திங்கள் 30ம் நாள் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதுடன்,

அவர் முன்னெடுத்த பணிகளை நாம் கையெடுத்து முன்னேறுவோம்.

புதியதோர் உலகம் காண்போம்.

இதுவே நாம் பி.எஸ்.ஆருக்கு செலுத்தும் மிகச் சிறந்த அஞ்சலியாகும்.

**மீண்டும் சந்திப்போம்.**
**வணக்கம்**
**தோழமைமிக்க,**



**(இரா.முத்தரசன்)**
**மாநிலச் செயலாளர்**

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

**வத்திராயிருப்பு:** வத்திராயிருப்பில் மு.வீரபாண்டியன் மீதான கொலை முயற்சியைக் கண்டித்து வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமையில் மாநில குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, தவிச சவுந்திர பாண்டியன் உள்ளிட்டோரும், செட்டியார்பட்டியில் ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி தலைமையில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தவிதொச வரதராஜன் உள்ளிட்டோரும், சாத்தூரில் எஸ்.பழனிக்குமார் தலைமையில் மதிமுக அ.ரவிச்சந்திரன் எக்ஸ் எம்பி, மாநில குழு உறுப்பினர் மருத்துவர் த.அறம், திமுக நகர்மன்ற துணைத்தலைவர் பா.அசோக், வட்ட செயலாளர் சுவாமிநாதன், மதிமுக நகர செயலாளர் கணேஷ்குமார், எஸ்.எஸ்.முத்து உள்பட கலந்து கொண்டனர், அருப்புக்கோட்டையில் ஒன்றிய செயலாளர் முனியசாமி தலைமையில் மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார், திருச்சுழி செல்வம், காரியாபட்டி வேல்சாமி உள்ளிட்டோரும், விருதுநகரில் ஒன்றிய செயலாளர் சக்கணன் தலைமையில் மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், நகர செயலாளர் முத்துக்குமார், மாதர்சங்க மாரீஸ்வரி உள்ளிட்டோரும், சிவகாசியில் மாவட்ட பொருளாளர் சமுத்திரம் தலைமையில் வட்ட செயலாளர் ஜீவா, தவிச கூடலிங்கம் உள்ளிட்டோரும், ஸ்ரீவில்லி புத்தூரில் ஒன்றிய செயலாளர் பலவேசம் தலைமையில் வி.பொன்னுபாண்டி, நகர செயலாளர் மூர்த்தி உள்ளிட்டோரும், இராஜபாளையத்தில் வி.இரவி தலைமையில் நகர செயலாளர் விஜயன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.



**ஓசூர் :** கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ மாநகரச் செயலாளர் சங்கரய்யா தலைமை தாங்கினார். விவசாய சங்க மாநில துணைத்தலைவர் எம்.லகுமைய்யா கண்டன உரையாற்றினார். கட்சியின் நிர்வாகிகள், தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரியில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநில குழு உறுப்பினர் எஸ்.கண்ணு தலைமை ஏற்றார். நகர செயலாளர் உபேத் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட குழு உறுப்பினர்கள் ராமமூர்த்தி, சக்கரவர்த்தி ,பெருமாள், மோகன், காளியப்பன், சுபத்ரா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு தாக்குதலில் ஈடுபட்டவர்களை கைது செய்யக்கோரி முழக்கம் எழுப்பினர்.




**கோவை:** கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் மாநில குழு உறுப்பினரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி. சிவசாமி ஆகியோர் தலைமை தாங்கினர். ஜே.ஜேம்ஸ், மு.வா. கல்யாணசுந்தரம், சி.தங்கவேல், கே.ரவீந்திரன், ஏ.சுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினர்கள் பிரபா ரவீந்திரன், சாந்தி சந்திரன், எம்.டி. மோகன், மற்றும் கே. எம்.செல்வராஜ், வழக்கறிஞர்கள் எஸ். ராதாகிருஷ்ணன், கே. சுப்பிரமணியம், ஏ ஐ டி யு சி செயலாளர் என்.செல்வராஜ், சோமசுந்தரம், மாணவர் பெருமன்ற மாநில தலைவர் எம். குணசேகர், கலை அஸ்வினி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் கோவை மாவட்ட செயலாளர் வே. வசந்தகுமார், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்டத் தலைவர் பி. முருகன், மாவட்ட செயலாளர் ஏ. அஷ்ரப் அலி, விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட தலைவர் சு. பழனிசாமி, ஜே.கலா, பி. இளங்கோ, அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் பூர்ணிமா நந்தினி, மாவட்ட செயலாளர் பவன் குமார், ஜோதீஸ்வரி, வி.ஆர்.பாண்டியன், பூபதி, சக்திவேல், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சேலம்:** பனமரத்துப்பட்டி வீரபாண்டி, கொண்டலாம்பட்டி மண்டல இடைக்குழுக்கள் சார்பில் ஒன்றிய செயலாளர் எம்.பாலன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.சேலம் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் கண்டன உரை நிகழ்த்தினார். இதில் மண்டல செயலாளர் ஏ.கந்தன் மாவட்ட குழு உறுப்பினர்கள் எஸ்.பாலன் எஸ்.தனக்கோட்டி எம்.கந்தசாமி எஸ்.ராமஜெயம் பா.தினேஷ், டி.ராமு, ஜி.வெற்றிவேல் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.




**கும்பகோணம்:** கும்பகோணம் தலைமை அஞ்சலகம் முன்பு மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் ஐ.ஜார்ஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் எம்.சீனிவாசன், டி.ஆர்.குமரப்பா, ஏ.ராஜேந்திரன், க.மொரார்ஜி, தங்க.சக்கரவர்த்தி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். க.சுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

**ஆண்டிபட்டி:** ஆண்டிபட்டியில் மு.வீரபாண்டியன் மீதான கொலை முயற்சியைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியக்குழு சார்பில் முருகன் தியேட்டர் அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி நகர செயலாளர் க.முனீஸ்வரன் மற்றும் தோழர்கள் 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு முழக்கம் எழுப்பினர்.

**வெண்ணந்தூர் :** இந்திய கம்யூனிஸ்ட கட்சி வெண்ணந்தூர் ஒன்றிய குழு சார்பில் வெண்ணந்தூர் பஸ்நிலையம் அருகில் ஒன்றிய செயலாளர் பி.ஆர்.செங்கோட்டுவேல் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒன்றிய பொருளாளர் ஆர்.முருகேசன், எம்.கே.சுமைப்பணி தொழிலாளர்கள் சங்க தலைவர், எம்.ரவி துணை தலைவர், எம்.மாணிக்கம், சிபிஐ ஒன்றிய துணை செயலாளர் எஸ்.தமிழ்ச்செல்வன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஏ.மகாலிங்கம், எம்.மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கே.ஈஸ்வரன், எம்.சமயபுரத்தான், வி.ரமேஷ், கே.சின்னுசாமி, பழனிவேல் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். சிபிஐ ஒன்றிய துணை செயலாளர் ஆர்.அருள்குமார். நன்றி கூறினார்.

**தூத்துக்குடி:** தூத்துக்குடி, கோவில்பட்டி, எட்டையாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தூத்துக்குடியில் மாவட்டச் செயலாளர் கரும்பன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




**பரமக்குடி :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பெருமாள் தலைமையில் பரமக்குடியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஏஐடியுசி தலைவர் எஸ்.பி.ராதா, செயலாளர் என்.கே. ராஜன், பரமக்குடி நகர் செயலாளர் கே.ஆர்.சுப்பிரமணியன், துணைச் செயலாளர் ஜே.ஆர்.ஹரி, எம்.கோட்டைச்சாமி, முதுகுளத்தூர் செயலாளர் ஜெயசீலன், இராமநாதபுரம் நகர் வட்டார செயலாளர், களஞ்சியம், போக்குவரத்து கிளை செயலாளர் சுப்பிரமணியன் நகர் கவுன்சில் உறுப்பினர்கள் வி.ஆர்.நாகநாதன், கே.ஜி.நாகநாதன், வி.என். கணேசமூர்த்தி, காளைச்சாமி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.



**திருச்சி மாநகர் :** திருச்சி மாநகர் மாவட்ட குழுவின் சார்பில் உறையூர் குறத்தெரு பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மேற்கு பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம் .செல்வராஜ் உரை நிகழ்த்தினார். மேலும் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் க. சுரேஷ், தரைக்கடை வியாபாரிகள் சங்க மாவட்ட செயலாளர் அன்சர்தீன் மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க.இப்ராகிம், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.செல்வகுமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**குடியாத்தம்:** குடியாத்தம் புதிய பஸ் நிலையத்தில் மு.வீரபாண்டியன் மீதான கொலை முயற்சியைக் கண்டித்தும், பிக்கின்ஸ் பானு வழக்கில் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு மாவட்ட மைய உறுப்பினர் துரைசெல்வம், இந்திய மாதர் தேசிய சம்மேளன மாவட்ட தலைவர் எஸ். காவேரி ஆகியோர் தலைமை தாங்கினர். கே.சி.பிரேம்குமார் ஒன்றிய துணைசெயலாளர் கே. கல்பனாசுந்தர் மாட்டக்குழு உறுப்பினர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாட்ட மையக்குழு உறுப்பினர் எல்.மணி, சிபிஐ மாவட்ட செயலாளர் ஜி.லதா கண்டன உரையாற்றினர். பி.சுப்பிரமணி, ஜி.தங்கவேலு, பன்னீர்செல்வம், அருள்குமார், கு. வினாயகம், ஆர். வேலாயுதம், ஜி. எஸ். மூர்த்தி, கே.ஜெயராமன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



**சீர்காழி:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி புதிய பஸ் நிலையம் எதிரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் நீதி சோழன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட விவசாய சங்க செயலாளர் வீரராஜ், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பிரபாகரன், கட்சி நிர்வாகிகள் ஜெயக்குமார், பாஸ்கரன், வரதராஜன், தேவகி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் கொள்ளிடம் ஒன்றியத்தில் கலந்து கொண்டனர். மயிலாடுதுறை மாவட்ட த்தில் அனைத்து ஒன்றியங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




**மதுரை :** மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் திருவள்ளுவர் சிலை முன்பு மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் புறநகர் மாவட்டச் செயலாளர் மூர்த்தி கண்டன உரை ஆற்றினார். தமிழ்நாடு கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் பா.காளிதாஸ் முடித்து வைத்து பேசினார். தாலுகா செயலாளர்கள், மாவட்ட குழு உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பெண்கள் உள்பட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

மதுரை மாநகர் மாவட்ட குழு சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், எம்.நந்தாசிங், ரவிச்சந்திரன், இருளாண்டி, ஜனசக்தி என்.ஜீவா, ராஜலெட்சுமி, ஜெயந்தி மற்றும் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.




**அரியலூர்:** அரியலூரில் சிபிஐ மாவட்டக் குழு உறுப்பினரும் மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளருமான த.தண்டபாணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக் குழு உறுப்பினர் திருமானூர் ஜி.ஆறுமுகம், ஜி.மருதமுத்து, ஒன்றிய செயலாளர் மு.கனகராஜ், அரியலூர் நகர கிளை ந.கோவிந்தசாமி,நாகமங்கலம் எஸ். வி.பிச்சைபிள்ளை, அரியலூர் நகராட்சி ஏஐடியூசி டி.அண்ணாதுரை, ரா.தனலட்சுமி, நீ.சூரியா, ரா.ராணி, செ.கலா, ஜீவா மகளிர் சுய உதவிக் குழு கு.வெள்ளையம்மாள்,கு. விக்னேஷ்,கயர்லாபாத் கிளை டி.ராயதுரை, சு.ராஜேந்திரன், து. ராஜா, ஆலத்தூர் ஒன்றிய செயலாளர் க.பழனிச்சாமி, துரைக்கண்ணு, குமரபாளையம் கே.கரும்பாயிரம், டி.ஜீவா, உட்பட திரளாக கலந்து கொண்டனர்.

**தென்காசி :** சிவகிரியில் நகர செயலாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில், நகரத் துணைத் தலைவர் குரு, மாவட்ட குழு உறுப்பினர் காளியப்பன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வி.தொ.ச. வட்டத் தலைவர் வேலுச்சாமி, மாதர்சங்க துணைச் செயலாளர் சண்முக வடிவு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். தென்காசியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நகர செயலாளர் கணேசன் தலைமை தாங்கினார். கீழ ஆம்பூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய செயலாளர் ஜீவா, ஒன்றிய துணைச் செயலாளர் ஹரிகரன், சிவ சுப்ரமணியன், வேலாயுதம், சட்டநாதன், ஈஸ்வரன், பரமசிவன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். புளியங்குடி காமராஜர் சிலை முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் சுப்பையா, நகர செயலாளர் வேலு, முருகன், சீனிவாசன், பிச்சையா, அய்யனார், சுப்பிரமணியன், கல்யாணி, சுந்தரம் கலந்து கொண்டனர்.

செங்கோட்டை தாலுகா அலுவலகம் முன்பு ஒன்றிய செயலாளர் ஆழ்வார் தலைமையில், சுந்தரம் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சாமி, போஸ், மாரியப்பன், சுப்பிரமணி, பழனிச்சாமி, செல்லையா, கணேசன், பரமசிவம் கலந்து கொண்டனர். ஆயிரபேரியில் கோவிந்தன் தலைமையில் கிட்டப்பா முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. லட்சுமணன், துரைராஜ், பாலகிருஷ்ணன் கலந்து கொண்டனர். சங்கரன்கோவிலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் சுப்பையா கனகராஜ் கலந்து கொண்டனர்.

# சங்கே முழங்கு!



## முதியோர் உதவித்தொகைக்காக அலையவிடும் அதிகாரிகள்!

**கே.கபில்தேவ்**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகை வாங்கி கொண்டிருந்த பத்தாயிரம் பயனாளிகளை அதிகாரிகள் நீக்கி வயதான முதியோர்களை அலையவிடும் கொடுமை நடைபெறுகிறது.

தொழிற்சாலை ஏதும் இல்லாத கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பெரும்பாலும் விவசாயக் கூலித் தொழிலாளர்களே அதிகம் இருக்கின்றனர். சுமார் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட விவசாய கூலித் தொழிலாளர்கள் உதவித்தொகை கேட்டு மனு கொடுத்து எதிர்பார்த்து காத்துள்ளனர். அரசாங்கம் தரும் பணத்தை எனாம் பணம், இலவசம்தானே என நினைக்கும் மனசாட்சி இல்லாத அதிகாரிகள், திக்கற்ற நிலையில் உள்ளவர்களிடம் ஏஜெண்டுகள், இடைத்தரகர்களை நியமித்து கையூட்டு வாங்கி கொண்டுதான் உத்தரவு கடிதம் தருகிறார்கள். இப்படியாக கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பயனாளிகளாக தேர்வு செய்யப்பட்ட 50 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வாழ்வாதாரமாக உதவித்தொகை பெற்று பயனடைந்தவர்களை குறைக்க வேண்டும் என்றும், புதிதாக பயனாளிப்பட்டியலில் சேர்க்க பணம் திரட்டவும் திட்டம் தீட்டி பாவப்பட்டவர்களின் பணத்தை பறிக்கும் உள்நோக்கத்தோடு சின்னசேலம், சங்கராபுரம் தாலுகாகளில் தலா 2 ஆயிரம் பயனாளிகளையும், கள்ளக்குறிச்சி, வெள்ளிமலை, உளுந்தூர்பேட்டை திருக்கோவிலூர் ஆகிய தாலுகாகளில் தலா 1500



பயனாளிகளையும் என மொத்தமாக கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பத்தாயிரம் பயனாளிகளை எவ்வித காரணத்தையும் தெரிவிக்காமல் அதிகாரிகள் நீக்கி உள்ளனர். இது தெரியாத பாதிக்கப்பட்ட வயதான பயனாளிகள் வங்கிக்கும், போஸ்ட் ஆபீஸ்க்கும் ஏறி இறங்கி, விஷயம் தெரிந்த பின் அந்தந்த தாலுகா அலுவலகங்களில் முறையிட்டு மீண்டும் புதிதாக விண்ணப்பித்து கிராம உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களிடம் அலைந்து அணுகி நிலையை எடுத்துக் கூறி மீண்டும் இரட்டிப்பு பணத்தை செலவு செய்து விசாரணை அறிக்கையினை பெற்று சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தார்களிடம் ஒப்படைத்து ஐந்து மாதம் ஆகியும் உதவித்தொகை கைக்கு வராமல் களங்கப்பட்டு, அலைகழிக்கப்பட்டு, அவதிப்பட்டு வருகின்றனர். எங்கும் போக முடியாத பலர் இனிமேல் ''நரி தின்ன கோழி கூவவா போகுது'' என பணம் இனிமேல் வராது என்ற விரக்தியில் செத்தும் விட்டார்கள். மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியமாக பெற்றது வயதானவர்களுக்கு ஊன்றுகோலாகவும், உதவியாகவும் இருந்ததால் சமூகத்திலும், உறவினர் மத்தியிலும் மதிப்பும் அங்கீகாரமும் இருந்தது. இப்போது உதவித்தொகை வரவில்லை என்றதும் இழந்து ஏமாந்து தவிக்கும் வயதானவர்களை குடும்பத்தில் உள்ள சிலர் அலட்சியம் காட்டியும் புறக்கணித்தும் வருவதால் மேலும் வேதனை அடைகின்றனர். எனவே கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் உரிய கவனம் செலுத்தி நீக்கிய பத்தாயிரம் முதியோர்களுக்கு மீண்டும் மாத உதவித்தொகை கிடைக்க பயனாளி பட்டியலில் சேர்த்து ஆதரவற்ற வயதானவர்களை பாதுகாக்க ஆதரவு கரம் நீட்டிட முன்வர வேண்டும். மேலும் உடல் உழைப்பை செலுத்தி முதிர்வின் காரணமாக உழைக்க முடியாதவர்களின் ஓய்வூதிய தொகையை அரசும், அதிகாரிகளும் நிறுத்தியதை மீண்டும் தரவேண்டி பாதிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கு நியாயம் கேட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளனர்.

தொடர்புக்கு: **98942 74211**



**நீ.சு.பெருமாள்**

# கவர்னர் தமிழ்படிப்பது நல்லது

**அண்மையில் டெல்லியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட தமிழக ஆளுநர் ஆர் என் ரவி அவர்கள் திருக்குறளைப் பற்றி பேசுகிறபோது பகவான் என்கின்ற ஒரு வார்த்தையை வைத்துக் கொண்டு ஜி.யூ.போப் மீது பாய்ந்திருக்கிறார்.**

கிறித்துவ மதம் பரப்ப வந்த அவர் திருக்குறளை சிதைத்து விட்டார் என்கிற வகையில் ஆங்கில மொழிபெயர்ப்பில் தவறு இருக்கிறது என்று பேசி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே திருக்குறள் தமிழின் மூல நூலன்று. திருவள்ளுவர் வடமொழி (சமத்கிருதம்) சாத்திர நூல்களில் உள்ள சான்றுகளைத்தான் தொகுத்து தழிழில் படைத்துள்ளார் என்கிற வகையில் தற்போது திருக்குறள் பற்றிய புரட்டு நூல்கள் வெளிவரத் துவங்கியுள்ளன. அதன் குரலாக கவர்னரின் பேச்சு அமைந்துள்ளது.

உண்மையில் திருக்குறள் வடமொழித் தழுவலால் உருவானது என்பதே அப்பட்டமான உண்மைக்கு மாறான, புறம்பான செய்திகளாகும்.



சமத்கிருதம் என்கிற வடமொழியை விட மூத்த மொழி தமிழ் என்பது தகுந்த சான்றுகளுடன் ஏற்கனவே நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

எனவே வடமொழித் தழுவல் என்பதே தமிழின் தொன்மைக்கு எதிரான கருத்தாகும்.

கௌதம புத்தர் தமிழ் படித்தவர் என்று சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட ''லலித விஸ்தாரம்'' கூறுகிறது. இதனை 'ஜிலீமீ றிஉணீறீனீஉ ஷீயீ ணீ ஷிவீஸ்ணீ ஷிணீவீஸீமீ' என்னும் நூலில் ஐசக் தம்பையா கூறியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஐந்து கட்ட கீழடி அகழாய்வு முடிவுகள் மேற்சொன்ன உண்மைகளை அறிவியல் ரீதியாக தமிழின் தொன்மையை நிரூபித்துள்ளது. இன்றிலிருந்து 2300 முதல் 2600 ஆண்டுகள் வரையில் வாழ்ந்த மக்களால் பயன்படுத்தப்பட்ட 16 ஆயிரம் பொருட்களை தொல்லியல்துறை கண்டெடுத்துள்ளது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்பிராமி எழுத்துகள், சாமானியன் பயன்படுத்திய பானை ஓடுகள் மீது எழுதப் பட்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. மேலும் கடந்த 18 ஆம் நூற்றாண்டு வரையில் இந்தியாவில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டுகள் எண்ணிக்கை 60 ஆயிரம்.

இதில் வடமொழி எழுத்துகளைக் கொண்ட கல்வெட்டுகள் 4 ஆயிரம் கல்வெட்டுகள்தான். அதுமட்டுமல்ல, இந்தியாவின் முதன் முதலில் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அத்திப்பாரா மற்றும் குஜராத்தில் ஜிலாகத் ஆகிய இடங்களில்தான் வடமொழி எழுத்துகளைக் கொண்ட கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

இந்த எழுத்தின் காலம் என்பது கி.பி.முதலாநூற்றாண்டு எனச் சான்றளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் தமிழகத்தில் மதுரை அருகில் உள்ள மாங்குளம் மற்றும் தேனி அருகில் உள்ள புலிமான்கோம்பை ஆகிய பகுதிகளில் தமிழ் பிராமி எழுத்துகளைக் கொண்ட கல்வெட் டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த கல்வெட்டுகளின் காலம் என்பது கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சாா்ந்தது என இன்றைய நவீன அறிவியல் தொழில் நுட்பத்தின் மூலம் உறுதி செய்யப் பட்டிருக்கிறது. அதாவது, வடமொழியைவிட, தமிழ்மொழி சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்பதைத்தான் மேற்சொன்ன கல்வெட்டுகளின் ஆய்வு பறைசாற்றுகிறது.

எனவே முதன்மை மொழியாகவும், மூத்த மொழியாகவும் இருக்கின்ற தமிழ் மொழியில் எழுதப்பட்ட திருக்குறளை வடமொழி சாத்திரங்களின் தொகுப்பு எனச் சொல்வோர், மொழிகள் குறித்த ஆய்வில் நுனிப்புல் மேயும் மேதாவிகளாகத்தான் இருப்பர்!

**திருவள்ளுவரால் எழுதப்பட்ட திருக்குறள் என்பது தமிழ் மொழியில் எழுதப்பட்டதே அன்றி வேறு எந்த ஒரு அடையாளத்தையும் வெளிப்படுத்தியதில்லை. குறிப்பாக வடமொழி அல்லது வேத மரபுகளுக்கு மாற்றான கருத்துகளைத்தான் அதிகம் திருக்குறளில் காணப்படுகிறது.**

வடமொழி வேதமான ரிக் வேத புருச சூத்திரத்தில் பிறக்கும் மனிதர்களை நான்கு வர்ணங்களாகப் பிரித்துச் சொல்கிறது. பிரம்மனின் முகம், மார்பு, தொடை, கால் வழியாக பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் பிறந்தார் என்கிறது. இதனை திருவள்ளுவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

மேலும் இந்த வேத கருத்திற்கு மாறாக, ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்'' என்கிறார்.

இது வேத மரபுக்கு எதிரான கருத்துதானே! மேலும் சாணக்கியன் எழுதிய அர்த்த சாத்திர நூலில் பெற்ற தாயின் பசியைப் போக்க வேண்டும் எனில், எந்தவொரு பாவத்தைச் செய்தேனும் தாயின் பசியைப் போக்கலாம் என்கிறது. ஆனால் இங்கேயும் திருவள்ளுவர் தம்முடைய துலாக்கோலை உயர்த்திப் பிடித்து நீதி சொல்கிறார்.

''ஈன்றள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை'' என்கிறார்.

வடமொழி சாத்திரங்களில் தேவ மைந்தர்களான அந்தணர்களுக்கு உடல் உழைப்பு உரியதல்ல எனச் சொல்கிறது. பயிர்த் தொழில் செய்யும் வேளாண்மைப் பெருமக்களை தாழ்த்தப்பட்ட மக்களாகவே கருதும் மனப்பான்மையும் வேதமரபின் வழியில் வந்தவைதான். ஆனால் திருவள்ளுவர் இந்த கருத்தியலையும் கடுமையாக மறுக்கிறார்.

''சுழன்றும் ஏர் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை''

என்கிறார். அதாவது அந்தணர்கள் பின்னால் உலகம் செல்லாது, மாறாக ஏர் உழவனின் கலப்பையின் பின்னால் தான் உலகம் இயங்கும் என்கிறார்.

மேலும் முற்றும் துறந்த முனிவர்கள் காட்டில் தவம் மேற்கொள்கிற போது அவர்களின் கையில் இருக்கும் ஜெபமாலை உருட்டல்கூட, வேளாண்மை இல்லை எனில் நின்று போகும் என எச்சரிக்கிறார் திருவள்ளுவர்.

''உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கும் நிலை'' என்கிறது வள்ளுவம்.

வேத மரபுகள், நியதிகள் இவைகள் எதுவுமே விவசாயிகளை போற்றியதாகச் செய்திகள் கிடையாது. மாறாக, வேதவிற்பனர்கள் இல்லையெனில் உலகம் இயங்காது என வலியுறுத்துவதுதான் வடமொழி சாத்திர நூல்கள்!

குறிப்பிட்ட சமுதாயத்தவர்கள்தான் கல்வி பயில வேண்டும். அர்ச்சகராக வர வேண்டும் எனச் சொல்லும் பழமைவாத சாத்திரங்களுக்கு, மாறாக எல்லா உயிர்களையும் நேசிப்பதும், பசிக்குச் சோறிடுவதும்தான் உயரிய தர்மம் என மானுடத்தை உயர்த்திப் போற்றிய தமிழ் மறை திருக்குறள்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

திருக்குறளில் உள்ள கடவுள் வாழ்த்தை மேற்கோள் காட்டித்தான் பெரும்பாலோர் திருவள்ளுவரை ஒரு நிறத்திற்குள் அடைக்கப் பார்க்கின்றனர்.

அதில் முக்கியமாக அறவாழி ''அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால் பிறவாழி நீந்தல் அரிது'' என்கிற குறளைக் காட்டித்தான் திருவள்ளுவரை அடையாளப் படுத்த முயற்சிக்கிறார்கள்.

அந்தணர் திருவடியை பற்றுதல்தான் பிறவிக் கடலை கடக்க முடியும் என்கிறது வள்ளுவம் எனச் சொல்கின்றனர். ஆனால் யார் அந்தணர் என்பதை இன்னொரு குறளில் தெளிவாகப் பாடம் நடத்தியிருப்பார்.

அந்தணர் என்போர் ''அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்''

அதாவது எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டி, அருள் பொழிகின்ற நேர்மை நெஞ்சம் உடையவர்கள் அனைவருமே அந்தணர் என்கிறார் திருவள்ளுவர்.

அதாவது பிறப்பால் அல்ல அந்தணர் ஒழுக்கத்தில் உயர்வுடையோர் அனைவருமே அந்தணர் என்கிறார். அதனால் தான் ஒழுக்கம் உயிரினும் மேலானது என்கிறார்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்று ஒழுக்கத்தை உயிருக்கு நிகராக சொன்னவர் திருவள்ளுவர்.

குலத்துக் கேற்றவாறு தண்டனைகள் வழங்கும் வேத மரபுகளையும் தூக்கி எறிந்து புரட்சி செய்தவர் திருவள்ளுவர்.

வேதங்களை பார்ப்பான் மறந்துவிட்டால் ஒன்றும் ஆகிவிடாது.

மறுபடியும் கற்றுக் கொள்ளலாம் ஆனால் ஒழுக்கம் கெட்டால் அவன் பிறப்பே நாசமுறும் என்று எச்சரிக்கை செய்த தமிழ் முனி திருவள்ளுவர். ''மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்''

பிறப்பினால் அல்ல ஒழுக்கத்தில் சிறந்தவனே உயர்குடி ஆவான் ஒழுக்கத்தில் தாழ்ந்தவனே இழிந்த இனம் ஆவான் ''ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்''

கப்லோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் தன்னுடைய இறுதிக் காலத்தில் தமிழ் இலக்கிய நூல்களை ஆய்வு செய்து எழுதியுள்ளார். அதில் திருக்குறளைப் பற்றி எழுதுகிறபோது கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தை பிற்காலத்தில் இணைத்திருப்பார்கள் என்று பதிவு செய்துள்ளார்.

இத்தனைக்கும் வ உ சி சிறந்த தேச பக்தர் மட்டுமல்ல, தெய்வப் பற்றும் மிகுந்தவர். எனவே இரண்டு வரிகளுக்குள் மூன்று நெறிகளைச் சொன்ன திருக்குறளை தமிழ்மறை என்று போற்றுவதே அறிவுடைமையாகும்.

கவர்னர் ஆர்.என்.ரவி அவர்களுக்கு என்ன பேச வேண்டும் என்று எழுதிக் கொடுப்போர் குறைந்த பட்சம் தமிழ் இலக்கிய வரலாறுகள் அறிந்தவராக இருப்பது நல்லது. அல்லது கவர்னரே தமிழ் படிப்பது அதைவிட சிறப்பானது.

தொடர்புக்கு: **94426 78721**



# தகை மிகைசால் தமிழர்,

பேராசிரியர்
தி. இராசகோபாலன்

**தோழர் இரா.நல்லகண்ணு ஐயா, நேற்று வரை தகைசால் தமிழர். இன்றிலிருந்து தகை மிகைசால் தமிழராவார். தமிழக முதல்வர் அவர்கள் பெரிய மனசோடு 10 இலட்சத்தைத் தகுதி பார்த்து அறிவித்தார். ஆனால் பெரியவர், ஆர்.என்.கே. அவர்கள் தம்முடைய ஐந்தாயிரத்தையும் சேர்ந்து 10 இலட்சத்து ஐந்தாயிரத்தையும் மாண்புமிகு முதல்வரின் நிவாரண நிதிக்கே மிகப்பெரிய மனசோடு வழங்கிவிட்டார்.**

**'கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று
கொள்ளேன் என்பது அதனினும் உயர்ந்தன்று'**

எனப் புறநானூற்றுப் புலவர் கழைதின்யானையார் பாடியதை மெய்ப்பித்துவிட்டார். தோழர் ஆர்.என்.கே. அவ்வகையில் தகை மிகைசால் தமிழரே ஆவார், அப்பெருந்தகை.

'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சி. அவர்கள் பேசிய பேச்சும், நேரு பெருமானாரின் கோரக்பூர் உரையும் மாணவர் ஆர்.என்.கே. அவர்களை விடுதலை வேள்வியில் பிடித்துத் தள்ளின. உப்புச்சத்தியாக் கிரகத்தில் நேரடியாகப் பங்கேற்க விரும்பியவருக்குப் பெற்றோரின் அனுமதி கிடைக்கவில்லை. பொதுவுடைமைக் கட்சியிலும் உடனடியாகச் சேர்க்கமாட்டார்கள். அதற்கென்று பயிற்சிக் காலம் ஒன்று உண்டு.

அதனால் பாரதியார் பாடிய தேசபக்திப் பாடல் களை ஊர்வலங்கள் தோறும் தெருக்கள் தோறும் தோழர்களோடு பாடிக்கொண்டே செல்வார். இரவில் நடக்கும் கூட்டங்களுக்கு விளக்குகள் ஏந்திச் செல் வார். ஓய்வு நேரங்களில் பாரதியார், பாரதிதாசன், பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ்ஏங்கெல்ஸ் எழுதிய நூல்களை ஆழ்ந்து கற்றார்.

இரண்டாம் உலகப்போரினால் உணவுப் பஞ்சம், எரிபொருள் (மண்ணெண்ணெய்) பற்றாக்குறை ஏற் பட்டது. நியாய விலைக் கடைகள் (ரேஷன்) மூலம் வழங்கப்படும் பொருட்களைப் பெறுவதற்குரியவர்களின் பட்டியலைத் தயாரிக்கும் பணியை ஆர்.என்.கே. தன் னார்வத்தால் ஏற்றார். கீழ்த்தட்டு மக்களுக்கு எவ்வளவு நிலபுலன்கள் இருக்கின்றன என்பதை அவர் விசாரித்து வந்த போது ஒரு பெரியம்மா எதிர்பட்டார். அவரை விசாரித்த போது, "எங்களுக்கு வயல் எங்கப்பா இருக்கு. வாயும் வயிறு மட்டுந்தான் இருக்கு" எனப் பதிலிறுத்தார். அந்தப் பதில் ஆர்.என்.கே. அவர் களை நெஞ்சைச் சுட்டது. ஏரோட்டும் மக்களின் ஏக் கத்தைப் போக்குவதற்குப் பொதுவுடமையே வழி என முடிவெடுத்தார்.

'பொருளாளி திருடர்களை விளைவிக்கின்றான். பொதுவுடைமையோன் திருடர்களைக் களைவிக்கின்றான்' எனும் பாவேந்தர் கனல் வரிகளைக் கற்றவர் அல்லவா ஆர்.என்.கே.

களக்காடு பகுதியில் சத்தியவாகீஸ்வரர் கோயில் ஒன்றிருக்கின்றது. பெரிய பண்ணையார் அங்கு வாழ்ந்தார். அவர்கள் வசிக்கும் பகுதியில் பிற்படுத்தப்பட் டோரில் ஒரு பிரிவினரும், பட்டியலினத்தாரும் நுழைய முடியாது. இதையறிந்த ஆர்.என்.கே விவசாயத் தோழர்களைத் திரட்டி மேட்டுக்குடியினர் வாழும் தெருக்களில் ஊர்வலமாக அழைத்துச் சென்றார். ஆணவக்காரர்கள் அடங்கிப் போயினர்.

வேளாண்மைக் காலத்தில் பிற்படுத்தப்பட்டோரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், பட்டியல் இனத்தைச் சேர்ந்த பெண்கள் உரமூட்டைச் சுமந்து செல்லும் பெண்களின் உடலழகைப் பார்த்து ரசிப்பார்களாம். பண்ணையார்கள். ஆர்.என்.கே. அதற்கொரு போராட் டத்தை நடத்தி அந்த வெங்கொடுமையையும் நீக்கினார்.

நாங்குனேரியில் மலையடிவாரம் வரை ஜீயர் மடத்திற்குச் சொந்தமான நிலங்கள் இருந்தன. அதில் பயிர் செய்யும் விவசாயிகள் அங்கேயே தங்கியிருப்பார்கள். அவர்கள் மண் குடிசைகள் தாம் கட்டிக் கொள்ள வேண்டும். கூரைதான் வேய வேண்டும். வெளித்திண்ணைப் போடக்கூடாது. ஆட்டுரலோ, அம்மியோ மண்ணில் பதிக்கக்கூடாது. அவர்களை 'ஓடும் குடிகள்' என்று அழைப்பார்கள். எந்தச் சமயத்திலும் அவர்களை வெளியேற்றுவதற்கு மடத்திற்கு அதிகாரம் உண்டு.

அறுவடையான நெல்லைச் சைவமடத்தார் கோட் டையாக் கட்டிச் சாணிப்பால் போட்டு மெழுகிச் 'சிவ சிவ' என்று எழுதி வைப்பார்கள். வைணவர்கள் அதே போல் கோட்டையாகக் கட்டி சாணிப்பால் போட்டு மெழுகி நாமங்களை எழுதி வைத்து விடுவார்கள். உழவர்களுக்கு மடத்தார் எப்போதாவது நினைத்துக் கூலி போட்டால் தான் உண்டு.

**பசிக்கொடுமையால், ஒரு விவசாயி அறுவடை செய்த நெல்லை வீட்டுக்குக் கொண்டு போய்விட்டார். அதற்காக அவருக்கு 100 ரூபாய் அபராதம் விதித்துவிட்டார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தோழர் ஆர்.என்.கே. விவசாயிகளைத் திரட்டி, நுழையக்கூடாது என விதிக்கப்பட்டிருந்த மாடவீதிகளின் வழியே ஊர்வலமாக அழைத்துச் சென்றார். மடத்தினுடைய அதிபர்கள் ஏற்பாடு செய்து வைத்திருந்த அடியாட்கள், உழவர்களை அடித்து நொறுக்கினார்கள். தலைமை தாங்கிய ஆர்.என்.கேயைத் தூணிலே கட்டி வைத்து, அடிஅடியென அடித்து நொறுக்கினார்.**

அவரைக் காப்பாற்ற வந்த பேராசிரியர் என்.டி.வான மாமலைக்கும் (அவர் வைணவராக இருந்த போதும்) தடை விதித்துவிட்டார்கள். திரு.வானமாமலை அவர்கள் வழக்கறிஞராகவும் இருந்த காரணத்தால், எம்பெருமானார் இராமமானுஜர் ஆதிதிராவிடர்களை எப்படி அன்பு காட்டி ஆதரித்தார் என்பதை மேற்கோள் காட்டி வாதிட்டதால் நீதிபதிகள் ஆர்.என்.கே.யை குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்தார்கள்.

அண்மைக் காலத்தில் இந்திய நாட்டின் உள்துறை அமைச்சராகவிருந்த இந்திரஜித் குப்தா, டாக்டர் அம்பேத்கர் தலைமையில் உருவான குடியுரிமைச் சட்டம் இருந்ததாலும் இந்திய மக்கள் மத்தியில் சமூகப் பழக்க வழக்கங்களில் மனுவின் வர்ணாசிரம தர்ம விதிகளே ஆளுமை செய் கின்றன எனக் கூறியதைத் தோழர் ஆர்.என்.கே பலமுறை எழுத்தின் மூலமும் பேச்சுக்களின் மூலமும் வெளிப் படுத் தியிருக்கிறார். 'தமிழ்த்தென்றல்' திரு.வி.க. தமக்கு மறுபிறவி இருக்குமானால் தாழ்த்தப்பட்டவனாகப் பிறக்க வேண்டும். அதிலும் தாமிரபரணிக் கரையில் பிறந்து சாதிக் கொடுமைகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்று தமது வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டிருக்கிறார். காலம் காலமாக உழைக்கும் விவசாயிகள் பட்டுவரும் பாடுகளைக் கண்டு ஆத்திரம் கொண்ட தோழர் ஆர்.என்.கே., அவர்களுடைய வலிமையையும் நினைவுப்படுத்துவதற்காக கவிஞர் எஸ்.எம். கார்க்கி எழுதிய

**வெள்ளிப்பிடி அருவாள்,
விடலைப் பிள்ளை கையருவாள்,
சொல்லி அடித்த அருவாள்,
சுழட்டுதடி நெற்கதிரை**

என்னும் பாடலை அவர்களுக்கு வாசித்துக் காட்டுவார்.

25.12.1968இல் கீழ்வெண்மணியில் நடந்த படுகொலை, தன்னாட்டு ஜாலியன் வாலாபாக் படுகொலை எனச் சொல்லலாம். ஒரேயொரு ஏசுவாகிய குழந்தை பிறந்த நாளில் பல குழந்தைகள் கொல்லப்படுகின்றன. விவசாயத் தொழிலாளர்கள் சங்கமாகத் திரண்டு கூலி உயர்வு கேட்டனர். தங்களுக்குக் கிடைக்கும் கூலியில் கொஞ்சம் உயர்த்திக் கேட்டனர். அதற்காக நிலக்கிழார்களால் 44 உயிர்கள் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக எரித்துக் கொல்லப்பட்டனர்.

செய்தியறிந்த ஆர்.என்.கே. வெண்மணிக்கு விரைகிறார். 'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்' என்பானே பாரதி அப்படிக் கொதிக்கும் நெஞ்சம் தோழர் ஆர்.என்.கே. அவர்களுக்கும் ஏற்பட்டது. அன்று அவர் வடித்த கண்ணீர் கனன்று கொண்டிருந்த சாம்பலை ஈரமாக்கியது. (நிகழ்ச்சி நடந்த அன்று முதல்வர் அண்ணா அவர்களுடைய நுங்கம்பாக்கம் இல்லத்தில் மன்னை நாராயணசாமி அவர்களோடு இக்கட்டுரையாளரும் இருந்தார். அப்போது அறிஞர் அண்ணா வெண்மணி கொடுமைக் கேட்டுக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்.)

வெண்மணியில் எரிந்து போன ஒரு தாயின் பெயர் பாதாம்பாள். அந்தத் தாய் கருகிக் கொண்டிருந்த போது பக்கத்தில் படுத்திருந்த பச்சைக் குழந்தையும் எரிந்துவிடுமோ என்றஞ்சி, அதனைக் கட்டிப் பிடிக்கின்றாள். காப்பாற்றுவதற்காக குழந்தையோடு சேர்ந்து தாயும் எரிந்து போகிறார். இந்நிகழ்ச்சி இன்றுவரை ஆர்.என்.கேயின் இதயத்தை வருடிக் கொண்டுதான் இருக்கிறது. "தீண்டாமை என்பது அடிமை முறையின் இந்திய வடிவம்" என்றார் டாக்டர் அம்பேத்கர்.

பொதுவாக பொதுவுடமைவாதிகள் மொழி பற்றிப் பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் தமிழகக் கம்யூனிஸ்ட்டுகளால் அப்படியிருக்க முடியவில்லை. தோழர் ஜீவா, பாலதண்டாயுதம், தொ.மு.சி.ரகுநாதன், தோழர் வானமாமலை, தோழர் ஆர்.என்.கே. போன்றோர் தமிழுக்கும் புதுக்கணக்கு எழுதியிருக்கிறார்கள்.

தோழர் ஆர்.என்.கே., பெருந்தலைவர் காமராசரைப் போலவே ஒன்பதாண்டுகள் சிறையில் இருந்தவர். ஆனால்



ஒரு வித்தியாசம். பெருந்தலைவர் அடிமை இந்தியாவில் சிறைப்பட்டார். தோழர் நல்லகண்ணுவோ அடிமை இந்தியாவிலும் சிறைப்பட்டார். சுதந்திர இந்தியாவிலும் சிறைப் பட்டார். நெல்லை சதி வழக்கில் ஆர்.என்.கே. சிறையிருந்த போது அவருக்குக் கொடுக்கப்பட்ட கைதி எண் 9658 ஆகும்.

சிறையில் இருந்த போது தந்தையார் இராமசாமி அவர் களுக்குத் தமிழ்மணம் கமழத்தக்க வகையில் ஒரு மடல் எழுதுகிறார். இராமாயண வரிகளைக் கோடிட்டு அவர் எழுதிய மடல் தந்தையாருடைய துயரத்தின் கனத்தைச் சில நாட்களுக்குக் குறைத்ததாம்.

தோழர் ஆர்.என்.கே. சிறைவாசத்தின் போது ஆங்கிலக் கவிஞர் டென்னிஸன் எழுதிய **'home they brought her warrior dead'** எனும் கவிதையைப் போர்வீரனின் மனைவி எனுந்தலைப்பில் மொழிபெயர்க்கிறார். போருக்குச் சென்ற கணவனின் சடலம் வீட்டுக்குத் திரும்புகிறது இளம்வயது பெண் விதவையாகி விட்டதை எண்ணி அனைவரும் அழுகின்றனர். ஆனால் அவள் மட்டும் உருக்கிவிட்ட பொற் சிலைபோல் அதிர்ச்சிக்கு ஆளாகி அழாமல் நிற்கிறாள். அழாமல் இருந்தால் அவள் வெடித்துவிடுவாளோ என்று அனைவரும் அழ வைக்க முயலுகின்றனர். அவள் நின்ற கோலத்தைத் தோழர் நல்லகண்ணு அவர்கள் 'மின்னொளி தாக்கிய பொன்னுடல் போன்று துன்புருவாய் துடியிடையாள் நின்றிட்டாள்' என்றவாறு மொழிபெயர்க்கிறார்.

அதனைப் படிக்கிறவர்கள் கம்பன் வரிகளைப் போல் மின் னுவதைப் பார்த்துப் பூரித்துப் போகின்றனர். மேலும் அவள் நின்ற கோலத்தை, செருமுகத்தில் வீரன் செத்து மடிந்திட்டான். மணவாளன் சடலத்தை மனையாள் முன் கிடத்திட்டார். பார்த்தாள். பார்த்தாள். பாத்துக் கொண்டே நின்றாள் என தோழர் மொழிபெயர்த்தது, ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள் எனும் கம்பீரமமான வசனத்திற்குத் தோற்றுவாய் செய்ததுபோல் அமைந்திருக்கிறது.

சீனர்களுடைய சிறைச்சாலையில் படாத பாடுபட்ட வியத் நாமிய வீரன் ஹோசிமின், தம் துயரங்களைப் பாடல்களில் வடிக்கிறான்.

**பாட்டறியேன் ஆனாலும்,
கொடுஞ்சிறைக்குள் வேறு ஏதும்
பாடறியேன் - ஆகையினால்,
பாட்டெழுதிப் பயின்றேன்**

# தோழர் ஆர்.என்.கே.




**விடுதலை வேட்கையின் வகையறிந்து**
**கவிதைகளைப் பாடியே**
**கவலைகளை நான் மறந்தேன்**

என ஹோசிமின் பாடியதைத் தமிழக மக்களுக்கு அறிமுகம் செய்தவர் தோழர் நல்லகண்ணு.

தோழர் நல்லகண்ணு அவர்களின் கர்மயோகத்திற்கு ஒரு நிகழ்ச்சியைச் சான்றாகக் சொல்லலாம். தோழரவர்களின் மூத்த மகளின் மகள் அதாவது பேத்தி சண்முகபாரதி கொடிய காய்ச்சலினால் ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தோழரவர்கள் நாள் தோறும் மருத்துவமனைக்கு வந்து பார்ப்பதும் கட்சிப் பணிகளைப் பார்ப்பதுமாய் இருந்தார். என்றாலும் ஈரோட்டில் அப் பொழுது நடைபெற்றுக் கொண்டிருந்த மாநிலக் குழு கூட்டத்திற்கு தோழர் சென்றுவிட்டார். கவுன்சில் கூட்டம் நடை பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் பேத்தி அமரத்துவம் அடைந்த செய்தியை மேனாள் எம்.எல்.ஏ. ந.பெரியசாமி ஆர்.என்.கேவுக்குப் பக்குவமாகத் தெரிவிக்கின்றார்.

அவரிடம் கவுன்சில் கூட்டம் முடிகின்ற வரையில் யாருக்கும் சொல்ல வேண்டாம் எனச் சொல்லிவிட்டு குழு கூட்டத்தில் முழு ஈடுபாட்டோடு துயரத்தின் சுவடு தெரியாமல் பேசுகிறார். கவுன்சில் கூட்டம் முடிந்தவுடன் சென்னைக்குப் புறப்பட்டு இரவு 12 மணிக்கு வீடு வந்து சேருகிறார். ஆதிக்கவர்க்கத்தின் துப்பாக்கிகளுக்குக் கூட அஞ்சாத அந்தக் கர்மயோகி தேம்பித் தேம்பி அழுததைக் கண்டவர்கள் கரைந்தே போனார்கள்.

சுதந்திர இந்தியாவில் தோழரின் நாட்டமும் நோட்டமும் நீர்மேலாண்மையின் மீதே இருந்து வருகிறது. காவிரியையும் தென்பெண்ணையையும் பாலாற்றையும் அடைமொழி கொடுக்காமல் பாடிய பாரதி வைகைக்கும் தாமிரபரணி ஆறுகளுக்கு மட்டும் தமிழ்க் கண்டதோர் வைகை பொருனை நதி என அடைமொழி கொடுத்துப் பாடுகிறார். தோழரின் தாமிரபரணி ஆற்றைப் பற்றி கவலை அக்கரை பாரதிப் பாடலை மெய்ப்பிக்கின்றது.

**வெள்ளையர்களிடமிருந்து இந்திய மண்ணை காப்பாற்றுவதற்காகத் தோழர் பட்ட பாடுகளைக் காட்டிலும் கொள்ளையர்களிடமிருந்து தாமிரபரணி மணலைக் காப்பதற்குப் பெரிதும் போராட வேண்டியிருக்கிறது. மணற்கொள்ளையர்களை எதிர்த்துத் தோழர் தொடுத்த பொதுநல வழக்கு, கொள்ளையைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே தவிர, அவர்களுக்குக் கொஞ்சம் அச்சத்தைக் கொடுத்திருக்கிறது என்பது உண்மை.**

“மாண்புமிகு நீதிபதி அவர்களே தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஆறுகளிலும் நான் முங்கிக் குளித்திருக்கிறேன். எல்லா ஆறுகளிலும் நீச்சல் அடித்திருக்கிறேன். தமிழ்நாட்டில் 33 ஆற்றுப் படுகைகள் உள்ளன. ஆரணி ஆற்றிலிருந்து கோதையாறு வரையில் எல்லா ஆற்றுத் தண்ணீரையும் அள்ளிக் குடித்திருக்கிறேன். தமிழர்களின் ஆறு மற்றும் வடிகால் சந்தமாகிய போதிய ஞானம் பெற்றுள்ளேன். எதையும் காக்க வைக்கலாம் ஆனால் விவசாயத்தைக் காக்க வைக்க முடியாது என (**‘Any thing can wait, but not agriculture’ by Nehru**) நேருபிரான் சொல்லியதை நினைவுப்படுத்த விரும்புகிறேன்” என நீதிமன்றத்தில் தமது நியாயங்களை வாதங்களாக அடுக்கினார். தோழர் மாவட்ட நீதிமன்றத்தில் தோழருக்குத் தீர்ப்பு கிடைத்தது. தீர்ப்பை எவர் மதிக்கிறார் நம் நாட்டில்.

**‘வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்**
**மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்’**

என்றான் மகாகவி பாரதி.

1970இல் மத்திய அரசின் நீர் மேலாண்மை அமைச்சராக இருந்த டாக்டர் கே.எல்.ராவ் அவர்கள் கங்கை காவிரி இணைப்பில் மிகுதியும் கருத்தாக இருந்தார். அதற்காக நியமிக்கப்பட்ட ‘தஸ்தூர் குழு’வும் இணைப்பு சாத்தியமே என்று அறிக்கை கொடுத்தது. கங்கையில் பாய்ந்து வரும் நீரின் முக்கால் பகுதி, அதாவது 30 கோடி ஏக்கர் அடி தண்ணீர் கடலில் போய்க் கலக்கிறது. இதைத் தடுத்து வறண்ட பகுதிகளுக்குப் பாயச் செய்தால் ஒரு கோடி ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறும் என நிபுணர் குழு எடுத்த கருத்தோடு தோழரும் சில சிந்தனைகளைத் தந்தார்.

கங்கைகாவிரி இணைப்பு 1500 மைல்தான். இதை விட இருமடங்கு அதிக நீளமுள்ள வால்கா–டான் நதிகளை இணைத்து சைபீரியா பாலைவனத்தைச் சோலைவனமாக ஆக்கியிருக்கிறது ருசியா. கங்கைகாவிரி இணைப்பால் 1600 மைல் கரை முழுவதும் செழிப்பாக மாறும் எனத் தோழர் தந்தது செத்தவன் காதில் ஊதிய சங்கு போலாயிற்று.

தோழர் நல்லகண்ணு வரலாற்றில் ஒரு சுவையான செய்தி உண்டு. திருவாரூரை அடுத்துள்ள திருக்கண்ணபுரத்திற்கு விவசாயிகள் சங்கக் கூட்டத்திற்கு வருகிறார் தோழர். அவரிடம் திருவாரூர் வி.பாலகிருஷ்ணன் இரவு முனியோதனச் சாப்பாடு என்றார். அதற்கு ஆர்.என்.கே. முனியோதனம் என்றால் என்னவென்று கேட்கிறார். திருண்கண்ணபுரக் கோயிலில் இரவு பதினொரு மணி பூசைக்குப் பிறகு வழங்கப்படும் பொங்கலுக்கு ‘முனியோதனம்’ எனப் பெயர் என்றார் பாலகிருஷ்ணன்.

தோழர் ஆர்.என்.கே. திருக்கண்ணபுரமோ வைணவத்தலம் முனி எனும் சொல்லோ சைவச் சொல் எப்படி என ஆராய்ச்சியில் ஆழ்ந்தார். கோயில் அலுவலகத்திற்குச் சென்ற அவருக்குச் சில தகவல்கள் கிடைத்தன. வீர சோழ பூபாலன் எனும் சோழ மன்னன் ஆட்சிக் காலத்தில் திருக்கண்ணபுரம் உள்ளிட்ட இருபது ஊர்களுக்குத் தண்டல் வசூலிக்கும் பொறுப்பை முனியன் எனும் கணக்கரிடம் ஒப்படைத்தான் மன்னன்.

முனியன் பெருமாளுடைய பூசை, புனஸ்காரங் களுக்குத் தேவையானவற்றைத் தவறாது வாங்கி வழங்கி வந்தான். கண்ணபுரக்கண்ணன் மேல் தீராக் காதல் ஏற்பட்டு, மிகப்பெரிய வைணவன் ஆனான் முனியன். அத்துடன் திருக்கண்ணபுரத்திலிருந்து ஒரு தாசியையும் நேசித்து வந்தான். திருக்கண்ணபுரத்தைச் சுற்றிய வட்டாரங்களில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. கிராம மக்கள் பசி பட்டினியால் வாடினர். முனியன் மன்னனுக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தை, மக்களின் பசிப்பிணியைப் போக்கச் செலவழித்தான். பெருமாள் பூசைக்கும் அவன் குறை வைக்கவில்லை என்றாலும் மேட்டுக்குடி மக்கள் மன்னனிடம் முனியன் மீது கோள் சுமத்தினர்.

மன்னனும் ஆத்திரம் கொண்டு முனியனை வீதியில் ஒரு தூணில் கட்டி வைத்து, ஒரு காலை மடக்கி வைத்து ஒரு காலால் வெய்யிலில் நிற்கும்படிச் செய்தனர். நெற்றி யில் கல்லெறிந்தனர். கிட்டியால் உடலை நெரித்தனர். தொடைகளில் குறடுகளால் இறுக்கித் துன்புறுத்தினர். வீதியில் அடைத்த அவனைச் சிறைக்குக் கொண்டு சென்று அங்கேயும் சித்ரவதை செய்தனர். கண்ணபுரக்கடவுளே பஞ்சத்தில் வாடிய மக்களுக்குப் பசிக்கு உணவு தந்தேன்.

**‘உள்நிறை அன்பு கொண்டு**
**உறுபொருள் அளித்தேன்**
**கண்ணிறை மாலை வேந்தன்**
**கருதியனாக என்னைப்**
**புண்ணுறச் செய்தான், துன்பம்**
**பொறுக்கிறேன் புனிதமாலே’**

எனக் கதறி அழுதான்.

செய்தியறிந்த முனியனின் காதலி புஷ்கரணியில் மூழ்கி எழுந்து அவளிடம் கண்ணபுரக் கடவுளிடமே விண்ணப்பித்தாள். அன்று சீதையையும் பாஞ்சாலி யையும் காத்தருளித்த பெருமாளே கணிகையாகிய என்னையும் காப்பாற்ற வேண்டும். குற்றம் செய்யாத என் காதலனைச் சிறை மீட்பாய் என் மனத்துயர் துடைப்பாய். வேசி என்று எண்ணாமல் அருள வேண்டும் எனக் கூவி அழுதாள். ஏதுமிலா என் அன்பனிட்ட சிறை நீங்கவுமென் கோதறவுஞ் செய்தாளக் கொள்வாயோ, உள்ளமதில் என முறையிட்டாள். இன்றிலிருந்து ஐந்து நாட்களுக்குள் என் காதலை மீட்காவிட்டால் கொழுங்கனலில் விழுந்து சாவேன் என ஊரறிய சூளுரைத்தாள்.

பெருமாள் கணிகையில் மனமிரங்கி மன்னனுக்குக் கூற மன்னனும் முனியனைச் சிறையிலிருந்து விடுவித்து அவன் காதலியிடம் சேர்ப்பித்தான். முனியன் இரவில் உணவு அருந்தும் முன் கண்ணபுரக் கடவுளின் கரு ணையை நினைத்து வணங்கினான். மறுநாள் நடை திறந்த அர்ச்சகர் மூலவரின் மேனி முழுவதும் பொங்கல் சிதிறியிருப்பதை கண்டு அஞ்சி ஊராரைக் கூட்டினார். முனியனின் பெருமை ஊருக்கெல்லாம் தெரிந்தது. அன்று முதல் அர்த்த ஜாம பூசைக்குப் படைக்கப்படும் பொங்கலுக்கு ‘முனியோதனம்’ எனப் பெயராயிற்று.

பேராசிரியர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் முனியன் சோழ மன்னனுக்குத் தண்டல் தலைவன். திருமால் பக்தியில் சிறந்தவன். முனையதரன் என இவன் பெயரில் வழங்கும் திருவமுதே இவன் பெருமையைச் சாற்றுவதாகும் என எழுதியிருக்கிறார். தோழர் ஆர்.என்.கே. பாட்டாளி வர்க்கத்திற்கு மட்டுமின்றி, பாட்டை ஆள்கின்றவர்களுக்கும் பேருதவி புரிந் திருக்கிறார்.

பெரியவர் நல்லகண்ணு ஐயா வாழ்ந்த வாழ்க்கைச் சிறப்பால் பெரியவர். கடையனுக்கும் கடைத்தேற்றம் தேடியதில் பெரியவர். நகக்கண்ணில் கூட அழுக்குப் படாமல் வாழ்பவர் மணவாள நம்பிகள் இராமானுசரை இன்னும் நூற்றாண்டு இரும் என வாழ்த்தியது போல் நாமும் தோழரை இன்னுமொரு நூற்றாண்டு இரும் என வாழ்த்துவோம்.

*நன்றி : பேசும் புதிய சக்தி*

தொடர்புக்கு : **97907 64664**

## விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட்களின்

# ஒளிவீசும் பங்கு!

**நம் நாடு 75வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும்போது, விடுதலை இயக்கத்தில் ஒருபோதும் பங்கேற்காத வகுப்புவாத, பிற்போக்கு, பிளவுவாத, ஜனநாயக விரோத சக்திகள் ஒன்றியத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருப்பது, நமது சமகால வரலாற்றின் ஒரு முரண்நகை.**

ஆர். எஸ். யாதவ்

ஆர்எஸ்எஸ் தேச விடுதலை இயக்கத்திலிருந்து ஒதுங்கி இருந்தது மட்டுமின்றி, அதன் தலைவர் கோல்வால்கர் தனது ஆதரவாளர்களுக்கு இவ்வாறு கூறினார்: "இந்து மக்களே! பிரிட்டிஷாருடன் போரிட்டு உங்கள் சக்தியை விரயமாக்காதீர், நமது உட்பகைவர்களான முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள் மற்றும் கம்யூனிஸ்ட்களை எதிர்த்துப் போரிட அந்தச் சக்தியைச் சேமியுங்கள்!"

சுதந்திரத்திற்கு முன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்த ஒவ்வொரு உறுப்பினரும் சுதந்திரப் போராட்ட வீரர்களாக இருந்தனர்; அவர்களில் நீண்ட கால சிறை தண்டனை பெற்றவர்கள், வாழ்நாள் முழுமையும் நாடு கடத்தப்பட்டவர்கள், அவ்வளவு ஏன் உயிர்த் தியாகம் செய்து தியாகிகள் ஆனவர்கள் இருந்தனர்.

1943ல் முதலாவது கட்சிக் காங்கிரஸ் மாநாடு நடந்தபோது கட்சியின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 15,563. அந்த எண்ணிக்கையில் 695 தோழர்கள் சிறையில் இருந்தனர், அவர்களில் 105 பேர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள். மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளில் 70 சதவீதத்தினர், ஒன்று அல்லது பல முறை சிறை தண்டனை அனுபவித்தவர்கள்.

ஒட்டுமொத்தமாக அவர்கள் அனைவரும் சேர்ந்து சிறையில் கழித்த காலத்தைக் கணக்கிட்டால் அது 411 ஆண்டுகளாகும். விடுதலைப் பவள விழாவின்போது கம்யூனிஸ்ட்கள் குறித்துப் பெருமிதம் மேலிடுகிறது.

பிரிட்டிஷ் அடிமை நுகத்தடியிலிருந்து பூரண விடுதலை என்ற கோரிக்கையை விடுதலை இயக்கத்தின் மைய இடத்திற்குக் கொண்டு வந்த பெருமை கம்யூனிஸ்ட்களையே சாரும். இந்திய தேசிய காங்கிரஸ், 'ஹோம் ரூல்', 'டொமினியன் அந்தஸ்து', 'பொறுப்பான அரசு' எனப் பலவாறாக 'ஸ்வயராஜ்யம்' குறித்துத் தெளிவின்றி பேசிக் கொண்டிருந்தபோது 'பூரண சுதந்திரம்' என்ற முழக்கத்தைக் கோரிக்கையாக எழுப்பியவர்கள் கம்யூனிஸ்ட்கள். பூரண விடுதலை என்பதன் பொருள், பிரிட்டிஷாரிடமிருந்து முழுமையாகப் பிரிவது என்பதை அவர்கள் முன் வைத்தார்கள்.

**ஹஸ்ரத் மொஹானி பின்னர் 1926 டிசம்பர் 26ம் நாள் இந்திய மண்ணில் கான்பூர் நகரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாடு நடந்தபோது, அதன் வரவேற்புக்குழு தலை வராக இருந்தவர். "ஸ்வராஜ்" என்பதைப் "பூரண விடுதலை மற்றும் அயல்நாட்டு அனைத்து கட்டுப்பாடுகளிலிருந்து விட்டு விடுதலையாவது" என வரையறுக்கும்படித் தீர்மானத்தை முன்மொழிந்தார்.**

"பிரிட்டிஷ் இந்தியாவின் மீதுள்ள தனது இறையாண்மையை மாட்சிமை தங்கிய பேரரசரிடமிருந்து பறித்துவிட போர் தொடுக்கும் சூழ்ச்சியில்" ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டி ஏற்கனவே 1921 டிசம்பரிலேயே கம்யூனிஸ்ட் குழுக்களை விசாரணைக்கு உட்படுத்தினர். 1921 அக்டோபர் 10ல் முதலாவது பெஷாவர் சதி என அறியப்படும் சதி வழக்கு தொடுக்கப்பட்டது. பின்னர் 1921 முதல் 1927க்குள், ஒன்றன் பின் ஒன்றாக, பெஷாவர் சதி வழக்குகள் என ஐந்து வழக்குகள் கம்யூனிஸ்ட்களுக்கு எதிராக ஏவப்பட்டன.

1920களின் முற்பகுதியில் கம்யூனிஸ்ட்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தனர். இருந்தபோதிலும் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கி எறிய வேண்டும் என்ற அவர்களின் எண்ணமே ஆட்சியாளர்களை அவர்களுக்கு எதிராகப் பல்வேறு சதி வழக்குகளைப் புனையத் தூண்டியது.

1924ல் பெஷவார் சதி வழக்குகள் நடந்து கொண்டிருந்தபோது, அரசு போல்ஷ்விக் சதி வழக்கு என்றழைக்கப்பட்ட மற்றொரு வழக்கை சௌகத் உஸ்மானி, முஸாஃபர் அகமது, எஸ் ஏ டாங்கே மற்றும் நளினி குப்தா என்ற நான்கு கம்யூனிஸ்ட்கள் மீது தொடுத்தனர்.

கான்பூர் கம்யூனிஸ்ட் அமைப்பு மாநாட்டில் அதன் தலைவர் சிங்காரவேலர் கட்சியின் நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை விளக்கினார்: "கம்யூனிஸ்ட்களின் இயக்கம், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் இயக்கமாகும்; கட்சியின் உடனடியான இலக்கு, சுயராஜ்யத்தை அல்லது அனைத்து நியாயமான வழிகளிலும் பூரண விடுதலையை நிறுவுவது" என்றார்.

1928வாக்கில், தொழிலாளர் வர்க்க மையங்களில் கம்யூனிஸ்ட் கட்சி கணக்கில் கொள்ளப்பட வேண்டிய சக்தியாகத் தன்னை நிலைநிறுத்தியது. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்குள்ளும் ஓர் இடதுசாரி பிரிவு மலரத் தொடங்கியது. கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் காங்கிரசில் இருந்த இடதுசாரிப் பிரிவினருடன் நெருக்கமாகப் பணியாற்றினர். அவர்கள் காங்கிரசின் மெட்ராஸ் அமர்வில் (1927) பூரண விடுதலை இலக்குக்கான தீர்மானத்தை நிறைவேற்ற வற்புறுத்தினர்.

காங்கிரசின் மெட்ராஸ் அமர்வில் என்ன நிகழ்ந்தது என்பதைச் சுருக்கமாக சொல்வது ஆர்வத்தைத் தூண்டுவதாகும். பம்பாயிலிருந்து வந்த ஒரு கம்யூனிஸ்ட் தலைவரான கே.என். ஜோக்லேக்கர் ஒரு வரி தீர்மானத்தை முன்மொழிந்தார்: "இந்திய தேசிய காங்கிரசின் இலக்கு இந்தியாவுக்குப் பூரண சுதந்திரத்தை வென்று சாதிப்பதாக இருக்க வேண்டும்." அவரும் மற்ற கம்யூனிஸ்ட்களும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க ஜவகர்லால் நேரு முன்னோக்கி நடந்து வந்தபோது ஆச்சரியத்தில் மகிழ்ந்தார்கள். பின்னர் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காங்கிரசின் 1928 டிசம்பர் கல்கத்தா அமர்வில் கம்யூனிஸ்ட்கள் நினைவில் கொள்ளத்தக்க பங்கை ஆற்றினர். இம்மாநாட்டில் மகாத்மா காந்திஜி அறிமுகம் செய்த முக்கிய தீர்மானத்தின் மீது ஜவகர்லால் நேருவும் சுபாஷ் சந்திர போசும் ஒத்த மாதிரியான தன்மையில் திருத்தங்களை முன்மொழிந்தனர். அந்தத் திருத்தங்கள், முன்பு நடந்த மெட்ராஸ் காங்கிரஸ் அமர்வின் முடிவான காங்கிரசின் இலட்சியம் முழுமையான சுதந்திரம் என்ற பிரகடனத்தைக் கல்கத்தா காங்கிரஸ் பற்றி நிற்க வேண்டும் எனக் கோரியது. கம்யூனிஸ்ட்களும் ஏனைய இடதுசாரி சிந்தனையுள்ள தேசியவாதிகளும் இந்தத் திருத்தத்திற்கு வாக்களித்தனர், ஆனாலும் அது குறுகிய வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.

மறுநாள், கம்யூனிஸ்ட்கள் தலைமையில் 50ஆயிரம் தொழிலாளர்கள் பங்குபெற்ற மாபெரும் பேரணி, காங்கிரஸ் தலைவர் மோதிலால் நேருவின் அனுமதி பெற்று, காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்தது; பேரணியில் வந்தவர்கள் பூரண சுதந்திரத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றினர்.

1921 காங்கிரஸ் அலகாபாத் அமர்விலிருந்து நடந்த இந்திய தேசிய காங்கிரசின் ஒவ்வொரு ஆண்டு மாநாட்டிலும் கம்யூனிஸ்ட்களால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் பலன் அளித்தது என்பதை நாம் உய்த்துணர முடியும்; மேலும் முக்கியமாகக் கம்யூனிஸ்ட்கள் தலைமையில் தொழிலாளர் வர்க்கம் கல்கத்தா காங்கிரஸ் அமர்வின்போது (1928) ஏற்படுத்திய தாக்கம், காங்கிரஸ் தலைவர்களிடம் ஒரு நேர்மறை விளைவை ஏற்படுத்தியது; அடுத்த ஆண்டு அமர்வு 1929 டிசம்பர் 31ல் லாகூரில் நடந்தபோது பூரண விடுதலைக்கான தீர்மானம் இந்திய தேசிய காங்கிரசால் நிறைவேற்றப்பட்டது.

விடுதலை இயக்கத்தில் கம்யூனிஸ்ட்கள் வகித்த பங்கைப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கடுமையாகக் கருதினர். முக்கியமாக, தொழிலாளர் வர்க்கம் கம்யூனிஸ்ட்களால் ஒன்று திரட்டப்படுவது குறித்து அவர்கள் கவலை கொண்டனர். கம்யூனிஸ்ட்களின் தலைமையிலும் வழிகாட்டலிலும் நாடெங்கும் பல்வேறு இடங்களில் தொழிலாளர்கள் தங்கள் பொருளாதாரக் கோரிக்கைகளை எழுப்பி அதற்காகப் போராடியதுடன் மட்டும் நிற்காமல், தொழிலாளர்கள் அரசியல் கோரிக்கைகளை எழுப்பியதுடன் அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள்.



### மீரட் சதி வழக்கும் விளைவும்

1929 மார்ச் 20ல் அரசு பெரும்பான்மையான கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் வர்க்கத் தலைவர்களை மீரட் சதி வழக்கில் கைது செய்தது. இந்தியா முழுவதும் 31 தலைவர்களும் பின்னர் மேலும் ஒருவருமாகக் கைது செய்யப்பட்டனர். வழக்கு தேசிய மற்றும் சர்வ தேசிய அளவில் பிரம்மாண்டமான விளம்பரம் பெற்று பிரபலமானது. மீரட் வழக்கு கைதிகளுக்கு ஆதரவு பக்கபலமாகக் காங்கிரசும்கூட தீவிரமாக வந்தது. காந்திஜி, டாக்டர் அன்சாரி மற்றும் பலர் அவர்களில் முக்கியமானவர்கள்.

உருவாகி வந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் வர்க்கத்தின் தலைவர்களைக் கைது செய்ததன் மூலம் தேசிய இயக்கத்திலிருந்து கம்யூனிஸ்ட்களைத் தனிமைப்படுத்துவதில் ஆட்சியாளர்கள் வெற்றி பெற முடியவில்லை; இது மீரட் கைதி களுக்குக் காங்கிரஸ் அளித்த ஆதரவிலிருந்து மிகத் தெளி வாகிறது.

### சட்ட மறுப்பு இயக்கம்

1930 பிப்ரவரி 14 16ல் சபர்மதியில் கூடிய காங்கிரஸ் செயற்குழு "சட்ட மறுப்பு இயக்க"த்திற்கு அறைகூவல் தந்தது. மார்ச் 1930ல் உப்பு சட்டத்தை மீறி காந்திஜி உப்பு சத்தியாகிரகம் தொடங்கினார். அந்த முழுமையான முன்னெடுப்பு தண்டி கடற்கரையில் பிரம்மாண்டமான மக்களின் ஆதரவைப் பெற்று, கடல் நீரிலிருந்து உப்பு எடுக்கப்பட்டது. எதிர் விளைவாக ஆட்சியாளர்கள் மிகக் கொடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டனர்.

1930ல் காந்திஜி மீரட் சிறையில் வந்து சந்தித்தபோது வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கம்யூனிஸ்ட்கள் அவரிடம், சட்ட மறுப்பு இயக்கத்திற்குக் கம்யூனிஸ்ட்களின் ஆதரவை உறுதி அளித் தனர்.

காங்கிரசின் கராச்சி அமர்வில் (ஏப்ரல் 1931) சிபிஐ தனது பொதுமேடை செயல்திட்ட வரைவை வினியோகித்தது. அந்த ஆவணம் தேசியப் போராட்டம் குறித்த தனது அணுகுமுறையைக் குறிப்பிட்டு எதுவும் அப்படியே கூறவில்லை அல்லது கம்யூனிஸ்ட்கள் தேசியப் போராட்டத்தில் பங்கேற்பதைத் தடையும் செய்யவில்லை. ஆனால் சில கம்யூனிஸ்ட்கள் பங்கேற்றபோது அவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர்; எனினும், குழுவாதப் புரிதல் காரணமாகவும் பொதுமேடை வரைவறிக்கையில் இயக்கத்தில் சேருமாறு உற்சாகமான அறைகூவல் இல்லாத காரணம் மற்றும் காங்கிரஸ் தலைமை குறித்து அதனது எதிர்மறை அணுகுமுறை குறிப்பாகக் காகிரசின் இடதுசாரிப் பிரிவின்பால் எதிர்மறை கருத்து காரணமாக, பொதுவாகக் கம்யூனிஸ்ட்கள் சட்ட மறுப்பு இயக்கத்திலிருந்து ஒதுங்கியே இருந்தனர்.

மீரட் கைதிகள் ஒவ்வொருவராக விடுதலையாகி வரத் தொடங்கியதும் சிதறிக்கிடந்த கம்யூனிஸ்ட்களை மீண்டும் ஒன்று திரட்டி அமைப்பு ரீதியாக கட்சி நன்கு கட்டப்பட்டு செயல்படத் தொடங்கியது. இதற்கு முன் அழிவேற்படுத்தும் குழுவாதப் பாதையில் எல்லா வகையிலும் திருத்தங்களை மேற்கொள்ளும் கடமையைக் கட்சி மேற்கொண்டது.

### புதிய பாதை

சிதறிக் கிடந்த தொழிற்சங்க ஒற்றுமை மீண்டும் சீரமைக்கப்பட்டு கட்சி, காங்கிரசைச் சுற்றி ஒன்றுபட்ட தேசிய முன்னணியைக் கட்ட முயன்றது. கட்சியில் ஒற்றுமை கட்டப்பட்டு அனைத்திந்திய அளவில் மத்தியில் சட்ட இதழ் அதன் நடவடிக்கைகளை அமைப்பு ரீதியாக ஒருங்கிணைத்தது. இந்திய தேசிய காங்கிரசுக்குள் அதன் பணிகள் நன்கு அமைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. காங்கிரசுக்குள் இடதுசாரி சக்திகளுடன் ஒத்துழைத்த கட்சி, தேசிய விடுதலைக்கான அனைத்துப் போராட்ட இயக்கங்களிலும் ஒற்றுமையை வலியுறுத்தியது.

1935 இறுதியை நோக்கி டாக்டர் கங்காதர் அதிகாரி, எஸ்.வி.காட்டே மற்றும் எஸ்எஸ் மிராஜ்கர் அடுத்தடுத்து கைது செய்யப்பட, சோமநாத் லாகிரி சிபிஐ பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர், ஜார்ஜ் டிமிட்ரோவ் அறிக்கை மற்றும் "தத் பிராட்லே தீசிஸ்" அடிப்படையில் புதிய அரசியல் ஆய்வறிக்கை வரைவைத் தயார் செய்தார். கட்சியில் புதிய திருப்பம் ஏற்பட்டது.

இந்திய தேசிய காங்கிரஸ் லக்னோ அமர்வில் (1936 ஏப்ரல்) கம்யூனிஸ்ட்கள் தீவிரமாகப் பங்கேற்றனர். ஜவகர்லால் நேரு அப்போது காங்கிரஸ் தலைவர். அவரது மனைவி கமலா இறந்த பின் ஐரோப்பாவிலிருந்து அப்போதுதான் அவர் திரும்பி இருந்தார். ஐரோப்பாவில் அவர் ரஜனி பால்மே தத் உட்பட பல கம்யூனிஸ்ட் தலைவர்களைச் சந்தித்திருந்தார். அவரும் டிமிட்ரோ அறிக்கையையும் பார்த்துள்ளார். அவை அனைத்தும் அவரிடம் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி இருந்ததை மாநாட்டில் அவரது தலைமை உரையில் உணர முடிந்தது.

"இந்தியப் பிரச்சனைகளுக்கான தீர்வு சோஷலிசத்தில் உள்ளது என்பதில் உடன்பட்டு நான் நம்புகிறேன்." தடைசெய்யப்பட்ட சிபிஐ மற்றும் காங்கிரஸ் அமர்வின் பிரதிநிதிகளான விரல்விட்டு எண்ணும் கம்யூனிஸ்ட்கள், காங்கிரஸ் சோஷலிஸ்டுகளுடன் இணைந்து நேருவின் உரையை ஆதரித்தனர்.

### காங்கிரசில் சுபாஷ் சந்திர போஸ் தலைமை

1938ன் பிற்பகுதியில் சிபிஐ, தடைசெய்யப்பட்டிருந்தாலும், சுபாஷ் சந்திர போசைக் காங்கிரஸ் தலைவர் பொறுப்புக்கு நிறுத்த வேண்டும் என்ற யோசனையை முன்வைப்பதில் முன் நின்றது. தேர்தலில் போஸ் 1575 வாக்குகள் பெற்று, 1375 வாக்குகள் பெற்ற வலதுசாரி அணியின் வேட்பாளர் பட்டாபி சீத்தாராமையாவைத் தோற்கடித்தார். ஆனால் அவர்கள் சுபாஷ் சந்திரபோசை ஒரு போதும் முறையாகச் செயல்பட அனுமதிக்கவில்லை; வெறுத்துப் போன போஸ் தலைவர் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்தார்.

போஸின் மறு தேர்வு நிச்சயமாக நாட்டில் வளர்ந்து வந்த தீவிரமயமாக்கலைச் சுட்டிக் காட்டியது. அந்த நேரத்தில் பாம்பே தேர்தல்கள் நடந்தபோது அதிகபட்ச வாக்குகள் பெற்ற டாக்டர் அதிகாரியுடன் பிசிசி (ப்ரொவிஷனல் சென்ட்ரல் கமிட்டி) கம்யூனிஸ்ட்கள் சிறப்பாக வெற்றி பெற்றார்கள்; மேலும் பாம்பே முனிசிபல் தேர்தல்களில் நான்கு கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் கூடுதல் வாக்குகள் பெற்றனர்.

### இரண்டாவது உலகப் போர்

1939 செப்டம்பரில் 2வது உலகப் போர் தொடங்கியபோது, போர் நெருக்கடியைத் தேசிய விடுதலையைச் சாதிக்கப் புரட்சிகரமாகப் பயன்படுத்துவதே இந்திய மக்களின் கடமை என்று 1939 செப்டம்பரில் சிபிஐ பொலிட் பீரோ பிரகடனப்படுத்தியது.

அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்குமுறையில் இறங்கியது. நாடெங்கும் கம்யூனிஸ்ட்கள் மற்றும் பிற தீவிரப் பிரிவுகளை வேட்டையாடத் தொடங்கியது. 1941 ஜனவரியில் உள்துறை உறுப்பினர் ரெஜினால்டு மேக்ஸ்வெல், '700 பேர் விசாரணையின்றி சிறைக்காவலில் அடைக்கப்பட்டதில் சுமார் 480பேர், அநேகமாக விதிவிலக்கின்றி, நாடறிந்த கம்யூனிஸ்ட்கள் அல்லது கம்யூனிஸ்ட் திட்டத்தின் தீவிர ஆதரவாளர்கள்' என்று தெரிவித்தார்.

1941 ஜூன் 22ல் ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கியது. இது போரில் புது திருப்பமாக அமைந்தது. போரின் தன்மை மாறிவிட்டதாகக் காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. சோவியத் யூனியன், சீனா மற்றும் பாசிச சக்திகளால் அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளுக்குத் தனது தார்மிக ஒருமைப்பாட்டை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி 1942 ஜனவரியில் பிரகடப்படுத்தியது;

மேலும் போருக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழங்கி, "தேசப் பாதுகாப்புக்காகத் தேசிய அரசு" என்ற கோரிக்கையை கோரியது. அந்தக் கோரிக்கையை அரசு நிராகரித்தது.

### வெள்ளையனே வெளியேறு இயக்கம்

இதன் பிறகு, 1942 ஆகஸ்ட் 7, 8ல் பாம்பே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. அதில் போராட்ட இயக்கத்திற்கான எந்தத் தயாரிப்பும் இல்லாவிட்டாலும், புகழ்பெற்ற "வெள்ளையனே வெளியேறு" தீர்மானத்தை நிறைவேற்றியது. அரசு உடனடியாகப் பொறுப்பில் இருந்த தலைவர்களைக் கைதுசெய்தது. மக்கள் கூட்டம் அரசின் கொடுமையான நடவடிக்கைக்கு எதிர்வினை

>> தொடர்ச்சி 11ம் பக்கம்




# மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரனுக்கு விருது

சாகித்திய அகாதெமி, பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரியோடு இணைந்து நடத்திய ‘இந்திய சுதந்திரத்தின் 75 ஆம் ஆண்டு சிறப்புப்பார்வையில் தமிழ் இலக்கியம்’ எனும் தலைப்பிலான ஆய்வுக் கருத்தரங்கம் பொள்ளாச்சியில் கடந்த ஆக.22, 23 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இக்கருத்தரங்கத் தொடக்க விழாவில், இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழர்கள் பங்கை 20 ஆண்டுகளுக்கு முன்பே ‘விடுதலை வேள்வியில் தமிழகம் ’ என்ற தனது நூலின் மூலமாக வெளிக்கொண்டு வந்த வரலாற்று ஆய்வாளரும் மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவருமான த.ஸ்டாலின் குணசேகரனுக்கு சாகித்திய அகாதெமி , என்.ஜி.எம் கல்லூரியோடு இணைந்து ‘சுதந்திரச்சுடர் ’ என்ற விருதை வழங்கியது.

இந்த ஆய்வுக் கருத்தரங்கத் தொடக்க விழாவின் ஒரு அங்கமாக நடைபெற்ற இவ்விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டு இவ்விருதை சாகித்திய அகாதெமியின் செயலாளர் கே.ஸ்ரீனிவாசராவ் வழங்கினார். சாகித்திய அகாதெமியின் தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம் இந்நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

# வெண்மணிக் காப்பியம் நூல் அறிமுகம், கவிஞர் வாய்மைநாதனுக்கு பாராட்டு விழா

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த வாய்மேடு கிராமத்தைச் சேர்ந்த கவிஞர் வாய்மைநாதன் எழுதிய வெண்மணிக் காப்பியம் நூல் அறிமுகம் வெளியீடு, நூலாசிரியருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

பஞ்சநதிக்குளம் மேற்கு ஊராட்சி, ராமசாமி பெருமாள் கோயில் திருமண அரங்கத்தில் நடைபெற்ற விழாவுக்கு கலை இலக்கியப் பெருமன்ற வேதாரண்யம் கிளையில் தலைவர் த.குழந்தைவேலு தலைமை வகித்தார். அமைப்பின் மாவட்டச் செயலாளர் தென்னடார் அம்பிகாபதி வரவேற்றார். அமைப்பின் நாகை மாவட்டத் தலைவர் கவிஞர் புயல் குமார், துணைத் தலைவர்கள் எம்.ஆர்.சுப்பிரமணியன், ப.பார்த்தசாரதி, ஊராட்சித் தலைவர் மணிமேகலை பாண்டியன், புரவலர்கள் இரா.கணேசன், அரு.கந்தசாமி, ப.தவமணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் சிவருகு.பாண்டியன், முன்னாள் செயலாளர் எஸ்.சந்பந்தம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கலை இலக்கியப் பெருமன்றத்தின் பொதுச் செயலாளர் மருத்தவர் த.அறம், எழுத்தாளர் வாய்மைநாதன் எழுதி, நியூ செஞ்சுரி புத்தக நிலையம் வெளியிட்டுள்ள வெண்மணிக் காப்பியம் நூலினை வெளியிட, நாகை தொகுதி மக்களவை உறுப்பினர் எம்.செல்வராசு பெற்றுக்கொண்டார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நாட்டுப்புறவியல் துறைத் தலைவர் முனைவர் இரா.காமராசு நூலாசிரியரின் படைப்புகள் குறித்து ஆய்வுரை நிகழ்த்தினார். வெண்மணிக் காப்பியம் நூல் குறித்து கவிஞர்கள் சித.கருணாநிதி, சு.பாலாஜி, க.ரமேஷ், சு.பாஸ்கரன் ஆகியோர் பேசினார்.



விழாவில் பங்கேற்ற எழுத்தாளர் உதயை மு.வீரையன், இலக்கியங்களின் இன்றைய நிலை குறித்து சிறப்புரை நிகழ்த்தினார். கவிஞர் வை.முத்துவின் 10 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ,மாணவியருக்கு சான்றுகளுடன் பரிசுகள் வழங்கப்பட்டது.

விழாவின் நிறைவில் வெண்மணிக் காப்பியம் நூலாசிரியர் எழுத்தாளர் வாய்மைநாதன் ஏற்புரையாற்றினார்.

>> 10ம் பக்கத் தொடர்ச்சி

யாற்றி பரவலாக எதிர்பில் இறங்கியது. தேசிய விடுதலைக்காகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பெருந்திரள் மக்களின் கிளர்ச்சி ஏறத்தாழ தன்னெழுச்சியாக நடைபெற்றது. அரசு மிகக் கொடூரமான அடக்குமுறையைக் கைக்கொண்டது. அரசாங்க அறிக்கைகளின்படி, 1942 ஆகஸ்ட் 9லிருந்து 31வரை கைது செய்யப்பட்டவர்கள் 60,229, தடுப்புக் காவலில் 18,000 மற்றும் போலீஸ் அல்லது இராணுவத் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்வர்கள் 940பேர்.

பல கம்யூனிஸ்ட் தலைவர்கள் தியோலி தடுப்புக் காவல் முகாமில் இருந்தனர். கட்சி தடை செய்யப்பட்டிருந்த நிலையில் வெளியே தலைமறைவு மையம் செயல்பட்டது; தியோலி முகாமில் சிறைவைக்கப்பட்டிருந்தவர்களிடமிருந்து அவர்களுக்குக் கட்சியின் பாதை மாற்ற ஆலோசனையைக் கூறி 1941 டிசம்பரில் ஓர் ஆவணம் அனுப்பப்பட்டது.

1941 பிப்ரவரியில் பொலிட் பீரோ ஒரு தீர்மானத்தில் இவ்வாறு கூறியது: “மக்கள் போரில், மக்களுக்கு உரிய பங்கை ஆற்றும் வகையில், இந்திய மக்களை மாற்றுவோம்.” தேசத்திற்கு அப்பாலும், தேசத்திற்குள்ளும் மாபெரும் எண்ணிக்கையிலான மக்கள் திரள்களுக்கு கூடுதல் விரிவான விடுதலைக்கு, நாட்டின் மக்களும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் போரிட உறுதி ஏற்கப்பட்டது. அந்தப் போர், யுத்தத்தை மக்கள் போராக மாற்றிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரானதாகட்டும். 1942 ஜூலையில் சிபிஐ மீதான தடை நீக்கப்பட்டு, கட்சி சட்டபூர்வமாகச் செயல்படத் தொடங்கியது.

போர் முயற்சிகளை ஆதரிக்கச் சிபிஐ முன்வந்தது எனினும், நாட்டின் சுதந்திரத்திற்கான கோரிக்கையில் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளவில்லை. இந்தப் புதிய காலகட்டத்தில் விடுதலைப் போராட்டத்திற்கான குறிப்பிட்ட யுத்தியைக் கட்சியும் சரியாகத் திட்டமிட்டது; அது, தேசத்தைப் பாதுகாக்க வேண்டி தேசிய அரசை வெல்வதற்கான தேசிய ஒற்றுமை. என்ற அடிப்படையில் பல கம்யூனிஸ்ட் தலைவர்கள் நாட்டின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வெளிப்படையாக வந்தனர்; கைதாயினர், மேலும் போராட்ட இயக்கத்தில் பங்கேற்றபோது கொல்லப்பட்டு உயிர்த் தியாகமும் செய்தனர்.

### போர் முடிவும் உலகில் மக்கள் எழுச்சியும்

1945 மே 9ல் பெர்லின் வீழ்ந்ததும் உலகப் போர் முடிவுக்கு வந்தது. அது காலனிய எதிர்ப்பு மற்றும் தேசிய விடுதலை இயக்கங்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. விரைவில் உலகெங்கும் சோஷலிஸ்ட் மற்றும் தேசிய விடுதலை புரட்சிகளின் மக்கள் எழுச்சி ஏற்பட்டது. போருக்குப் பிறகான இந்த மக்கள் எழுச்சி இந்தியாவிலும் வேகம் கொண்டது. 1945 இரண்டாவது பாதியில் வேலைநிறுத்தங்கள் அதிகரித்து விரைவாக வலிமை பெற்றன. இரயில்வே மற்றும் தபால் துறைகளில் வேலை நிறுத்தங்களும் பல்வேறு நகரங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்பாட்டங்களும் நடைபெற்றன. கொல்கத்தாவில் 1945 நவம்பர் 11ல் நடந்த பெருந்திரள் ஆர்பாட்டங்கள் மோதல்களாக, தெருச் சண்டைகளாக மாற தடுப்புகள் அமைக்கப்பட்டன.

### விவசாயிகளின் வீரம் செறிந்த போராட்டங்கள்

தொழிலாளர் வர்க்க வேலைநிறுத்தங்கள் தவிர நாட்டின் பல பகுதிகளில் விவசாயிகள் எழுச்சி பெற்று போராட்டங்கள் நடத்தினர்; சில உதாரணங்கள்: ஒளிவீசும் தெலுங்கானா ஆயுதப் போராட்டம், புகழ்பெற்ற வங்கத்தின் தெபகா இயக்கம், மாண்ட்கோமரி குத்தகைதாரர்கள் போராட்டம், ‘சுயமாகப் பயிர் செய்து வந்த விவசாயி’யை பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றுவதை எதிர்த்துப் பீகாரில் விவசாயிகள் நடத்திய ‘பகாஷ்ட் இயக்கம்’ மற்றும் வார்லி, தஞ்சாவூர், மலபார், உனாவ் முதலிய விவசாயிகள் போராட்டங்கள் பலப்பல.

உண்மையில், பெரும்பாலான போராட்டங்கள் சிபிஐ கட்சி அமைத்து தலைமை தாங்கப்பட்டவை. தொழிலாளர் வர்க்க, விவசாயிகளின் பொருளாதாரக் கோரிக்கைகளுடன் இப்போராட்டங்களின்போது தவறாமல் எப்போதும் தேச விடுதலை கோரிக்கை எழுப்பப்பட்டது. பெருமளவு இப்போராட்டங்கள் அரசியல் தன்மையைப் பெற்றன.

### இராணுவ வீரர்கள் போராட்டமும் சிபிஐ கட்சியும்

மேலும் 1946 ஜனவரியில் பாம்பேயில் விமானப்படை ஊழியர்களின் வேலைநிறுத்தம் நடைபெற்றது; பின்னர் ராயல் இந்திய கடற்படை தொடங்கிய வேலைநிறுத்தம் மாபெரும் எழுச்சியானது.

வேலைநிறுத்தம் செய்த கடற்படை வீரர்கள் தங்கள் கப்பல்களில் மூன்று கொடிகளை ஏற்றினர்; அவை, காங்கிரஸ், முஸ்லீம் லீக் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் கொடிகள். வேலைநிறுத்தம் தானா, கராச்சி, கொல்கத்தாவிற்குப் பரவியது. பிப்ரவரி 21 வாக்கில் முழுமையான ராயல் இந்திய கப்பற்படையும் வேலைநிறுத்தத்தில் இணைந்தது. பிரிட்டிஷ் இராணுவப்படைகள் வரவழைக்கப்பட மோதல்களும் துப்பாக்கிச் சூடும் நடந்தன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவலில் அன்றைய தினமே பாம்பேயில் ஹர்த்தால் கதவடைப்பும், தொழிலாளர்கள், மாணவர்களின் வேலைநிறுத்தம் மற்றும் தார்மிக ஒருமைப்பாட்டு ஆர்பாட்டங்களும் நடைபெற்றன.

இரத்தம் சிந்திய மோதல்கள் நிகழ்ந்தன, பிப்ரவரி 23ல் தடுப்புகள் அமைக்கப்பட்டன. இராணுவ சிக்னல் படையணியினர் ஜபல்பூரில் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். பிப்ரவரி 23, 24ல் பாம்பேயில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 270பேர் கொல்லப்பட்டனர், 1700பேர் காயமடைந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பல தோழர்கள் இருந்தனர். கமல் தோண்டே அவர்களில் ஒருவர். புரட்சிகரமான இராணுவம், கப்பற்படை, விமானப்படை வீரர்களுடன் தொழிலாளர் வர்க்கம் தோளோடு தோள் நின்றது வரலாற்று முக்கியத்துவம் உடையது. குறைந்த காலத்திற்குத்தான் என்றாலும் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒற்றுமையைக் கொண்டு வந்தது,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி. போருக்குப் பின் ஏற்பட்ட இந்த மாபெரும் எழுச்சி பிரிட்டிஷ் அரசின் நம்பிக்கையைக் குலைத்தது. நிலைமையைப் புரிந்து கொண்ட உணர்வுநிலைக்கு வந்த அவர்கள் இந்தியாவுக்குச் சுதந்திரத்தை அறிவித்தனர். இன்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன் 1947 ஆகஸ்ட் 15ல் இந்தியா விடுதலை அடைந்தது !

தமிழில் : **நீலகண்டன்**

*நன்றி : நியூஏஜ் (ஆக.28 செப்.3)*

# மேல் பொறுப்புக்கு உயரும் தலித் அறிவுசார் பெருமக்களை வீழ்த்தும் பார்முலா



திருச்சி தந்தை பெரியார் அரசு கல்லூரியில் எப்போதெல்லாம் உயர் பொறுப்புக்கு தலித் பேராசிரியர்கள் வருகிறார்களோ அப்போதெல்லாம் அவர்கள்மீது மொட்டை கடிதம் போட்டு அந்த கடிதத்தின் மீது விசாரணை என்ற பெயரில் அவர்களின் வளர்ச்சியை தடுத்து நிறுத்தும் போக்கினை உண்மையறியும் குழு பத்திரிகையாளர் சந்திப்பில் அம்பலப்படுத்தியது.

கோடிக்கணக்கில் பணம் புழங்கும் பொறுப்பான தேர்வு கட்டுப்பாட்டாளர் என்ற பொறுப்புக்கு பணியமர்த்தப்பட இருந்த நிலையில் அந்தப் பேராசிரியர் மீது மொட்டை புகார் ஒன்று அனுப்பப்பட்டு அதில் பாலியல் புகார் இருப்பதாக தெரிவித்து அந்த கடிதத்தின் அடிப்படையில் அவரது முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் சதிவலை சாதி வன்மம் கொண்ட சில பேராசிரியர்களால் நடத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு கல்வி நிறுவனம் பேராசிரியர் லட்சுமணன் தலைமையில் பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், சமூக அமைப்பினர், ஊடகவியலாளர் உள்ளிட்ட எட்டு பேர் கொண்டு உண்மை அறியும் குழு அமைக்கப்பட்டு அதில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் கீ.சு.குமார் இடம் பெற்று இருந்தார்.

கல்லூரிக்குள், கல்லூரிக்கு வெளியில் மாணவர்கள் பேராசிரியர்கள் ஆசிரியர் சங்கங்கள் முன்னாள் பேராசிரியர்கள் பெற்றோர்கள் என பல தரப்பிலும் இரண்டு நாள் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது

சாதிவெறியோடு செயல்படும் சில பேராசிரியர்களின் சதி சூழ்ச்சி அம்பலப்படுத்தப்பட்டது.

கடந்த 4ஆம் தேதி என்று இந்த உண்மை அறியும் குழுவின் ஐந்து பக்க அறிக்கை திருச்சி பத்திரிக்கையாளர் மன்றத்தில் பத்திரிக்கையாளர் சந்திப்பில் முன்வைக்கப்பட்டது.

இச் செய்தி பல்வேறு ஊடகங்களிலும் வெளியிடப்பட்டுள்ளது.

குழுவின் அறிக்கை தமிழக முதலமைச்சர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் கல்லூரி கல்வி இயக்குனரகம் கல்வித்துறை செயலாளர் கல்வித் துறை அமைச்சர் விசாகா கமிட்டி உள்ளிட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**– கீ.சு.குமார்**

## இந்த வார தம்பிக்குறள்

### 86. ஈனுங்கால் இன்னல்

**ஈனுங்கால் ஏற்படும் இன்னலாங் கேற்படும்**
**தோணுங்கால் தொல்லை புதிது.**

ஒரு தாய் மகப்பேறு காலத்தில் படும் இன்னல் எத்தகையதோ, அத்தகைய இன்னலே புதிய கருத்துக்களைப் படைக்கும் போது உண்டாகும். (தாய் பல நாள் குழந்தையைச் சுமத்து உருவாக்குவது போல படைப்பாளனும் பல நாட்கள் கருத்துக்களைச் சுமத்து படைக்கிறான். குழந்தை பெற்றபின் தாய்க்கு இன்பம். படைப்பு படைத்தபின் எழுத்தாளனுக்கு இன்பம் (உவமையணி).

**அரிய செயலென்ப ஒன்றில்லை ஆஅய்ந்**
**தறிந்திணைப்பின் ஆகும் அரிது.**

எந்தச் செயலையும் காலம் இவற்றுடன் இணைத்துச் செய்தால் ஆகாத செயல் என்று எதுவும் இல்லை, அனைத்தும் கை கூடும்.



## ஜனசக்தி கட்டுரையாளர் தி.ராஜ்பிரவினுக்கு விருது

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வேளாண் விரிவாக்கத் துறையில் இணை பேராசிரியராகப் பணி புரியும் திரு. தி.ராஜ்பிரவீன் நமது ஜனசக்தி வார இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார். இந்தக் கட்டுரைகளுக்காக, சிறந்த பொது கட்டுரைக்கான விருதினை டெல்லியில் செயல்படும் வேளாண் அறிவியல் தமிழ் இயக்கம் அளித்துள்ளது. விருதாளரை ஜனசக்தி வாழ்த்துகிறது.




அசோக் லேலண்ட் நிறுவனம் சார்பில்

## Road to School திட்டம்

தளி தொகுதி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அசோக் லேலண்ட் நிறுவனம் சார்பில் Road to School திட்டம் மற்றும் மதகொண்டப்பள்ளி எம்.எம்.எஸ். பள்ளியில் எண்ணும் எழுத்தும் திட்டங்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி துவக்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## கட்சிக் கிளை துவக்க விழா



மதுரை புறநகர் மேலூர் பகுதியில் உள்ள கக்கன் காலனியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் புதிய கட்சி கிளை துவக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் கட்சி கொடியை தோழர் பாண்டியம்மாள் ஏற்றினார். மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் பா.காளிதாஸ், மேலூர் தாலுகா செயலாளர் சுரேஷ்குமார், மாவட்டக் குழு உறுப்பினர்கள் மெய்யர், திலகர் மற்றும் பெண்கள் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

விநாயகர் ஊர்வலத்தில் மின்சாரம் தாக்கி

## உயிரிழந்தவர் குடும்பத்தினருக்கு சிபிஐ தலைவர்கள் ஆறுதல்

இராஜபாளையம் அருகிலுள்ள சொக்கநாதன்புத்தூரில் விநாயகர் சதுர்த்தி விழா நடைபெற்றது. அதில் விநாயகர் ஊர்வல சப்பரத்திலுள்ள கம்பி சாலை ஓரமுள்ள டிரான்ஸ்பார்மரில் உரசியது. உடனே மின்சாரம் பாய்ந்து சொக்கநாதன்புத்தூரைச் சேர்ந்த முனீஸ்வரன்(24), மாரிமுத்து (33) ஆகிய இருவரும் இறந்தனர். படுகாயமடைந்த செல்வகிருஷ்ணன், செல்லபாண்டி, முப்பிடாதி ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தகவலறிந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினர் தி. இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் , தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜன் ஆகியோர் விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர். அரசு இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் குடும்பத்திற்கு நிவாரண நிதி வழங்கவும் சிபிஐ சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.



## உயர்கல்வி உறுதித் திட்ட நிதி வழங்கும் விழாவில் டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ.

தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதி திட்டம் புதுமை திட்டத்தின் கீழ் அரசு பள்ளியில் பயின்ற 2401 மாணவிகளுக்கு மாதந்திரம் ரூ.1000 வழங்கும் நிகழ்ச்சியில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகள் விடுதலை

# இந்திய மாதர் தேசிய சம்மேளனம் ஆர்ப்பாட்டம்




குஜராத் மாநிலத்தில் பில்கிஸ் பானு என்ற இஸ்லாமிய பெண்ணை கூட்டு பாலியல் குற்றமிழைத்த பதினோரு குற்றவாளிகள் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் சுதந்திர தினத்தை முன்னிட்டு மேற்கண்ட 11 குற்றவாளிகளும் குஜராத் அரசால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

போஸ்கோ சட்டத்தில் குற்றவாளியாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த மேற்கண்ட கைதிகளுக்கு சிறை சிறப்பு விதிகள் பொருந்தாது என்ற நிலையில், குஜராத் அரசாங்கம் இந்த 11 குற்றவாளிகளையும் சிறை யிலிருந்து விடுவித்தது செல்லாது. ஆகவே மேற்கண்ட குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து மீண்டும் சிறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் குடியரசுத் தலைவருக்கு கோரிக்கை மனு அனுப்பும் இயக்கமும் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

**தஞ்சாவூர் :** தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ம.விஜயலட்சுமி தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி துவக்கி வைத்து பேசினார். மாவட்ட தலைவர் எஸ்.தனசீலி, துணைச் செயலாளர் எஸ்தர் ஜெயலீமா, மாவட்ட பொருளாளர் இரா.ஸ்ரீதேவி, தஞ்சை மாநகரச் செயலாளர் ஆர்.பத்மாவதி, தலைவர் எஸ். ராஜலட்சுமி, தஞ்சை ஒன்றிய செயலாளர் எஸ்.மல்லிகா, ஒரத்தநாடு எஸ். எலிசபத், பட்டுக்கோட்டை நகரம் ஜி.ஜானகி, ஒன்றியம் எஸ்.சகுந்தலா, பேராவூரணி கலைச்செல்வி, மதுக்கூர் ஜெனிதா, திருவோணம் ஜி.தவமணி, சேதுபாவாசத்திரம் கனகம், ஏ ஐ டி யூ சி மாவட்ட தலைவர் வெ.சேவையா, துணை செயலாளர் துரை. மதிவாணன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

**கும்பகோணம்:** கும்பகோணம் கோட்டாட்சியரிடம் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் டி.கண்ணகி, மாவட்ட தலைவர் பி.தாமரைச்செல்வி தலைமையில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் எம்.ராஜலட்சுமி, க.கண்ணகி, பா.சரண்யா, எஸ்.பரிமளா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புதுக்கோட்டை : புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பாக மாவட்டச் செயலாளர் ஆர்.இந்திராணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் துணைத் தலைவர் எம்.ஜெயா, மாதர் சங்க நிர்வாகிகள் நூர்ஜகான், கே.பஞ்சவர்ணம், எஸ்.பரமேஸ்வரி, கோமதி, மணிமேகலை, ஆர்.தேவி, ஏ.நளினி, முருகாயி, சிங்கம்மா, பொன்னம்மாள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை மாதர் சங்கத்தின் மாவட்ட தலைவர் எஸ். சுப்புலட்சுமி தொடங்கி வைத்தார். இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மாநிலத் துணைச் செயலாளர் மு.க.கண்ணகி கோரிக்கை விளக்க உரையாற்றினார்.

# குடியிருக்கும் வீடுகளை இடித்து மக்களை தெருவில் நிறுத்துவதை தடுக்க வேண்டும்

திருத்துறைப்பூண்டி ஒன்றியக்குழு தீர்மானம்

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் ஒன்றிய குழு தலைவர் அ.பாஸ்கர் தலைமையில் துணைத் தலைவர் வழக்கறிஞர் ராமகிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கொருக்கை ஊராட்சி, தலைக்காடு, கண்ணன் மேடு பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மூன்று தலை முறைகளாக வாழ்ந்து வருகின்றன. இந்தக் குடும்பங்கள் குடியிருந்து வரும் நிலத்தில் ஏரி இருந்ததாகவும், மக்கள் நீர் நிலைப் பகுதிக்கான இடத்தை ஆக்கிரமித்து, குடியிருப்பதாகவும் கூறி வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை உதவியுடன் வழிவழியாக வாழ்ந்து வரும் குடும்பங்களை வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் இதற்கு நீதிமன்ற உத்தரவை ஆதாரமாக காட்டி கொருக்கை ஊராட்சியில் ஏரி இருந்ததற்கான எந்த தடயங்களும், அடையாளங்களும் இல்லாத நிலையில், அரசு ஆவணத்தில் 37 ஏக்கர் பரப்பளவில் ஏரி இருப்ப தாக கூறி குடியிருப்புகளை அகற் றும் நடவடிக்கையில் தீவிரம் காட்டு கிறார்கள். இதனால் இப்பகுதியில் கடுமையான பதற்ற நிலை ஏற்பட் டுள்ளது.

அண்மை ஆண்டுகளில் ஏற்பட்ட புயல், பெருமழை, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்கள் எதிலும் தலைக் காடு, கண்ணன் மேடு பகுதி யில் உள்ள குடும்பங்கள் எவ்வித



பாதிப்புக்கும் ஆகாத நிலை யில் இயற்கை சீற்றங்களால் பதிக்கப் படாத, நீர் தேக்கம் எதுவும் இல்லாத தலைக்காடு, கண்ணன் மேடு நிலப்பகுதியை வகை மாற்றம் செய்து, குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு மனைப்பட்டா வழங்கிடவும் இந்த நிலப்பகுதியும் நீர்நிலைப் பகுதி என குடும்பங்களை வெளியேற்றும் நடவடிக்கையில் வருவாய்த்துறை தீவிரம் காட்டுகிறது.

அரசு ஆவணங்களில் நீர்நிலைப் பகுதி அல்லது ஆட்சேபகரமான நிலப்பகுதி என வகைப்பாட்டில் உள்ள நிலப்பகுதியின் நடப்புக்காலத் தன்மையை புலத்தணிக்கை செய்து, குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு மனைப் பட்டா வழங்குவது அல்லது மாற்று இடத்தில் வீடுகள் கட்டிக் கொடுத்து. மறுவாழ்வை உறுதி செய்து வெளியேற்றுவது என்று முடிவெடுக்கும் வகையில் அதிகாரம் கொண்ட மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழு அமைக்க வேண்டும்.

மாவட்ட அளவில் அமைக்கப்படும் உயர்மட்டக் குழுக்கள் ஆய்வு செய்யும் காலத்தை நிர்ணயித்து, இதற்கு தகுந்தபடி, அரசின் வருவாய்த்துறை மாண்பமை உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்து, வீடுகளை அகற்றுவதை தடுத்து நிறுத்த வேண்டும் எனவும்

பாரதிதாசன் பல்கலைக்கழகத் திற்கு உட்பட்ட 10 மாதிரி உறுப்பு கல்லூரிகளாக செயல்பட்டு வந்த கல்லூரிகளை கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் அரசு கல்லூரிகளாக செயல்பட்டு வருமென அரசு அறி வித்து செயல்பட்டு வருகிறது. நமது ஒன்றியத்தில் தண்டலச்சேரியில் அரசு கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த கல்லூரியில் பணி யாற்றி வரும் கௌரவ விரிவுரை யாளர்களுக்குநிலுவைத்தொகையாக கடந்த 25 மாதங்களாக இதுவரை வழங்கப்படாமலும் ஜூன் ஜூலை ஆகஸ்ட் ஆகிய மூன்று மாத காலம் பணியாற்றியவர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதாலும் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்த கல்லூரியில் உள்ளிருப்பு போராட்டம் ஆகஸ்ட் மாதம் முதல் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

தமிழக அரசும் பாரதிதாசன் பல்கலைக்கழகமும் உடனடியாக அவர்களின் கோரிக்கைகளை பரி சீலனை செய்து நிறைவேற்றித் தரவும் உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வரும் கௌரவ விரிவுரையாளர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என ஒன்றிய குழு கூட் டம் தமிழக அரசை கேட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## வ.உ.சி. இழுத்த செக்கை,

# சிறை வளாகத்திற்கு வெளியே வைக்க வேண்டும்



## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சி. யின் 151 பிறந்த நாளை அடுத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கோவை மத்திய சிறை வளாகத்திற்குள் வைக்கப் பட்டுள்ள செக்கிற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆறுமுகம், கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பேசிய எம்.ஆறுமுகம் வ.உ.சி. இழுத்த செக்கை சிறை வளாகத்திற்கு வெளியில் வைக்க வேண்டும் என்று என்று வலியுறுத்தினார். இது சம்மந்தாமாக தமிழக முதல்வருக்கு கட்சியின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் வி.எஸ்.சுந்தரம், ஜே.ஜேம்ஸ், மு.வ.கல்யாணசுந்தரம், மாமன்ற உறுப்பினர்கள் சாந்தி சந்திரன், பிரபா ரவீந்திரன், வக்கறிஞர் கே.சுப்பிரமணியன், எஸ்.ராதாகிருஷ்ணன், தமிழ் நாடு கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் ப.பா. ரமணி, மத்திய மனமண்டல செயலாளர் கே.ரவீந்திரன், வடக்கு மண்டல செயலாளர் ஏ.சி.செல்வராஜ், மேற்கு மண்டல செயலாளர் என்.சந்திரன், மதுக்கரை கே.ஆர்.தங்கராஜ், வி.அர். பாண்டியன், ஜீவா, கொட்டியப்பன், ராபர்ட், எம்.வி.ராஜன், மீனாட்சி சுப்பிரமணியன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தமிழக முதல்வருக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் “சுதந்திரப் போராட்ட வீரர், செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரம் அவர்கள் இரட்டை ஆயுள் தண்டனை பெற்று கோவை மத்திய சிறையில் நீண்ட காலம் அடைக்கப் பட்டு, கடும் சித்தரவதைகளை அனுபவித்தார். அவர் சிறைபட்டு இருந்த காலத்தில் மாடுகள் இழுக்கும் செக்கை இழுக்க வைக்கப்பட்டார். அவர் இழுத்த செக்கு, கோவை மத்திய சிறை வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இது ஆண்டுக்கு இருமுறை மட்டுமே முக்கிய அரசியல் கட்சிகள் மற்றும் மன்றங்களுக்கு மட்டுமே பார்க்க மற்றும் மரியாதை செலுத்த அனுமதி அளிக்கப் படுகிறது. பொதுமக்கள் பார்க்க அனுமதிக்கப் படுவதில்லை.

வ.உ.சி. இழுத்த செக்கை பொதுமக்கள் பார்வையிடும் வகையில் பொது இடத்தில் வைக்கவேண்டும் என்பது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்டு பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். எனவே, அந்த செக்கை கோவை வ.உ.சி. பூங்கா அல்லது வ.உ.சி. பூங்கா மைதானத்தில் வைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தாங்கள் மேற்கண்ட கோவை மக்களின் விருப்பத்தை தமிழக முதல்வருக்கு தெரிவித்து செக்கை பொது இடத்தில் வைக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்” என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

**திருச்சி :** வ.உ.சி. அவர்களின் பிறந்த தினத்தையொட்டி திருச்சி கோர்ட் அருகிலுள்ள அவரது திரு வுருவச்சிலைக்கு மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, ஏஐடியூசி மாவட்ட செயலாளர், 23வது மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், இடைக்கமிட்டி செயலாளர்கள் எம்.ஆர்.முருகன், சுரேஷ் முத்துசாமி, சையது அபுதாகீர், மாணவர் பெருமன்றம் ஜி.ஆர்.தினேஷ், கே.இப்ராஹிம், பாட்ஷா, கௌதம், பெல் சங்கம் லோகநாதன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் சூர்யா உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் மாற்று திறனாளிகளுக்கு வேலை அட்டை வழங்குக

## வி.தொ.ச. கோரிக்கை

தருமபுரி மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் வேலை செய்ய மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை அட்டை வழங்கப்பட்டு 50% பணி செய்து தின சம்பளம் பெற்றுவந்தனர். ஆனால் இவ்வாண்டு 2022–2023 ற்கான வேலை அட்டை புதியதாக கடந்த ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை ஐந்து மாதங்களாக வழங்கப்படவில்லை நல்லம்பள்ளி வட்டாரத்தில் இருக்கும் கிராம ஊராட்சிகளில் அதனால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் வேலை அட்டை பெற்ற மாற்றுத்திறனாளிகள் எவ்வித வேலை யின்றி பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மாவட்ட நிர்வாகம் இதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து மாற்றுத்திறனாளிகளுக்கு உடனே வேலை வழங்க வேண்டுமாய் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பில் கேட்டுக் கொள்ளவதாக அச்சங்க மாவட்ட செயலாளர் ஜெ பிரதாபன் தெரிவித்துள் ளனர்.

# போரில்லாத அமைதியான உலகத்தை உருவாக்குவோம்!

## சர்வதேச அமைதி நாளில் உறுதி ஏற்பு

உலக தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் ஐ எல் ஓ ஐக்கிய சபை நாடுகள் அறிவிப்பின்படி ஜெர்மனி போலந்து மீது போர் தொடுத்த இரண்டாம் உலகப் போரின் துவக்கமான 1946 செப்டம்பர் ஒன்றாம் தேதியை சர்வ தேச அமைதி நாளாக அறி வித்து ஆண்டு தோறும் உலக அமைதி நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூரில் ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் உலக அமைதி நாள் கடைபிடிக்கப்பட்டு, உறுதி ஏற்கப்பட்டது. நிகழ்வில் உலக அமைதிக்கு எதிரான, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையில் உள்ள நேட்டோ கூட்டமைப்பை உடனே கலைக்க வேண்டும், ஏகாதிபத்திய மற்றும் கார்ப்பரேட்டுகளின் லாபத் திற்காக உழைக்கும் மக்களை சுரண் டக்கூடாது, ரஷ்யா உக்ரைன் போரை உடனே நிறுத்த வேண்டும் ,சர்வதேச அளவில் அந்தந்த நாடுகளில் மனித உரிமைகள் ,ஜனநாயகம் பாதுகாக்க வேண்டும், ஏகாதிபத்திய நலன்களுக்கான அரசியல் யுத் தம் நடத்தக்கூடாது என்று ஆர்ப்பாட் டத்தில் வலியுறுத்தப்பட்டது. முடிவில் போர் இல்லாத அமைதியான உல கத்தை உருவாக்குவோம், மனித உரிமைகளையும், தொழிலாளர் உரிமைகளையும், ஜனநாயகத்தையும் பாதுகாப்போம் என்று உறுதி ஏற்கப் பட்டது. தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் முன்பு நடைபெற்ற உலக அமைதி நாள் ஆர்ப்பாட்டத்திற்கு ஏ ஐ டி யூ சி மாவட்ட செயலாளர் ஆர். தில்லைவனம் தலைமை வகித்தார். மாநில செயலாளர் சி.சந்திரகுமார், மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்ட துணைச் செயலாளர் துரை. மதிவாணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ஆவடி:** உலகத் தொழிற்சங்கங் களின் சம்மேளன அறைகூவலுக்கு இணங்க, உலக அமைதி தினத்தை முன்னிட்டு, ‘உலக அமைதிக்கான தொழிற்சங்க நடவடிக்கை தினம்‘ சென்னை ஆவடியில் அனுசரிக் கப்பட்டது.

இந்த நிகழ்வினை திருவள்ளூர் மாவட்ட ஏஐடியூசி ஏற்பாடு செய்திருந்தது. கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் தோழர். மயில்வாகனன் தலைமை வகித்தார். கீதிஜிஹி வின் துணைப் பொதுச் செயலாளர் சி.ஸ்ரீகுமார், போருக்கு எதிராகப் பாதிக்கப்படும் உலகத் தொழிலாளர்கள் அணி திரண்டு போராட வேண்டிய அவசியத்தையும், உலக அமைதியைச் சீர்குலைக்கும் நேட்டோ ராணுவக் கூட்டமைப்பு கலைக்கப் பட வேண்டியதன் அவசி யத்தையும் குறிப்பிட்டு கூட்டத்தின் நோக்க உரை ஆற்றினார். ஆர்ப் பாட்டத்தில் தொ. மு.ச பேரவை மற்றும் எச்.வி.எப் நிர்வாகிகள் முறையே முகமது மீரான் மற்றும் முரளி ஆகியோரும் உரை ஆற்றினர். AIDEF மூத்த தோழர் என்.ஜே.ராமன் நிறைவுரை ஆற்றினார்.



# திருச்சி பொன்மலை தியாகிகளுக்கு அஞ்சலி!

திருச்சி பொன்மலை மண்ணில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம் பெனிக்கு எதிராய் வர்க்கப் போராட்டத்தை நடத்தி, தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடி, வெள்ளைய ஏகாதிபத்தியத்தின் துப்பாக்கி குண்டுகளால் கொல்லப்பட்ட வீர தியாகிகள் ராஜீ, ராமச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி, தியாகராஜன், தங்கவேலு ஆகியோரின் நினைவு நாளை முன்னிட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், ஏஐடியூசி மாவட்ட செயலாளர், 23வது மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், இடைக்கமிட்டி செயலாளர்கள் எம்.ஆர்.முருகன், சுரேஷ் முத்துசாமி, சையது அபுதாகீர், மாணவர் பெருமன்றம் ஜி.ஆர்.தினேஷ், கே.இப்ராஹிம், பாட்ஷா, மேற்கு பகுதி ஆர்.ரவீந்திரன், ஆர்.ஆனந்தன், ,நாகராஜ், ஸ்ரீரங்கம் பகுதி துணை செயலாளர் சந்தோஷ், ஏர்போர்ட் ராஜா, ஆட்டோ செந்தில் உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



# தோழர் எம்.தனலட்சுமி மறைவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்ட 46 வது வட்ட கிளை பொருளாளர் ஜி.முத்துகிருஷ்ணன் மனைவியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருமான எம்.தனலட்சுமி(49) செப்.5 அன்று இயற்கை எய்தினார். அவருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம் சார்பாக மலர் வைத்து அஞ் சலி செலுத்தப்பட்டது. இதில் வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, பெரம்பூர் தொகுதி செயலாளர் ஆர்.கோட்டி சுரேஷ், மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஏ.சுப்பிரமணி, கருணாகரன், நாகராஜ், அருள், கிளைச் செயலாளர்கள் வெங்கடேசன், மூர்த்தி மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

# உரிமை மீட்பு உண்ணாவிரத போராட்டம்

திருப்பரங்குன்றம் முருகன் கோவில் பகுதியில் சரவண பொய்கை அமைந்து உள்ளது. சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் சுமார் 15 அடி ஆழத்தில் அமைந்து உள்ள இந்த பொய்கையில் கோவிலுக்கு வரும் பக்தர்கள், சுற்றுலா பயணிகள் மற்றும் முடி காணிக்கை செலுத்துபவர்கள் நீராடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், சரவண பொய்கையில் நீர் மாசடைவதாக கூறி துணி துவைக்க, குளிக்க கோவில் நிர்வாகம் தடை விதித்துள்ளது. மேலும் பொய்கைக்குள் சோப்பு, ஷாம்பு மற்றும் மாசுபடக்கூடிய ரசயான பொருட்களை யாரும் பயன்படுத்தக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், திருப்பரங்குன்றம் சரவண பொய்கையில் குளிக்க, துணி துவைக்க அனுமதிக்க கோரி கோவில் நிர்வாகத்தை கண்டித்து உரிமை மீட்பு உண்ணாவிரத போராட்டம் நடத்தினர். இதில் 100 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட புறநகர் செயலாளர் முத்துவேல், சி.பி.ஐ மகாமுனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கலை இலக்கியப் பெருமன்றம் வேலூர் மாவட்டப் பேரவை


தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற வேலூர் மாவட்டப் பேரவை கூட்டம் குடியாத்தம் பீடித்தொழிலாளர் சங்க அலுவலகத்தில் செப். 4 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராசிரியர் எஸ்.தோதாத்ரி, கணபதி இளங்கோ ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர். இரா. முல்லை, த. ஆனந்தன் குடியாத்தம் நகர கட்சி செயலாளர் மற்றும் தங்கவேலு ஏஐடியுசி ஆகிய தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர். பொறுப்பாளர் தேர்வு நடந்தது அதன் விவரம் வருமாறு:

மாவட்ட தலைவராக பேராசிரியர் தோ. ரகுராமன், மாவட்ட செயலாளராக திருலோகச்சந்தர், மாவட்ட பொருளாளராக தியாகராசன், மதிப்புறு தலைவராக முனைவர் ர.பூங்குன்றன் ஆகியோர் தேர்வு செய்யப் பட்டனர். 9 பேர் கொண்ட நிர்வாகக் குழு தேர்வு செய்யப்பட்டது.

## பாசறை நோக்கிப் படைகள் திரும்பட்டும்

பாசறை நோக்கி படைகள் திரும்பட்டும் என்ற தலைப்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா. முத்தரசன் கட்சி அணிகளை அரசியல் படுத்த வாரந்தோறும் ஜனசக்தியில் எழுதிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். சமூக தளத்திலும், அரசியல் களத்திலும் ஒவ்வொரு வாரமும் நிகழ்கிற அன்றாட நிகழ்வுகளையும், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச் செய்திகளையும் கடைநிலை தோழர்களும் எளிமையாக புரிந்து கொள்கிற வகையில் எழுதியுள்ளார்.

பாசறையில் இருந்து படைகள் புறப்படட்டும் என்று சொல்வார்கள். ஆனால் முத்தரசன் படைகள் திரும்பட்டும் என்று ஏன் குறிப்பிடுவார் என்ற ஐயம் அனைவருக்கும் எழலாம். அதற்குத்தான் தனது முதல் கட்டுரையில் விளக்கம் சொல்லி உள்ளார். நாம் போர்களங்களில் பெற்ற வெற்றி, தோல்விகளை கணக்கிட்டு எதிரிகளை எவ்வாறு வீழ்த்துவது என்கிற வியூகம் வகுப்பதற்கும், தங்களை மேலும் மேலும் வலுப்படுத்தி போர்களத்தில் வலிமையாக மோதுவதற்கும் படைகள் பாசறைக்கு திரும்புவது அவசியம் என்பதை நூலாசிரியர் விளக்கியுள்ளார்.



பாசறை பயிற்சி என்பது கிளை, இடை கமிட்டி, மாவட்ட, மாநில, அகிலஇந்திய மாநாடுகளில் விவாதித்து எடுக்கப் படும் அரசியல் தீர்மானங்களை செயல்படுத்தும் வீரர்களாக ஒவ்வொரு கட்சி உறுப்பினரும், கட்சி அணிகளும் ஆயத்தமாக வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார்.

நமது கட்சியின் மதிப்புமிக்க தலைவர்கள் என். கே. கிருஷ்ணன், பார்வதி கிருஷ்ணன் ஆகியோர் தொழிலாளி வர்க்கத்திற்கு ஆற்றிய பணிகளை மிக உருக்கத்தோடு குறிப்பிட்டிருக்கிறார். அவர்கள் வழியில் நாம் தொழிலாளி வர்க்கத்தை அமைப்பாகத் திரட்ட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார்.

இந்நூலுக்கு முன்னுரை எழுதிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று "அனைவரது மனங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் மிக அருமையான கருத்துக்களாக இருக்கிறது. இக்கடிதங்கள் அரசியல் கட்டுரைகளாக இல்லாமல் அறிவார்ந்த எழுச்சி உரைகளாக அமைந்திருக்கிறது" என்று மிகச்சரியாகவே குறிப்பிட்டுள்ளார்.

பாசறை நோக்கி படைகள் திரும்பட்டும் என்ற இந்த நூலை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் மிக அருமையாக வெளியிட்டுள்ளது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்.

**– சமரன்**

நூலாசிரியர் : இரா. முத்தரசன்
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 050
பக்கங்கள் : 214 விலை: ரூ.190

# நூல் நயம்

## வீடுதோறும் அறிவொளியே தேடி வருகுது...!

அரசு அலுவலராக இருந்து ஓய்வு பெற்ற கவிஞர் கா.சு. அகஸ்தியன் வீடுதோறும் அறிவொளியே தேடி வருகுது என்கிற இக்கவிதை இந்நூலை எழுதி இருக்கிறார். சிந்தனையை கிளறும் பல நல்ல கவிதைகள் இந்நூலில் உள்ளது. "விடுதலை என்பது தியாகிகள் செய்த, வேள்வியில் விளைந்த விளைச்சல் அப்பா : வேள்வித்தீயில் மாண்டவர் எத்தனை ஆயிரம் என்பதை அறிவீரோ?" என்கிற கேள்வி எழுப்பி நமது விடுதலைப் போராட்ட வீரர்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆர்வத்தை தூண்டுகிறார். இந்திய நாடு விடுதலை பெற எத்தனை எத்தனை மாவீரர்கள் தங்கள் ரத்தத்தை சிந்தினார்கள், கொட்டடியில் வதைபட்டார்கள், அடிபட்டவர்கள் என்பதை நாம் அறிய வேண்டாமா?

"செக்கை இழுத்து கசையடி பட்டு,கண்ணீர்விட்டு பெற்றதப்பா இதை மாடாய் எண்ணி தரகைப்பேசி வீணில் விற்க எண்ணுவதோ?" என்ற நியாயமான கேள்வியை எழுப்புகிறார். நமது முன்னோர்கள் கட்டி எழுப்பிய பொதுத்துறை நிறுவனங்களை எல்லாம் இன்றைய ஊதாரி மத்திய அரசு ஒவ்வொன்றாக விற்று வரு கிறது, அனைத்தையும் தனியாருக்கு விற்று விட்டால் எஞ்சி இருக்கப்போவது நாடாளுமன்ற கட்டிடம் மட்டுமே,அதையும் ஒருநாள் மோடி கூட்டம் விலை பேசி விற்று விடுமோ என்னமோ தெரியவில்லை?



"உதிக்கின்ற சூரியனும் ஒளி வீசுகின்ற சந் திரனும், உனக்கா?எனக்கா? ஓடி வரும் ஆற்று நீரும், ஓசையிடும் கடலலையும் உனக்கா? எனக்கா?. எனக்கே எனக்கே என்றாலே துன்ப மடா : நமக்கே நமக்கு என்றாலே இன்பமடா " எது இன்பம்?அனைத்தும் பொதுவில் இருந்து அதை அனைவரும் அனுபவித்தால் அது இன்பம். அதை விடுத்து எனக்கு மட்டுமே சொந்தம் என்கின்ற பேராசை இருந்தால் அது துன்பமாகத்தான் இருக்கும் என மனிதனின் பேராசையில் ஒரு குட்டு வைக்கிறார்.

"ஆணென்றும் பெண்ணென்றும் பேதமின்றியே, அறிவுதனை வளர்ப்பதிலே போட்டியிடுவதால், அடுத்து வரும் தலைமுறைகள் சிறப்பாகுமே: அதனாலே நாடெல்லாம் செழிப்பாகுமே " அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று வீட்டில் பூட்டி வைக்காமல் அவர்களை சமமாக கல்வி கற்க வைப்பதன் மூலமாகவே உலகம் இன்னும் செழிப்படையும் என குறிப்பிடுகிறார். பெண் கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குகிறார். பல்வேறு சிறப்பான கவிதைகள் இந்நூலில் உண்டு. பல அறசீற்றமான கவிதைகளும் இதில் அடங்கியுள்ளது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும். **– இன்சுவை பாரதி**

நூலாசிரியர் : கவிஞர் க. சு. அகஸ்தியன்
வெளியீடு : மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண்: 1447, 7,தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை – 17
பக்கங்கள் : 164 விலை: ரூ.160

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 600014

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்

# பசிப்பிணி போக்கிட மானியங்கள் தொடர வேண்டும்

உலக நாடுகள் பசி மற்றும் ஏழ்மையை எதிர்கொண்டு வரும் நிலையில், உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம் உள்ளிட்ட அமைப்புகளின் நிபந்தனைகளின் பெயரால், ஏழை மக்கள் நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்த மானியங்களை நிறுத்திட, பெரும்பாலான வளர்ச்சியடையாத மற்றும் வளரும் நாடுகள் கட்டாயப்படுத்தப்படுகின்றன. இதுபோன்ற நடவடிக்கைகள் ஏழ்மையின் பிடியில் சிக்கித் தவித்து வரும் மக்களை மேலும் வஞ்சிப்பதாக உள்ளன.

பசியில் வாடும் மக்களுக்கு உணவளிப்பது தர்மத்தின் தொன்மையான வடிவங்களில் ஒன்றாகும். பல்வேறு நாடுகளில் அந்த மரபு இன்றும் தொடர்ந்து வருகிறது. அமெரிக்காவில் உணவுச் சீட்டுகள் (Food Stamps), பிரிட்டனில் உணவு வங்கிகள் (Food Banks), ஜப்பான் நாட்டு பள்ளிகளில் இலவச மதிய உணவு, எகிப்து நாட்டின் நேரடி மானிய திட்டங்கள், இந்தியாவில் விலை பொருட்கள் மீதான விலை கட்டுப்பாடு என்று பல வடிவங்களில் பசிக் கொடுமையைக் களையும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல நாடுகளில் அத்தியாவசியப் பண்டங்கள் மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டில் மட்டும் உலகின் 800 மில்லியன் மக்கள் (80 கோடி) போதுமான உணவின்றிப் பசியால் துன்புற்றனர். இதுபோன்ற சூழலில் மக்கள் நல நடவடிக்கைகள் அளவிலும், பண்பிலும் மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதே ஒருவர் எதிர்பார்க்கக் கூடியதாகும்.

நுகர்வோருக்கான நேரடி மானியம் – குறிப்பாக ஆதரவு தேவைப்படுவோரை மட்டுமே இனங்கண்டு வழங்கப்படும் மானியம் (Targeted Subsidy) – என்ற முறைதான் பசிக் கொடுமையை போக்குவதற்கான மிகச்சிறந்த வழிகளில் ஒன்றாகும் என்று பரவலாக கூறப்பட்டு வருகிறது. உலக அளவில் உணவு மற்றும் வேளாண் துறைக்கு வழங்கப்பட்டு வரும் மானியம் 630 மில்லியன் அமெரிக்க டாலராகும். இதில் நுகர்வோருக்கான நேரடி மானியம் வெறும் 72 பில்லியன் அமெரிக்க டாலராகும் என்பது கவனிக்கத்தக்க விஷயமாகும். எனவே, நுகர்வோருக்கான நேரடி மானியம், பசிக் கொடுமையைப் போக்குவதற்கான தீர்வாகாது என்பது தெளிவாகிறது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் நுகர்வோருக்கான மானியம் வேளாண் துறை உற்பத்தி மதிப்பில் 4.6 சதவீதமாகும். ஏழை நாடுகளில் இந்த எண்ணிக்கை 0.6 சதவீதம் மட்டுமே.

முக்கியமான விஷயம் என்னவென்றால், இறுதியாக விவசாயிகளுக்கு கிடைப்பது எவ்வளவு என்பதுதான்? விதை மற்றும் உரங்களுக்கான உள்ளீடு மானியமாக 92 பில்லியன் டாலர், மேலும் சுற்றுச்சூழல் காரணிகள் அல்லது பொதுவான வேளாண் உற்பத்தி அளவு, சாகுபடி செய்யப்படும் விளை நிலங்கள் அடிப்படை யிலான பரந்துபட்ட ஆதரவுக்கென 152 பில்லியன் டாலர் செலவழிக்கப்படுகிறது. இதில் பெரும்பகுதி வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சென்று சேருகிறது. இதன் காரணமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள உற்பத்தியாளர்களுக்கு, உற்பத்தியில் 24 சதவிகிதம் என்ற அளவிற்கு ஊக்கத்தொகையாக கிடைத்து விடுகிறது. சீனா மற்றும் பிரேசில் போன்ற மத்திய தர வருவாய் பிரிவில் உள்ள நாடுகளில் இந்தத் தொகை 16 சதவிகிதம் என்ற அளவிற்கு வீழ்ச்சி அடைந்துள்ளது.

செல்வ வளம் குறைவாக உள்ள நாடுகளில் உள்நாட்டு நுகர்வோர்களுக்கு உதவும் வகையில் விலையைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஏற்றுமதி மீதான தடை, சர்வதேச வர்த்தக கட்டுப்பாட்டு கட்டணங்கள் மற்றும் இதர சந்தைசார் நடவடிக்கைகள் விலை குறைப்புக்கு பதிலாக விலையேற்றத்திற்கே வித்திட்டு வருகிறது. இது போன்ற நடவடிக்கைகள் விளைபொருட்கள் மீதான வரியைப் போல் எதிர்வினை புரிவதால், விவசாயிகள் சாகுபடியில் போதிய அளவிற்கு ஈடுபட்டு உற்பத்தி செய்திட விருப்பமற்றவர்களாக உள்ளனர். மேலும் இதுபோன்ற நடவடிக்கைகள் இந்தியா போன்ற நடுத்தர வருவாய் பிரிவில் உள்ள நாடுகளில் உற்பத்தி செலவை 4 சதவிகிதம் அளவிற்கு அதிகரிக்கச் செய்கிறது என்பதோடு குறைந்த வருவாய் பிரிவில் உள்ள ஆப்பிரிக்க நாடுகளில் உற்பத்தி செலவை 9 சதவிகிதம் அளவிற்கு அதிகரிக்கச் செய்கிறது.


இந்தப் பிரச்சினையை தீர்ப்பது மிகப்பெரிய சவாலாகும். விவசாயத்திற்கான ஆதரவு ஒரு முறை நிறுவப்பட்டு விட்டால் பிறகு அதனை பறிப்பது மிகக் கடினமாகும் என்பதை அமெரிக்க வேளாண் சட்ட வரைவுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது வேளாண் கொள்கைத் திட்டத்தின் பின்புலத்தில் உள்ள அரசியலை உற்றுநோக்கிப் பார்ப்பவர்கள் நன்கறிவர். அதிகப்படியான மானியம் வழங்கப்படும் வேளாண் துறையில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் ஊரகப் பகுதிகளில் வருவாய் இழப்பிறகு இட்டுச் செல்லும்.

பெரும்பாலான வளரும் நாடுகளில் மிகக் குறைந்த விலையில் உணவளிப்பதே நமது பிரதான நோக்கம் என்பது தெளிவாகவில்லை. முதலாளித்துவ சமுதாய அமைப்பும், உற்பத்தி முறையும் மனிதநேயமற்றது என்பதை எதிர்வரும் உணவு தட்டுப்பாட்டு நெருக்கடியும் நிரூபணம் செய்து வருகிறது.

## உலகை அச்சுறுத்தும் உணவுத் தட்டுப்பாடு:

# ரஷ்யாவின் உதவியைக் கோரும் ஐ.நா.பொதுச் செயலாளர் !

2023ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சர்வதேச அளவில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும், அதுபோன்றதொரு உலக நெருக்கடியைத் தவிர்த்திட ரஷ்ய நாட்டின் உரங்கள் மற்றும் உணவு தானியங்கள் எவ்வித தடையுமின்றி சர்வதேச சந்தையைச் சென்றடைய வேண்டும் என்று ஐ.நா.பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்ரஸ் வலியுறுத்தியுள்ளார்.



உலக அளவிலான கோதுமை தானிய வழங் கலில் ரஷ்ய மற்றும் உக்ரைனின் பங்களிப்பு 25% ஆகும். 2020 ஆண்டு புள்ளி விபரங்களின் படி,

கோதுமை ஏற்றுமதியில் ரஷ்யாவின் பங்கு சுமார் 20 %, உக்ரைனின் பங்கு 8% ஆகும். கோதுமை இறக்குமதியைப் பொறுத்தவரையில் சுமார் 50 நாடுகள் அவற்றின் மொத்த இறக்குமதியில் 30% அளவிற்கு ரஷ்யா மற்றும் உக்ரைனைச் சார்ந்துள்ளன.

மக்காச்சோள உற்பத்தியில் உக்ரைன் உலக அளவில் 8வது இடத்திலும், ஏற்றுமதியில் 4வது இடத்திலும் உள்ளது. இதுதவிர, சூரியகாந்தி எண்ணெய் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் வித்துக்கள் ஏற்றுமதியில் உக்ரைன் முதலிடம் வகிக்கிறது.

மேற்கண்ட விபரங்கள், உக்ரைனில் நடைபெற்று வரும் இராணுவ மோதல்கள் உலகின் பல நாடுகளில் உணவு நெருக்கடியை ஏற்படுத்தக் கூடியது என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

கடந்த பிப்ரவரி மாதத்தில் இருந்து, சில மாதங்களாகவே ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே போர் நடைபெற்று வருகிறது. இந்தச் சூழலில், உணவு தானியங்களுக்காக ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளைச் சார்ந்துள்ள பல நாடுகளில் உணவுத் தட்டுப்பாடு மற்றும் நெருக்கடி ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

மோசமான பின்விளைவுகளை உண்டாக்கக்கூடிய இந்த நெருக்கடியைத் தவிர்த்திட, உலகின் பல நாடுகளை உணவுத் தட்டுப்பாடு பிரச்சினையிலிருந்து பாதுகாத்திட, ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே கடந்த ஜூலை மாதம் உணவு தானிய ஏற்றுமதிக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்திட கூட்டு ஒருங்கிணைப்பு குழு ஒன்று அமைக்கப்பட்டது. ரஷ்யா, உக்ரைன், துருக்கி ஆகிய நாடுகளும், ஐ.நா.சபையும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளன.

ரஷ்யா மீதான மேற்குலக நாடுகளின் பொருளாதாரத் தடைகள் நடைமுறையில் இருப்பினும், அந்நாட்டின் வேளாண் விளைபொருட்களையும், அங்கு உற்பத்தி செய்யப்படும் உரங்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திட இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது. இதன் நீட்சியாக, ரஷ்ய நாட்டு உணவு தானியங்கள் மற்றும் உரங்கள் தங்கு தடையின்றி சர்வதேச சந்தைகளைச் சென்றடையும். இதுவே இந்த ஒப்பந்தத்தின் மற்றுமொரு முக்கியமான பகுதியாகும்.

ரஷ்யா - உக்ரைன் மோதல் காரணமாக கடந்த சில மாதங்களாகவே உக்ரைன் நாட்டின் உணவு தானிய ஏற்றுமதி தடைபட்டிருந்தது. இதன் காரணமாக உணவு தட்டுப்பாடு நெருக்கடி ஏற்படும் என்ற அச்ச உணர்வு பரவிக்கொண்டிருந்தது.

கடந்த ஜூலை மாதம் கையெழுத்தான இந்த ஒப்பந் தத்தின்படி ஆகஸ்ட் மாதம் தொடங்கி இதுவரையில் ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் டன் எடையுள்ள உணவு தானியங்கள் மற்றும் வேளாண் விளைபொருட்கள் உக்ரைன் நாட்டு துறைமுகங்களிலிருந்து இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

உக்ரைன் நாட்டைச் சார்ந்துள்ள பல ஆப்பிரிக்க நாடு களில் உணவு வழங்கலை உறுதிப்படுத்திட, பனிக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே, உக்ரைனிலிருந்து உணவு தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்திட ஐ.நா.சபை முயன்று வருவதாக பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்ரோஸ் கூறியுள்ளார்.

## தேசிய விவசாயிகள் கோரிக்கை நாளான செப்டம்பர் 1ல்

# டார்ச்லைட் ஒளிவீச்சில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்




**அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் வழிகாட்டல் படி செப் 1 அன்று தமிழ்நாடு முழுவதும் மாவட்ட, ஒன்றிய நகர தலைநகரங்களில் முன்னிரவு நேரத்தில் டார்ச் லைட்ஒளி வீச்சில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 76 மையங்களில் எழுச்சியுடன் நடைபெற்றதில் 5000க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்குகொண்டனர். பல மையங்களில் கோரிக்கை சங்க பதாகைகளை தாங்கி ஏர்கலப்பை கொடிகளுடன் கோரிக்கை முழக்கமிட்டனர்.**

**விருதுநகர் :** வத்திராயிருப்பில் டார்ச்லைட் ஏந்தி போராட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன் தலைமை வகித்தார். சிபிஐ மாநில குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வட்ட செயலாளர் கோவிந்தன், திருவில்லிபுத்தூர் ஒன்றிய செயலாளர் பலவேசம் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

**தஞ்சை:** தஞ்சாவூரில் ரயிலடி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தஞ்சை மாவட்ட தலைவர் வீரமோகன் தலைமை வகித்தார். ஒன்றிய விவசாய சங்க நிர்வாகிகள் ஆர். கே.செல்வகுமார், ராமலிங்கம், கணபதி, ஆர்.பிரபாகரன், ஜி.ஜார்ஜ்துரை, ஏஐடியூசி மாவட்ட துணை செயலாளர் துரை. மதிவாணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சீர்காழி:** சீர்காழி பழைய பஸ் நிலையம் அருகில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விவசாய சங்க ஒன்றிய செயலாளர் வரதராஜன் தலைமை தாங்கினார். ஒன்றிய தலைவர் கலியமூர்த்தி, சிபிஐ ஒன்றிய செயலாளர் நீதி சோழன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சீனிவாசன், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலாளர் வீரராஜ் ஆகியோர் மத்திய, மாநில அரசை கண்டித்து கண்டன உரையாற்றினர்.

கட்சி நிர்வாகிகள் பிரபாகரன், ஜெயக்குமார், இந்திரா காந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கொள்ளிடத்தில் கே.எஸ்.சிவராமன் தலைமையிலும், ஒன்றிய செயலாளர் ஜெயசக்திவேல் முன்னிலையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

செம்பனார்கோயிலில் முருகன், ராதாகிருஷ்ணன் எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும், குத்தாலத்தில் கே.ராமன் ஏஐடியுசி மாவட்ட செயலாளர், எஸ்.சி.கணபதி மாவட்ட நிர்வாக குழு, ஏங்கல்ஸ் ஒன்றிய பொறுப்பு செயலாளர் ஆகியோரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

**மதுரை :** தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்ட குழு சார்பில் மதுரை சமயநல்லூர் பேருந்து நிறுத்தம் அருகே விவசாயிகள் செல்போன் மூலம் டார்ச் லைட் ஒளிவீச்சு ஆர்ப்பாட்டம் நடத்தினர். மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணன் தலைமை தாங்கினார். விவசாயிகள் சங்க மாவட்ட நிர்வாகி இரவிவர்மா முன்னிலை வகித்தார். வி.தொ.ச. மா.செ. ஜோதி ராமலிங்கம், கள்ளிக்குடி த.வி.ச பொறுப்பாளர் தனுஷ்கோடி, வாடிப்பட்டி த.வி.ச.செயலாளர் தவமணி, பேரையூர் செயலாளர் செல்லவேல், சமயநல்லூர் மேற்கு ஒன்றிய குழு பெத்தனசாமி ஆகியோர் கோரிக்கை விளக்கவுரை ஆற்றினர். வி.ச. மாவட்டச் செயலாளர் சந்தனம் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து பேசினார். இதில், பவர்கவுஸ் காட்டுராஜா, கிருஷ்ணன் உள்பட பலர்




கலந்து கொண்டனர்.

**சிதம்பரம்:** சிதம்பரம் நகர் பேருந்து நிறுத்தம் அருகில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் வி.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் டார்ச் லைட் ஒளிவீச்சில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் எஸ்.எம். இராமையா முன்னிலை வகித்தார். வி.ச. மாநில துணைத் தலைவர் நல்லையா ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து உரையாற்றினார். வெள்ளைச்சாமி, சுப்புதுரை, அசோக், சோலையப்பன், ரவி ,விக்னேஷ், முனியசாமி, கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் கொண்டனர்.

**மணப்பாறை:** திருச்சி மாவட்டம், மணப்பாறையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவகம் முன்பு ஒன்றிய தலைவர் தங்கராசு தலைமையில் மாவட்ட பொருளாளர் பழனிசாமி, சி.பி.ஐ நகர செயலாளர் ஜனசக்தி உசேன், மாவட்ட குழு உறுப்பினர்கள் சௌக்கத்அலி, நல்லுச்சாமி உட்பட நிர்வாகிகள் கைபேசியில் ஒளி வீசி கண்டன முழக்கமிட்டனர்.

உப்பிலியபுரம் ஒன்றியம், கொப்பம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் ஒன்றிய தலைவர் கி.கோவிந்தராஜ் தலைமையில், ஒன்றிய செயலாளர் மு.சரவணன், ஒன்றிய பொருளாளர் ந.அருண்மொழிவர்மன், மாவட்ட துணை செயலாளர் தளுகை கோ.ரமேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் கைபேசியில் ஒளி வீசி கண்டன முழக்கமிட்டனர்.

திருவெறும்பூர் ஒன்றியம் வாழவந்தான் கோட்டையில் ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன் தலைமையில் சிபிஐ ஒன்றியக்குழு செல்வராஜ், பழனிச்சாமி, சிவசங்கரன், முகமது அலி, டிக்சன், பாலகிருஷ்ணன், அர்ச்சுனன் உட்பட நிர்வாகிகள் கைபேசியில் ஒளி வீசி கண்டன முழக்கமிட்டனர்.

லால்குடி பேருந்து நிலையம் அருகில் உள்ள ரவுண்டானாவில் மணிகண்டன் தலைமையில் பழனிராஜ், சீனுவாசன் உட்பட நிர்வாகிகள் கைபேசியில் ஒளி வீசி கண்டன முழக்கமிட்டனர்.

தொட்டியம் வாணரப்பட்டரை கார்னரில் நடராஜன் தலைமையில் வி தொ.ச. மாவட்ட செயலாளர் கணேசன், சதீஷ்குமார், ஆத்மானந்தன் உட்பட நிர்வாகிகள் மொழுகுவர்த்தி ஏந்தி கண்டன முழக்கமிட்டனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் ஏ.மூர்த்தி தலைமையில் டார்ச் லைட் ஒளிவீச்சில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் வெங்கடேசன் மற்றும் டி.என்.ஆனந்தன், கே. கார்த்திகேயன், எம்.காவேரி, ரேணுகா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**செங்கல்பட்டு** :செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஒன்றியத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் சேகுவேரா தாஸ் தலைமையில் டார்ச் லைட் ஒளி வீச்சில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் செ.இன்பராஜ், கீ.கதிர்வேல், பா.விஜய் மற்றும் முன்னணி விவசாயிகள் சங்க தோழர்கள் கலந்து கொண்டனர்.

**தென்காசி:** தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பாக நடைபெற்ற மின்னொளி ஆர்ப்பாட்டத்தில் எம்.எஸ்.கிட்டப்பா, எஸ்.வேலாயுதம், எஸ்.ஆழ்வார், ஏ.சம்சுதீன், ஏ.சாமி, எஸ்.மாரியப்பன், எஸ்.சுந்தர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். சிவகிரி காந்தி சிலை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பி.பாலசுப்பிரமணியன், வி.ராஜேந்திரன், அருணாசலம், கருப்பையா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். கீழ ஆம்பூர் நகரி மைய பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் எஸ்.ஜீவா, ஆர்.ஈஸ்வரன், ஏ.பரமசிவன், அரிகரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து தமிழகம் முழுவதும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் டார்ச் லைட்ஒளி வீச்சில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

செப் 2 அன்று பிரதமர் மற்றும் முதல்வருக்கு அனுப்ப வேண்டிய கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர்களிடம் மாவட்ட நிர்வாகிகள் நேரில் சென்று கொடுத்து அனுப்பி வைக்க கேட்டுக் கொண்டனர். கீழ் கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### கோரிக்கைகள்

- திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையில் உள்ள தமிழ் நாடு அரசின் தேர்தல் கால வாக்குறுதியான நெல்விலை குவிண்டால் ரூ.2500 மற்றும் 9.5 சத்து பிழிதிறன் உள்ள கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4000 கொடுப்பதாக கூறியதை உடனடியாக நடப்பு கரீப் பருவத்திலேயே அமல்படுத்திட வேண்டும்.
- ஒன்றிய அரசு மீண்டும் மின்சார சட்ட திருத்த மசோதா 2022 ஐ நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து நிலை குழுவுக்கு அனுப்பி உள்ளதை அறிமுக நிலையிலேயே திரும்பப் பெற வேண்டும்.
- 13 மாத காலம் போராடிய விவசாயிகள் போராட்ட குழு விடம் ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ள சட்ட பூர்வமான குறைந்தபட்ச ஆதாரவிலை உள்ளிட்ட அனைத்து கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்றிட வேண்டும்.
- கோவில், மடம், அறக்கட்டளை, வக்போர்டு ஆகிய வற்றுக்கு சொந்தமான இடங்களில் சாகுபடி செய்து வரும் குத்தகை விவசாயிகளின், இயற்கை இடர்பாடு காலத் திற்கான குத்தகையை தள்ளுபடி செய்திடவும், வருவாய் நீதிமன்றங்களை மூடிடவேண்டும்.
- தேங்காய்களின் விலை சரிந்து விட்டதால் கொப்பரை கிலோ ரூ.150 எனவும், உரி தேங்காய்கள் கிலோ ரூ.50 எனவும் விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்திட வேண்டும்.
- கடந்த ஆண்டு சம்பா மற்றும் தாளடி நெல் பயிருக்கான காப்பீடு திட்ட இழப்பீட்டை அறிவித்து விவசாயிகளுக்கு உடன் வழங்கிட வேண்டும்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023 WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 10.09.2022 at Egmore RMS 1 / Patrika Channel. Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## 2003-க்கு பின்பு பணியில் சேர்ந்தவர்களை பழைய ஓய்வூதிய திட்டத்தில் இணைத்திட வேண்டும்

## தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர்கள் சம்மேளன

# 15வது மாநாடு அறைகூவல்




**தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர்கள் சம்மேளனத்தின் 15 வது மாநில மாநாடு செப்டம்பர் 2, 3, 4 தேதிகளில் திருச்சியில் நடைபெற்றது.**

செப்டம்பர் 2ம் தேதி மாநாட்டின் முதல் நிகழ்வாக திருச்சி பெரிய மிளகுபாறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாலை 5 மணிக்கு ஏஐடியூசி இணைப்புச் சங்கங்கள் சார்பில் சம்மேளன செயலாளர் எம்.நாராயண சிங் தலைமையில் நடைபெற்ற பேரணியை ஏஐடியுசி மாநில செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்.பெரியசாமி துவக்கி வைத்தார்.

திருச்சி, கரூர், திண்டுக்கல், கும்பகோணம், நாகப்பட்டினம், காரைக்குடி, புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி, விருதுநகர், திருப்பூர், கோயம்புத்தூர், ஊட்டி, ஈரோடு, சேலம், தர்மபுரி, சென்னை மாநகர், திருவண்ணாமலை அரசு விரைவு போக்குவரத்து கழகங்கள் சார்பில் ஏஐடியூசி தொழிலாளர்கள் மண்டல வாரியாக சீருடை அணிந்து பதாகைகளுடன் கோரிக்கை முழக்கமிட்டு பேரணியில் சென்றனர்.

பேரணியில் சம்மேளனத்தின் தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆறுமுகம், பொதுச் செயலாளர் ஆர். ஆறுமுகம், ஏஐடியூசி மாநிலசெயலாளர் எஸ்.காசி விஸ்வநாதன், மற்றும் சம்மேளன நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### பொது மாநாடு

அன்று மாலை 7 மணிக்கு பொது மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு சம்மேளனத்தின் தலைவர், எம்.ஆறுமுகம் தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் மாநாட்டினை வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.

### இரா.முத்தரசன் உரை

“தனியாரிடமிருந்து பேருந்துகள் அரசுடமையாக்கப்பட்ட பிறகு கிராமப்புறங்களுக்கு போக்குவரத்து வசதி கிடைத்தது. தற்போது தமிழ்நாடு முழுவதும் 19,290 க்கு மேற்பட்ட பேருந்துகள் நகர்ப்புற, கிராமப்புற வழித்தடங்களில் போக்குவரத்து வசதி உள்ளது என்றால் பொதுத்துறை நிறுவனமாக மாற்றப்பட்டதாலேயே இது சாத்தியமானது. போக்குவரத்து கழகங்களில் ஒரு லட்சத்து 20ஆயிரம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போது போக்குவரத்து கழகங்கள் நலிவடைந்துள்ளது, கடனில் சிக்கித் தவிக்கிறது, கடனுக்கு கட்டும் வட்டியை கட்டவே வருவாய் சரியாகி விடுகிறது. போக்குவரத்து கழகங்களை லாபகரமாக இயக்க முடியும். அதற்கு பேருந்துகளுக்கு தேவையான அடிச்சட்டம்(சேசிஸ்)டயர், டியூப், உதிரி பாகங்கள், பேருந்து வடிவமைக்கும் பணிகள் அனைத்தும் தனியாருக்கு கொடுக்காமல், பொதுத்துறை நிறுவனமே ஏற்க வேண்டும்.

சுங்கச்சாவடிகளில் அரசு பேருந்துக்கு கட்டண வசூலிப்பதை கைவிட வேண்டும், மகளிர் மற்றும் மாணவர் இலவச கட்டணம் உள்ளிட்டவற்றுக்கான நிதியை போக்குவரத்து கழகங்களுக்கு உடனுக்குடன் வழங்க வேண்டும்,

போக்குவரத்து கழகங்களுக்கான நிதிநிலை அறிக்கையில் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும், விழாக்கால நாட்களில் ஆம்னி பேருந்துகள் அதிக கட்டணம்வசூல்செய்கிறது, எனவே ஆம்னி பேருந்துகளையும் பொதுமக்களுக்காக அரசு ஏற்று நடத்த வேண்டும்.

பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்குவதற்கு பதிலாக, விற்பதையும் மூடுவதையும் பாஜக அரசு கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. பாஜக அரசை ஆதரிக்கும் அதிமுக அரசு தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதற்காகவே தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை தமிழகத்தில் கொண்டு வந்துள்ளோம்.

எனவே ஆட்சி பொறுப்பேற்றுள்ள திமுக அரசு தொழிலாளர்கள், பெண்கள், உழைக்கும் மக்கள், விவசாயிகளுக்கு ஆதரவாக செயல்படும் என எதிர்பார்க்கிறோம். குறிப்பாக தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு எதிராக மத்திய அரசு கொண்டுவந்துள்ள சட்ட திருத்தங்களை தமிழ்நாட்டில் அமல்படுத்த மாட்டோம் என பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்,

போக்குவரத்து தொழிலாளர்களுக்கான நடந்து முடிந்துள்ள ஊதிய ஒப்பந்தத்தில் ஒப்பந்த காலம் நான்கு ஆண்டுகளை என்பதை மூன்று ஆண்டுகளாக மாற்றிட தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் காலத்தில் திமுக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறது, மீதமுள்ள வாக்குறுதிகளையும் விரைந்து நிறைவேற்ற வேண்டுமென தனது உரையில் இரா.முத்தரசன் தெரிவித்தார்.

தமிழ்நாடு ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி, சம்மேளன பொதுச் செயலாளர் ரா.ஆறுமுகம், துணை பொதுச் செயலாளர் கே.எம்.செல்வராஜ் ஆகியோர் பொது மாநாட்டில் கருத்துரையாற்றினர். முடிவில் திருச்சி மண்டல தலைவர் கே.நேருதுரை நன்றி கூறினார்.

### பிரதிநிதிகள் மாநாடு

மாநாட்டின் இரண்டாம் நாள் செப்டம்பர் 3ஆம் தேதி பிரதிநிதிகள் மாநாடு ஜி.மணியாச்சாரி பி.ராமராவ் நினைவரங்கத்தில் சம்மேளன தலைவர் எம். ஆறுமுகம் தலைமையில் துவங்கியது. மாநாட்டின் முதல் நிகழ்வாக 15 மாநாட்டு கொடிக்கம்பங்களில் கொடியேற்றப்பட்டது. அதை தொடர்ந்து தியாகிகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பிரநிதிகள் மாநாட்டின் தலைமை குழுவாக துரை.மதிவாணன், வை.மணவழகன், ஜெ.ஸ்ரீதரன் ஆகியோர் செயல்பட்டனர்.

பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி மாநாட்டினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

அஞ்சலி தீர்மானத்தை துணைத்தலைவர் துரை.மதிவாணன் வாசித்தார். வரவேற்பு குழு செயலாளர் எம்.சுப்பிரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

சம்மேளன பொதுச் செயலாளர் ரா.ஆறுமுகம் செயல்பாட்டு அறிக்கையை முன்மொழிந்தார், அமைப்பு நிலை அறிக்கையை துணை பொதுச் செயலாளர் கே.எம்.செல்வராஜ் முன்வைத்தார். ஓய்வூதிய அமைப்பு சம்பந்தமாக ஆர்.ராஜேந்திரன் அறிக்கை சமர்பித்தார். அறிக்கைகளின் மீது 24 பிரதிநிதிகள் பங்கேற்று கருத்துகளை தெரிவித்தனர்.

### பலூன் நாடகம்

அன்று மாலை பரீக்ஷ நாடக குழுவினரின் ஞானியின் பலூன் நாடகம் நடைபெற்றது.

### கருத்தரங்கம்

“பயணிகள் போக்குவரத்து எதிர்காலம்“ கருத்தரங்கம் நடைபெற்றது. தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி தலைமை வகித்தார்.

போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கில் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் மாநில பொருளாளர் கி.நடராஜன், எச்.எம்.எஸ் மாநில தலைவர் சுப்பிரமணியம் பிள்ளை, அகில இந்திய படைக்கலன் பாதுகாப்பு தொழிலாளர் சங்கத்துடைய பொதுச் செயலாளர் சி.ஸ்ரீகுமார், சி. ஐ.டி.யு. மாநில துணை செயலாளர் தயானந்தன், எம்.எல்.எப். பேரவை தலைவர் ராஜமாணிக்கம், பணியாளர் சம்மேளனத்தின் மாநில செயலாளர் பத்மநாபன், திராவிடதொழிற்சங்க தலைவர் அ.மோகன் ஆகியோர் உரையாற்றினர். சம்மேளன பொதுச்செயலாளர் ரா.ஆறுமுகம் நன்றி கூறினார்.

செப்டம்பர் 4 அன்று வேலை அறிக்கையின் மீதான விவாத தொகுப்புரை, அமைப்புநிலை அறிக்கை மீதான தொகுப்புரை ஒருமனதாக ஏற்கப்பட்டது. வரவு, செலவு அறிக்கையை பொருளாளர் என்.உலகநாதன் முன் வைத்தார். வரவு செலவு அறிக்கை ஒருமனதாக ஏற்கப்பட்டது. தீர்மானங்களை தீர்மான குழு தோழர்கள் எம்.நாராயணசிங், எம்.சண்முகம், எஸ்.சையது இப்ராஹீம், பி.பாஸ்கர், என். முருகராஜ் ஆகியோர் வாசித்தனர். தகுதி ஆய்வு குழு படிவத்தினை ஏ.செல்வராஜ், டி.ராஜேந்திரன், இ.சுப்பையா சூரிய குமார் ஆகியோர் தொகுத்து முன் வைத்தனர்.

மாநாட்டில் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் த.அறம், சம்மேளனத்தின் மாநில செயலாளர்கள் சி.சந்திரகுமார் எம்.ராதாகிருஷ்ணன், எஸ்.காசிவிஸ்வநாதன், திருச்சி மாவட்ட ஏஐடியூசி தலைவர் வெ.நடராஜா, தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் த.இந்திரஜித், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, திருச்சி புறநகர் மாவட்ட செயலாளர் எஸ்.ராஜ்குமார், அனைத்திந்திய மாணவர் பெருமன்ற திருச்சி மாவட்ட செயலாளர் இப்ராஹீம் ஆகியோர் மாநாட்டினை வாழ்த்திப் பேசினர்.

மாநாட்டில் 72 புதிய சம்மேளன குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். 25 சம்மேளன நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச்செயலாளர் டி.எம்.மூர்த்தி மூன்று நாள் மாநாட்டினையும், தேர்வு செய்யப்பட்டுள்ள சம்மேளன குழு உறுப்பினர்களையும், சம்மேளன நிர்வாகிகளையும் வாழ்த்தி நிறைவுரை ஆற்றினார். மாநாட்டு நிகழ்வுகளை மினிட்ஸ் குழு தோழர்கள் என் கோபிநாதன், பி.ராஜேந்திரன் ஆகியோர் குறிப்பேட்டில் பதிவு செய்தனர். முடிவில் திருச்சி மண்டல துணை பொதுச் செயலாளர் டி.வி.செல்வராஜ் மாநாட்டில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றியுரை கூறினார்.

### புதிய நிர்வாகிகள் தேர்வு:

தலைவர்: எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ.

துணைத் தலைவர்கள்: துரை.மதிவாணன், எஸ். செய்யது இப்ராஹிம், எஸ்.பாண்டியன், ஆர். ராஜேந்திரன், எஸ்.காசி விஸ்வநாதன், எம். ராதாகிருஷ்ணன், ஜெ.ஸ்ரீதரன், எம்.ஐயப்பன், எஸ். ரவி.

பொதுச் செயலாளர்: ரா.ஆறுமுகம்

துணைப்பொதுச் செயலாளர்கள்: கே. எம்.செல்வராஜ், எம்.நாராயண சிங், பி.பாஸ்கர், என்.முருகராஜ், எம்.சுப்பிரமணியன்.

செயலாளர்கள்: எம்.சண்முகம், என்.உலகநாதன், என்.கோபிநாதன், வி.குப்புரங்கன், இ.சுப்பையா சூரியகுமார், ஆர்.திருமுருகன், டி.எம்.கணேசன், எஸ்.சுப்பிரமணியன்.

பொருளாளர்: கே.நேருதுரை

மற்றும் 47 பேர் கொண்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

### தீர்மானங்கள்

அரசின் சமூக நலத் திட்டங்களை செயல்படுத்தும் போக்குவரத்துக் கழகங்களின் வரவுசெலவு பற்றாக்குறையை ஈடுசெய்ய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். கடந்த ஆட்சி காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகள் இயக்கிட வேண்டும். தனியாருக்கு சாதகமாக வழங்கப்பட்ட வழித்தடங்களையும், விட்டுக் கொடுக்கப்பட்ட அதிக பயணிகள் ஏறும் பேருந்து புறப்படும் நேரத்தையும் மீட்டெடுக்க வேண்டும். பணியாளர் பற்றாக்குறையால் விடுப்பு வார ஓய்வு மறுப்பு கூடுதல் பணி ஆகிய அவலநிலை போக்கிட காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும்.

2003க்கு பின்பு பணியில் சேர்ந்தவர்களை பழைய ஓய்வூதிய திட்டத்தில் இணைத்திட வேண்டும். 2020 மே மாதம் முதல் ஒய்வு விருப்ப ஓய்வு இறந்துபோன தொழிலாளர்களின் பண பலன்கள் வழங்கிட வேண்டும். 2015 நவம்பர் முதல் ஓய்வூதியர்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வு வழங்கிட வேண்டும். மருத்துவ காப்பீடு வசதி ஏற்படுத்த வேண்டும். கல்வித் தகுதிக்கு ஏற்ப வாரிசு பணியில் ஓட்டுனர் நடத்துனர் மட்டுமல்லாது இதர பதவிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்கிட வேண்டும்.

பயணிகளிடம் கொள்ளை அடிக்கும் ஆம்னி பேருந்துகளை நாட்டுடைமையாக்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.